

அனர்த்த முகாமைத்துவ நிலையம்

வருடாந்த அறிக்கை - 2014

அனர்த்த முகாமைத்துவ நிலையம்.



முகவரி

வித்யா மாவத்தை
கொழும்பு 07

வெப் தளம்,

www.dmc.gov.lk

மின்னஞ்சல்,

info@dmc.gov.lk

அவசர நடவடிக்கை அழைப்பு ,

0112136222 / 2670002

வருடாந்த அறிக்கை – 2014

1	அறிமுகம்		1
	1.1	அனர்த்த முகாமைத்துவத்துக்கான தேசிய சபை	1
	1.2	அனர்த்த முகாமைத்துவ விடயத்தின் கீழ் வரும் இடர்கள்	3
2	அனர்த்த முகாமைத்துவ நிலையம் பற்றி சுருக்க விபரம்		3
	2.1	நோக்குஇ பணிக்கூறு மற்றும் நோக்கங்கள்	4
	2.2	அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் தொழிற்பாடுகள்	5
	2.3	அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் நிறுவனசார் கட்டமைப்பு	6
	2.4	அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் ஆளணி நிலைமைகளும் ஆட்சேர்ப்பு பதவியினரும்	6
		2.4.1. பதவியினரின் ஆட்சேர்ப்பு	6
		2.4.2. மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்புப் பிரிவுகள் (னுனுஆஉளருள)	7
	2.5	மாவட்ட பணிப்பாளர் நாயகத்தின் கருத்துரைகள்	8
		2.5.1. அனர்த்தங்களின் தாக்கங்கள் பற்றிய பகுப்பாய்வு - 2014	8
		2.5.2 சவால்கள்	11
		2.5.3 2014 ஆம் ஆண்டுக்கான சிபாரிசுகள்	12
3	தேசிய மட்டத்திலான பிரதான செயற்பாடுகள்		13
	3.1	அனர்த்த முகாமைத்துவ சட்டத்தின் திருத்தம்	13
	3.2	இலங்கை தேசிய அனர்த்த முகாமைத்துவக் கொள்கை	13
	3.3	தேசிய அனர்த்த முகாமைத்துவத் திட்டம் (தேஅமுதி)	13
	3.4	தேசிய அவசர தொழிற்பாடுகள் திட்டம் *(தேஅதொதி)*	13
	3.5	நிறுவனஞ்சார் அனர்த்த முகாமைத்துவத் திட்டம்	14
	3.6	கூட்டாண்மைத் திட்டம்	14
	3.7	இடைக்கால முகாமைத்துவக் குழு (இ.ம.கு)	14
	3.8	கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு	14
	3.9	"தேசத்திற்கு மகுடம்" தேசிய கண்காட்சி 2014	15
	3.10	தேசிய பாதுகாப்பு தினம் - 2014	17
	3.11	தேசிய அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு குழுக்கள் (னுஆஉளஉள)	18
	3.12	அவசர பதிலளிப்புக் குழு	18
	3.13	அனர்த்த முகாமைத்துவக் குழுவின் இணையத்தளம் (றறற.னஅஉ.பழஎ.டம)	19
	3.14	அனர்த்த தரவுத் தளம் (றறற.னநளளைநவெயச.டம)	19
4	தணிப்பு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவு		20
	4.1	பின்னனி	20
	4.2	மாவட்ட மட்டத்திலான அனர்த்த தணிப்பு	20
	4.3	2014 ஆம் ஆண்டுக்கு அனர்த்த தணிப்புக்கு ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடு	22
	4.4	அவசர வெள்ளத் தணிப்பு	25
		4.4.1 பானந்துறையில் வெள்ளத் தணிப்பு	25
		4.4.2 தம்புள்ளையில் வெள்ளத் தணிப்பு	27
		4.4.3 யாழ்ப்பாணத்தில் வெள்ளத்தைத் தணித்தல்	28
	4.5	அபிவிருத்தி செயன்முறையின் தேசிய நீரோட்டத்தில் அனர்த்த அபாய தணிப்பை ஒருங்கிணைத்தல்	29

	4.6	சர்வதேச நிறுவனங்களுடன் இணைந்து அமுல்படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள்	30
5	விழிப்புணர்வுப் பிரிவு		31
	5.1	அறிமுகம்	31
	5.2	2014 ஆம் ஆண்டுக்கான நிதிகளின் ஒதுக்கீடு	31
	5.3	தேசிய மட்ட நிகழ்ச்சித் திட்டங்கள்	33
		5.3.1 தேசிய மட்ட திறன் கட்டியெழுப்புகை அனர்த்த முகாமைத்துவ நிலைய பதவியினருக்கானது	33
		5.3.2 பங்குதாரர்களின் திறன்களை கட்டியெழுப்புதல்	34
	5.4	உப தேசிய மட்ட நிகழ்ச்சித் திட்டங்கள்	34
		5.4.1 உப தேசிய மட்டங்களில் பங்குதாரர்களின் திறன்களைக் கட்டியெழுப்புதல்	34
		5.4.2 உள்ளூர் அதிகாரசபைகளின் திறன்களைக் கட்டியெழுப்புதல்	35
		5.4.3 சம்பவ கட்டளை முறைமை பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்	35
		5.4.4 மதசார் சமுகத்திற்கான திறன் கட்டியெழுப்புகை	36
		5.4.5 அனர்த்த நெருக்கடி கூடிய பிரதேசங்களில் பெண்களின் திறன்களைக் கட்டியெழுப்புதல்	37
	5.5	பாடசாலை ஆசியரியர் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்	37
	5.6	அனர்த்த முகாமைத்துவ கிராமக் குழுக்களுக்கான திறன் கட்டியெழுப்புகை	37
	5.7	தொண்டர்க் குழுக்களின் தாபிதம்	38
	5.8	மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்புக் குழு அங்கத்தவர்களின் திறன் கட்டியெழுப்புகை	38
	5.9	தேசிய மற்றும் உள்ளூர் கண்காட்சிகளினூடாக பொதுமக்கள் விழிப்புணர்வு	39
	5.10	நடமாடும் வாகனங்களினூடான பொதுமக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சித்	39
	5.11	விழிப்புணர்வு பொருட்களை அச்சிடுதல்	40
	5.12	வெளிநாட்டு பயிற்சியும் செயலமர்வுகளும்	40
6	தயார்நிலைத் திட்டமிடல் பிரிவு		41
	6.1	அறிமுகம்	41
	6.2	கிராம சேவகர் மட்டத்தில் நடத்தப்பட்ட அபாய எச்சரிக்கை நிகழ்ச்சித் திட்டங்கள்	42
	6.3	பாரிய அணைகளோடு தொடர்புடைய அனர்த்தங்களுக்கான தயார்நிலை செயற்பாடுகள்	45
	6.4	மாவட்ட அனர்த்த முகாமைத் திட்டங்களின் அபிவிருத்தி	46
	6.5	பிரதேச அனர்த்த முகாமைத்துவத் திட்டங்கள்	47
	6.6	கிராம சேவகர் மட்ட சமுக அனர்த்த முகாமைத்திட்டங்களின் உறுதி (னுஆீள)	49
	6.7	நிரந்தர நகர நிகழ்ச்சித்திட்டம்	50
	6.8	நாட்டில் நீரில் மூழ்குதல் காரணமாக ஏற்படும் மரணங்களைத் தடுத்தல்	50
	6.9	தயார்நிலை திட்டமிடல் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட விசேட கருத்திட்டங்கள்	51
7	அவசர தொழிற்பாடுகள் நிலையம்		51

7.1	அறிமுகம்	51
7.2	பிரதான அனர்த்தங்களுக்கான அவசர பதிலளிப்பு	52
	7.2.1 வரட்சியினால் பாதிக்கப்பட்ட மக்கள்	52
	7.2.2 வெள்ளத்தின்போது பாதிக்கப்படுகின்ற மக்கள்	52
	7.2.3 மண்சரிவும் வெட்டுதலும்	53
	7.2.4 பலமான காற்று	53
	7.2.5 வெள்ள மற்றும் ஏனைய அனர்த்த பதிலளிப்பு	54
	7.2.6 காற்று மற்றும் நகரத்தீக்கான அவசர பதிலளிப்பு	54
	7.2.7 மின்னல் தாக்கம்	54
7.3	2014 ஆம் ஆண்டில் இடம்பெற்ற அனர்த்த சம்பவங்களும் அதன் மூலம் ஏற்பட்ட பாதிப்புக்களும்	55
7.4	அவசர தொழிற்பாட்டு நிலையத்தின் ஏனைய அவசர தயார்நிலை செயற்பாடுகள்	55
	7.4.1 ஆரம்ப முன்னெச்சரிக்கை பரப்புதல்கள்	55
	7.4.2 அரசாங்கங்க நிறுவனங்களுக்கடையிலான வலைப்பின்னல்	56
	7.4.3 இலங்கை அனர்த்த மூல வல வலைப்பின்னல் (ளுடுனுசுடு)	56
	7.4.4 சுனாமி வெளியேற்றல் முன்னெச்சரிக்கை அபாயங்கள்	56
	7.4.5 அழைப்பு நிலையங்கள்	57
	7.4.6 அனைத்து முன்னெச்சரிக்கை கோபுரங்களுக்குமான ஏர்கு அலைவரிசையூடாக குரல் செய்திகளை தாபித்தல்	58
	7.4.7 குறுஞ்செய்தி பரப்புகை பொறிமுறை	58
	7.4.8 அவசர பதிலளிப்புக் குழுக்கள	59
	7.4.9 டெங்கு ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டம்	59
	7.4.10 தேசிய அவசர தொழிற்பாடுகள் திட்டம்	59
	7.4.11 அனர்த்த முகாமைத்துவத்திற்கான சம்பவ கட்டளை முறைமை தொடர்பான இடைக்கால பயிற்சி பாடநெறி	60
	7.4.12 இலங்கையில் நகரங்களுக்கான அனர்த்த நிலையான நகர அபிவிருத்தி உபாய முறைகளின் முன்னெச்சரிக்கை திறன்களின் மேம்பாடு – 2 ஆம் கட்டம் (ருசேயுடீஐவுயுவு)	60
	7.4.13 வெளிநாட்டு நிதிகளுக்காக 2015 ஆம் ஆண்டுக்காக ஒதுக்கப்பட்ட செயற்பாடுகள் ரூபா மில்லியன் 11.4)	61
	7.4.14 இலங்கையில் கரையோர ஆபத்துக்கான முனைக்கு முனையான பல் ஆபத்து முன்னெச்சரிக்கை முறைமைகளின் திறன்களை மேம்படுத்துதல்	61
	7.4.15 கரையோர ஆபத்து முன்னெச்சரிக்கை மற்றும் பதிலளிப்பு கருவிகள் சர்வதேச பலப்படுத்தல்களை மேம்படுத்துதல் (2012-2014)	63
7.5	அவசர தொழிற்பாட்டு நிலையத்தினால் 2014 ஆம் ஆண்டு காலப்பிரிவில் நடாத்தப்பட்ட ஏனைய செயற்பாடுகள்	63
	7.5.1 அவசர தொழிற்பாட்டு நிலையங்களின் விஜயங்களும் பயிற்சிகளும்	63
8	நிதிசார் முன்னேற்றம் (2014 டிசெம்பர் 31)	64
9	கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை. – 2014 டிசம்பர் 31	99
10	கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை சம்பந்தமான விளக்கங்கள – 2014 டிசம்பர் 31	111

வருடாந்த அறிக்கை - 2014

1. அறிமுகம்

இலங்கையில் அனர்த்த முகாமைத்துவத்திற்கான முன்னணி முகவராண்மையாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் காணப்படுகின்றது. அது அனைத்து தொடர்புடைய பங்குதாரர்களின் பங்கேற்புடன் அனர்த்தங்களின் அபாயங்களைக் குறைப்பதற்கான தேசிய மற்றும் உப தேசிய மட்டங்களிலான நிகழ்ச்சித் திட்டங்களை ஒருங்கிணைத்து, அமுல்படுத்துவதற்கு பொறுப்பாகவுள்ளது.

அனர்த்த முகாமைத்துவ நிலையமானது 2005 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, இலங்கை அனர்த்த முகாமைத்துவ சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய தாபிக்கப்பட்டதோடு அனர்த்த முகாமைத்துவத்துக்கான தேசிய பேரவையின் (அமுதேபே)நிறைவேற்று முகவராண்மையாகவும் உள்ளது. தேசியப் பேரவையானது உபாயமுறை பணிப்புரைகளை வழங்குவதற்கும் தேசிய கொள்கைகளை வகுப்பதற்குமான ஆணையைக் கொண்டுள்ளதோடு, அனர்த்த முகாமைத்துவ அமைச்சு, அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் செயற்பாடுகளை வழிகாட்டி, நிருவகித்து வருகின்றது.


2005 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, சட்டமானது இலங்கையில் அனர்த்த அபாய தணிப்புக்களை (அஅத) முன்னெடுக்கும் சட்டகமொன்றாக மாறியதோடு, அனர்த்த முகாமைத்துவத்தை பூரணமாகவும் அனுசரணை அளிக்கப்பட்ட பொறிமுறையிலிருந்து கொள்கை நகர்வொன்றுக்கு இட்டுச் செல்வதாகவும் செயற்பாடுசார் அனுகுமுறைக்கு தீர்வளிப்பதாகவும் மாறியுள்ளது. இச் சட்டத்தின் நோக்கெல்லையின் கீழ் 21 ஆபத்துகள் பட்டியலிடப்பட்டுள்ளன.

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பிரதான செயற்பாடுகளாக அனர்த்த தணிப்பு, தயார்நிலை, பொதுமக்கள் விழிப்புணர்வு, வடுப்படத்தக்க மக்களுக்கான முன்னெச்சரிக்கை பரப்புகை, அவசர நடவடிக்கைகள், நிவாரணங்களை ஒருங்கிணைத்தல் மற்றும் ஏனைய பிரதான முகவராண்மையுடன் இணைந்து பின்னனர்த்த செயற்பாடுகளில் ஈடுபடுதல் என்பனவாகவுள்ளன. மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு அலகுகள் (மஅமுஒஅ) அனைத்து மாவட்டங்களிலும் உப தேசிய மட்டங்களில் அனர்த்த அபாய தணிப்பை மேற்கொள்வதற்கும் ஒருங்கிணைப்பதற்குமாக தாபிக்கப்பட்டுள்ளன.

1.1 அனர்த்த முகாமைத்துவத்திற்கான தேசிய பேரவை

அனர்த்த முகாமைத்துவத்துக்கான தேசியப் பேரவையானது 2005 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, அனர்த்த முகாமைத்துவ சட்டத்தினால் ஆணை வழங்கப்பட்டவாறு 2005 ஆம் ஆண்டு யூலை மாதம் தாபிக்கப்பட்டது. இது அனர்த்த முகாமைத்துவத்துக்கான அதிஉச்ச

சபையாக இருப்பதோடு, தலைவராக அதிமேதகு சனாதிபதியும் உப தலைவராக கௌரவ பிரதம அமைச்சரும் தலைமை தாங்கும் அமைச்சரவை மட்ட அமைப்பாக உள்ளது. சட்டத்தில் குறிப்பிடப்பட்ட அனர்த்த முகாமைத்துவ தேசிய பேரவையின் ஏனைய உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்ட விடயத்திற்கு பொறுப்பான அமைச்சர், மாகாண சபைகளின் முதலமைச்சர்கள் (முதலமைச்சர்கள் இல்லாதவிடத்து அத்தகைய மாகாண சபைகளின் ஆளுநர்கள்) மற்றும் எதிர்க்கட்சியின் ஐந்து உறுப்பினர்கள் ஆகியோரைக் கொண்டிருக்கும். தேசிய பேரவையின் கட்டமைப்பு உரு 1.1 இல் காட்டப்பட்டுள்ளது. அத்தோடு, அனர்த்த முகாமைத்துவ தேசிய பேரவை சனாதிபதியின் தலைமையில் 2012 மே மாதம் 11 ஆம் திகதி கூடியதோடு, அனர்த்த தணிப்பு செயற்பாடுகள், குறிப்பாக நாட்டில் அபிவிருத்தி திட்டமிடல், மண்சரிவு, வெள்ளம் போன்ற விடயங்களை கலந்துரையாடியது. இக்கூட்டத்தில் பல முக்கிய கொள்கை தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.



உரு 1.1 **அனர்த்த முகாமைத்துவ தேசிய பேரவை**

1.2 அனர்த்த முகாமைத்துவத்தின் நோக்கெல்லையின் கீழ் வருகின்ற ஆபத்துக்கள்

2005 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, சட்டத்திற்கமைவாக அனர்த்த முகாமைத்துவத்தின் கீழ் வருகின்ற ஆபத்துக்கள்:

- மண்சரிவு
- சூறாவளி
- வெள்ளம்
- வரட்சி
- கைத்தொழில் ஆபத்துக்கள்
- சுனாமி (பேரலை அனர்த்தம்)
- பூமியதிர்ச்சி
- வான்வெளி அனர்த்தம்
- கடல்சார் ஆபத்து
- நெருப்பு
- தொற்றுநோய்
- வெடிப்பு
- வான்வழித் தாக்குதல்
- சிவில் அல்லது உள்ளக கலவரம்
- இரசாயன விபத்து
- கதிர்வீச்சு அபாயம்
- உள்ளக கடல்கள் எண்ணெய் கசிவு உள்ளிட்ட எண்ணெய் கசிவு
- அணுசக்தி அனர்த்தம்
- நகர மற்றும் காட்டுத் தீ
- கரையோர மண்ணரிப்பு
- சுழற்காற்று, மின்வெட்டல் மற்றும் பாரிய இடி முழக்கம்

2. அனர்த்த முகாமைத்துவ நிலையம் பற்றி சுருக்க விபரம்

அனர்த்த முகாமைத்துவ நிலையமானது அதன் அதிஉயர் பதவியில் பணிப்பாளர் நாயகம் தலைமைவகித்து மற்றும் ஐந்து பிரிவுகளிலும் பணிப்பாளர்களைக் கொண்டும் தாபிக்கப்பட்டிருக்கின்றது. ஐந்து பிரிவுகளாக தணிப்பு, ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி, அவசர தொழிற்பாடுகள் மற்றும் ஆரம்ப எச்சரிக்கை பரப்புகை, தயார்நிலை திட்டமிடல், பொது மக்கள் விழிப்புணர்வு மற்றும் மனித வளங்கள், நிதி பிரிவு ஆகிய 5 பிரிவுகள் உள்ளன. மாவட்ட மட்டத்தில் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு அலகுகளும்(DDMCU) காணப்படுகின்றன. மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவுகளுக்குப் பொறுப்பாக உதவிப் பணிப்பாளர்கள் காணப்படுவதோடு இவர்கள் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவியாளர்களினால் ஒத்துழைப்புப் பெறுகின்றனர்.

2.1 நோக்கு, பணிக்கூறு மற்றும் நோக்கங்கள்

நோக்கு

இலங்கையில் பாதுகாப்பான சமுகங்களும் நிலையான அபிவிருத்தியும்.

பணிக்கூறு

சமுகங்களுக்கிடையே பாதுகாப்பு கலாசாரமொன்றை உருவாக்குதலும் தேசம் என்ற வகையில் மொத்தமாக இயற்கை, தொழில்நுட்ப மற்றும் மனிதன் உருவாக்கிய அனர்த்த அபாயங்களின் முறையான முகாமைத்துவம்

நோக்கங்கள்

நாடளாவிய ரீதியில் காணப்படுகின்ற நிருவாக கட்டமைப்புக்களை உள்ளடக்கியதான அமைச்சுக்கள், திணைக்களங்கள், பொதுக் கூட்டுத்தாபனங்கள், மாகாண சபைகள் , உள்ளூராட்சி மன்றங்கள், மாவட்ட, பிரதேச மற்றும் கிராமிய சேவையாளர் பிரிவுகள் நிருவாகங்களை நாட்டில் அனர்த்த முகாமைத்துவத்துடன் தொடர்புடைய அனைத்து செயற்பாடுகளையும் ஒருங்கிணைத்து அமுல்படுத்தி கண்காணிப்பதாகும்.

2.2 அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் தொழிற்பாடுகள்


அதன் பிரகாரம் பின்வரும் தொழிற்பாடுகள் அனர்த்த முகாமைத்துவ நிலையத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன:

- தேசிய அனர்த்த முகாமைத்துவ திட்டத்தை வடிவமைத்தலும் தேசிய அவசர தொழிற்பாடுகள் திட்டம் என்பவற்றை தேசிய கொள்கையின் அடிப்படையில் வடிவமைத்தல்
- ஆபத்து வரைபடமிடலும் அனர்த்த மதிப்பீடும் பயிற்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை ஒருங்கிணைத்து நடாத்துதல்
- தயார் நிலைத் திட்டங்களை விருத்தி செய்வதற்கு அரசாங்க முகவராண்மைக்கு உதவுதல் உள்ளிட்ட அனர்த்தங்களுக்கான பதிலளிப்புக்கு தயாராக இருத்தல்
- ஆரம்ப முன்னெச்சரிக்கையும் பரப்புகையும்
- தேடுதல் மற்றும் மீட்டல் தொழிற்பாடுகளின் அவசர தொழிற்பாட்டு முகாமைத்துவமும் ஒருங்கிணைப்பும்
- நிவாரணம் உள்ளிட்ட பின் அனர்த்த செயற்பாடுகளின் ஒருங்கிணைப்பு
- அனர்த்த தணிப்பு
- ஆராய்ச்சியும் அபிவிருத்தியும்

- அபிவிருத்தியோடு அனர்த்த தணிப்பினை தேசிய மயப்படுத்தல்
- காலநிலை மாற்ற ஏற்றுக்கொள்கை நிகழ்ச்சித் திட்டங்களின் ஒருங்கிணைப்பு
- பொறுப்புக்களை உரிய நேரத்தில் நிறைவேற்றுவதற்கான அனர்த்த நிவாரண துறையுடன் தொடர்புடைய அமைச்சுக்கள், அரசாங்க அதிகாரசபைகள், முகவராண்மைகள், தனியார் துறை முகவராண்மைகள், அரச சார்பற்ற நிறுவனங்கள், சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் ஏனைய தொடர்புடைய முகவராண்மைகளை ஒருங்கிணைத்தல்
- அனர்த்த தணிப்பு பதிலளிப்பு மற்றும் மீட்புக்காக வெளிநாட்டு உதவியளிக்கப்பட்ட கருத்திட்டங்களை முன்னெடுத்தலும் ஒருங்கிணைத்தலும்.

2.3 அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் நிறுவனசார் கட்டமைப்பு

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பல்வேறு செயற்பாடுகளை கவனத்திற் கொண்டு உரு 2.1 இல் காட்டப்பட்டவாறு நிறுவனசார் கட்டமைப்பு உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது.



உரு 2.1 **அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் நிறுவனசார் கட்டமைப்பு**

2.4 அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் ஆளணி நிலைமைகளும் ஆட்சேர்ப்பு பதவியினரும்

2.4.1 பதவியினரின் ஆட்சேர்ப்பு

பதவியினரின் ஆட்சேர்ப்பானது அனர்த்த முகாமைத்துவ சேவைகளினால் அங்கீகாரமளிக்கப்பட்டவாறு புதிய ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கு இணங்க மேற்கொள்ளப்பட்டிருப்பதோடு வருடத்தின் இறுதியளவில் தலைமை அலுவலகத்தில் மற்றும் மாகாணங்களில் 75 % மான வெற்றிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. கீழே அட்டவணை 2.1 2014 ஆம் ஆண்டில் நிரப்பப்பட்ட வெற்றிடங்களின் விபரங்களைச் சுட்டிக்காட்டுகின்றது. அட்டவணை 2.1: 2014.12.31 ஆம் திகதியிலுள்ளவாறு ஆளணி நிலைமைகள் நிரப்பப்பட்ட ஆளணிகள் மற்றும் வெற்றிடமாக உள்ள விபரங்களைக் காட்டுகின்றது.

பதவி	நிரப்பப்பட்ட வெற்றிடங்கள்
மேலதிக பணிப்பாளர் நாயகம்	1
பணிப்பாளர் (தணிப்பு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி)	1
சாரதி	2
அலுவலக உதவியாளர்	1
மொத்தம்	**5**

அட்டவணை 2.1: 2014.12. 31 ஆம் ஆண்டு நிரப்பப்பட்ட வெற்றிடங்கள்

பதவி	ஆளணி		
	அங்கீகரிக்கப்பட்ட ஆளணி	நிரப்பப்பட்ட ஆளணி	வெற்றிடம்
பணிப்பாளர் நாயகம்	1	1	0
மேலதிக பணிப்பாளர் நாயகம்	1	1	0
பணிப்பாளர்கள்	5	3	2
உள்ளக கணக்காய்வாளர்	1	1	0
பிரதிப் பணிப்பாளர்கள்	7	0	0
உதவிப் பணிப்பாளர்கள்	15	14	1
உதவிப் பணிப்பாளர்கள் (மாவட்டம்)	25	19	6
நிதி அலுவலர்	1	1	0
நிருவாக அலுவலர்	1	0	1
நூலகர்	1	0	1
தனிப்பட்ட உதவியாளர்கள்	1	0	1
அபிவிருத்தி உதவியாள	1	1	0
மொழிபெயர்ப்பாளர்	2	0	2


தகவல் தொழில்நுட்ப உதவியாளர்	2	0	2
வீடியோ மற்றும் புகைப்பட நிபுணர்	1	0	1
தொடர்பாடல் தொழில்நுட்பவியலாளர்	3	0	3
வானொலி இயக்குநர்	1	0	1
முகாமைத்துவ உதவியாளர்	46	46	0
அனர்த்த முகாமைத்துவ உதவியாளர்	100	97	3
சாரதிகள்	35	34	1
அலுவலக உதவியாளர்கள்	7	6	1
மொத்தம்	**257**	**224**	**33**

அட்டவணை 2.2: 2014.12.31 ஆம் திகதியிலுள்ள வாறு அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் ஆளணி நிலைமைகள்

2.4.2 மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்புப் பிரிவுகள் (DDMCUs)

மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்புப் பிரிவுகள் அனைத்து 25 மாவட்டங்களிலும் தாபிக்கப்பட்டுள்ளன. ஓவ்வொரு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு பிரிவும் ஒரு உதவிப் பணிப்பாளரையும் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவியாளர்களையும் கொண்டமைந்துள்ளது. அனர்த்த முகாமைத்துவ உதவியாளர்களின் எண்ணிக்கை மாவட்டத்திற்கு மாவட்டம், மாவட்டத்தின் அனர்த்த இடம்பெறும் நிலைமையின் அடிப்படையில் வேறுபட்டு காணப்படுகின்றது. அங்கீகரிக்கப்பட்ட 25 உதவிப் பணிப்பாளர்களின் மாவட்டம் சிவில் அலுவலர்களில் இருந்து மொத்தம் 19 சிவில் உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்கப்பட்டிருப்பதோடு ஏனைய ஆட்சேர்ப்பு இலங்கை விமானப் படை மற்றும் இராணுவத்தோடு இணைக்கப்பட்டு உதவிப் பணிப்பாளர் பதவியில் தற்காலிக அடிப்படையில் சேவை புரிகின்றனர். அனைத்து அனர்த்த முகாமைத்துவ உதவியாளர்களுக்கும் மேலதிகமாக 25 மாவட்டங்களிலும் 25 சாரதிகள் ஆட்சேர்க்கப்பட்டிருக்கின்றனர்.

6 ஆணையிடும் அலுவலர்கள் உள்ளடங்களாக 152 இராணுவ மற்றும் விமானப்படை அதிகாரிகள் கொழும்பு, களுத்துறை, காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை மற்றும் புத்தளம் ஆகிய மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு பிரிவுகளில் இணைக்கப்பட்டிருக்கின்றர். அனைத்து மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு பிரிவில் மாவட்ட செயலகங்களில் தாபிக்கப்பட்டிருப்பதோடு களுத்துறை, கேகாலை மாவட்டம் தவிர்ந்தவையாகவுள்ளன. மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு பொறிமுறை கிழே தரப்பட்டுள்ளது.



உரு 2.2 மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு பொறிமுறை

2.5 மாவட்ட பணிப்பாளர் நாயகத்தின் கருத்துரைகள்

2.5.1 அனர்த்தங்களின் தாக்கங்கள் பற்றிய பகுப்பாய்வு - 2014

i. தாக்கங்களின் கண்ணோட்டம் – 2014

2014 ஆம் ஆண்டில் பிரதான அனர்த்தங்களின் இடம்பெறுகையானது 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் எண்ணிக்கையில் அதிகரித்திருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது. வெள்ளம் மற்றும் மண்சரிவு எண்ணிக்கையானது தெற்கிலும் மேற்கிலும் வடகிழக்கு பருவக் காற்றுக் காலப்பகுதிகளிலும் அதிகரித்துள்ளது.

வெள்ளம் மற்றும் மண்சரிவு - தென்மேற்குப் பிராந்தியத்தில் யூன், யூலை மற்றும் வடகீழ்க்கு பருவப்பெயர்ச்சி

மண்சரிவு – மீரியாப்பெத்த ஒக்டோபர் இடைப்பருவப் பெயர்ச்சி

வெள்ளம், மண்சரிவு - வடகிழக்கு பருவப்பெயர்ச்சி டிசெம்பர் மாதத்தில்

2013 ஆம் ஆண்டில் நிகழ்ந்த பின்வரும் ஆபத்து வகைகளில் இருந்ததாக தொகுக்கப்பட்டிருக்கின்றது: வெள்ளம், மண்சரிவு, உயர் காற்றுக்கள், வரட்சி, மின்னல் தாக்கம், நீரில் மூழ்குதல், கரையோர மண்ணரிப்பு, தீ, இரசாயனம் மற்றும் விலங்குத் தாக்குதல் ஆகிய அனைத்து அனர்த்தங்களினாலும் 2014 ஆம் ஆண்டில் பாதிக்கப்பட்ட


மொத்த சனத்தொகை 2.7 மில்லியன் ஆகும். இதில் 1.5 மில்லியன் வரட்சியினாலும் 1.0 மில்லியன் வெள்ளத்தினாலும் பாதிக்கப்பட்டுள்ளனர். இது 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது மும்மடங்காகும். மொத்த இறப்புக்கள் மற்றும் காயமடைந்தவர்கள் (தூதுக்குழுக்கள் உள்ளடங்களாக) முறையே 154 அறிக்கை செய்யப்பட்டுள்ளதோடு, காயமடைந்தவர்களின் எண்ணிக்கை 80 ஆகவும் உள்ளது. 2013 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது சேதமடைந்த மற்றும் அழிவடைந்த வீடுகளின் மொத்த எண்ணிக்கை கணிசமாளவு அதிகரித்திருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது. அநேகமாக 80% வீடுகள் வெள்ளம் அல்லது காற்றின் காரணமாக அழிவடைந்துள்ளன.


தாக்கம்	2013	2014	மாற்றம் (%)
மரணங்கள் / காணாமல் போதல்	140	154	10.0
காயமடைந்தோர்	225	80	-64.4
பாதிக்கப்பட்ட சனத்தொகை	574130	2702545	370.0
அழிவடைந்த வீடுகள்	741	5312	616.1
சேதமடைந்த வீடுகள்	10048	19495	94.0

அட்டவணை 2.3 பாதிப்புக்கள் தொடர்பான தகவல்கள்


ii. **தொடரான விநியோகம்**

தென்மேற்கு பருவக் காற்றும் வடகிழக்கு பருவக் காற்றும் கணிசமான, இறப்புகள், காயமடைதல்கள் மற்றும் வீடுசார் சேதத்திற்கு காரணமாக இருக்கின்றன. தென்மேற்கு பருவக் காற்றின்போதும் வடகிழக்கு பருவக்காற்றின் போதும் மொத்தமாக சேதமடைந்த மற்றும் அழிவடைந்த வீடுகள் முறையே 4,689 மற்றும் 17,957 ஆகும். தென்மேற்குப் பருவக்காற்றின் யூன், யூலைக் காலப்பகுதியிலும் வடகீழ் பருவக் காற்றின் டிசெம்பர் காலப்பகுதியிலும் மீரியாப்பெத்த மண்சரிவின் முறையே இறப்புக்கள் மற்றும் காயமடைதல்களில் 3 உச்சநிலைகள் அவதானிக்கப்பட்டன. பாதிக்கப்பட்டோரின் அதிகமான தொகை ஆகஸ்ட் மாதத்தில் அறிக்கை செய்யப்பட்டதோடு இது சுமார் 1.5 மில்லியனாகக் காணப்பட்டது. இதற்கான காரணம் வடக்கு, கிழக்கு, ஊவா மாகாணங்கள் மற்றும் ஹம்பாந்தோட்டை, குருநாகல் மாவட்டங்கள் உள்ளிட்ட மாவட்டங்களில் ஏற்பட்ட கடும் வரட்சி நிலைமையாகும்.






iii. இட ரீதியான வகையீடு



பாதிக்கப்பட்ட சனத்தொகையின் வகையீடு



சேதமடைந்த மற்றும் அழிவுற்ற வீடுகளின் வகையீடு

2.5.2 சவால்கள்

i. தகவல் தொடர்பாடல், தொழில்நுட்ப உபகரணங்கள் மற்றும் பயிற்சி

அவசர நிலைமையொன்றில் வடுப்பட்ட சமூகங்களுக்கு தகவல்களை வழங்குவதற்கு அ.மு.நி. வினைத்திறன்மிக்க தொடர்பாடல் வலைப்பின்னலொன்றை கொண்டிருத்தல் வேண்டும்.. எவ்வாறாயினும் தற்போதுள்ள அ.மு.நி. தொடர்பாடல் இணைப்பு வலைப்பின்னல் அனைத்து அனர்த்த வடுப்படத்தக்க சமூகங்களையும் உள்ளடக்க போதியதாக இல்லை.

ii. அனர்த்த முகாமைத்துவ நிலையத்தில் கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு பிரிவுகளின் இன்மை

அனர்த்த முகாமைத்துவ நிலையமானது மத்திய அரசாங்கத்திடமிருந்தும் சர்வதேச மற்றும் உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்களிடமிருந்தும் அனர்த்த முகாமைத்துவ செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்காக நிதிகளைப் பெறுகின்றது. மேற்படி நிதிகளை வினைத்திறன்மிக்க முறையில் பயன்படுத்துவதற்காக கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு பிரிவு அனர்த்த முகாமைத்துவ நிலையத்தில் தாபிக்கப்பட வேண்டியுள்ளது. கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு பிரிவொன்று இன்மையானது நிறுவனத்தின் செயற்பாட்டை வெகுவாகப் பாதித்துள்ளது.

iii. தரவுகளைப் பரிமாறிக்கொள்வதிலுள்ள விடயங்கள்

அனர்த்த முகாமைத்துவ நிலையமானது தரவுகளை பரிமாறிக்கொள்வதோடு வரட்சி, மண்சரிவு, வெள்ளம் போன்றவற்றின் காரணமாக அனர்த்தங்களின் தாக்கங்களைக் குறைப்பதற்கு தரவுகளைப் பரிமாறிவதையும் ஊக்குவிக்கின்றது. எவ்வாறாயினும் தற்போதைய சந்தர்ப்பத்தில் சில பொது நிறுவனங்கள் தமது தரவுகளைப் பரிமாறிக்கொள்வதில் அசட்டையாக உள்ளன.

iv. பதவியினர் ஆட்சேர்ப்பு

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தில் காணப்பட்ட 75% வெற்றிடங்கள் நிறுவனத்தை மீன்கட்டமைத்ததன் பின்னர் பூர்த்திசெய்யப்பட்டிருக்கின்றது. எவ்வாறாயினும் பணிப்பாளர் அவசரத் தொழிற்பாடுகள், பணிப்பாளர் தணிப்பு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி, பணிப்பாளர் நிதி மற்றும் மனித வளங்கள், வானொலி இயக்குநர், தொழில்நுட்ப உத்தியோகத்தர், புகைப்பட கருவி இயக்குநர் ஆகிய பதவிகள் வெற்றிடமாகவே உள்ளன. இந்த பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு, அலுவலர்களின் குறைந்த சம்பளம் மற்றும் வரப் பிரசாதங்கள் இன்மை காரணமாக சிரமாகவே உள்ளது. மேலும், தொழில்நுட்ப அலுவலர்களை ஆட்சேர்ப்பானது அடிப்படை தகைமைகளில் குறிப்பீடு செய்யப்பட்ட தராதரங்களின்

மட்டத்தின் காரணமாக சிரமமாக இருக்கின்றது. ஆதலால், மிகவும் குறைந்தளவான விண்ணப்பதாரிகளே இந்தப் பதவிகளுக்கு விண்ணப்பித்திருப்பதோடு, இது அவர்களில் தகைமையான விண்ணப்பதாரிகள் இன்மையையும் காட்டுகின்றது.

v. காலநிலை மாற்றமும் அதன் மோசனமான பாதிப்புக்களும்

முன்னைய சில வருடங்களில் மோசமான, வழமைக்கு மாறான காலநிலைமைகள் நிலவியதன் காரணமாக நிலைமைகள் காலநிலைமை மாற்றத்தின் காரணமாக ஏற்பட்டன. இதன் விளைவாக குறுகிய காலத்தில் ஏற்பட்ட பாரிய மழையின் காரணமாக சில அனர்த்தங்கள் நிகழ்ந்தன. வீடுகள், உட்கட்டமைப்பு வசதிகள், பயிர்ச் செய்கை மற்றும் கால்நடைகள் என்பன அத்தகைய எதிர்வு கூறமுடியாத காலநிலைமைகளினால் அழிவடைந்தன. ஆதலால், அனர்த்த தயார் நிலைக்கும் காலநிலை மாற்ற நிலைமைக்கும் அதிக கவனம் செலுத்தப்படுதல் வேண்டும். காலநிலை மாற்றத்தின் மோசமான காலநிலை குறித்து சமுகங்களை அறிவுறுத்துவதற்கு விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட வேண்டும். காலநிலை மாற்றத்தின்

காரணமாக எழுகின்ற சவால்களை எதிர்கொள்வதற்கு அவசர பதிலளிப்பு பொறிமுறைகளை பலப்படுத்துவதற்கும் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டிய தேவை இருக்கின்றது.

2.5.3 2014 ஆம் ஆண்டுக்கான சிபாரிசுகள்

பல்வேறுபட்ட பகுதிகளிலுள்ள ஆபத்துள்ளமை மற்றும் நிதியிடல் காணப்படும் தன்மை போன்றவற்றைக் கருத்திற்கொண்டு முன்னுரிமை அடிப்படையொன்றில் 2014 ஆம் ஆண்டிலும் பின்வரும் செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டு தொடரப்பட வேண்டி இருந்தது:

- மாவட்ட, பிரதேச மற்றும் கிராம சேவகர் பிரிவு மட்டங்களிலும் DPERP இனை தொடர்ந்தும் விருத்தி செய்வதைத் தொடருதல்
- வெள்ளம் மற்றும் மண்சரிவுக்கு பாதிக்கப்படக்கூடிய பிரதேசங்களில் அதிகமான சமுக மட்ட விழிப்புணர்வு தயார்நிலை மற்றும் அடையாளப்படுத்தல் செயற்பாடுகளை நடாத்துதல்
- நகர உறுதிப்படுத்துகை நிகழ்ச்சித் திட்டங்களை உறுதிப்படுத்தி அதிக நிகழ்ச்சித் திட்டங்களை விருத்தி செய்து நடைமுறைப்படுத்துதல்
- வடுப்படத்தக்க பிரதேச செயலாளர் மற்றும் கிராம உத்தியோத்தர் மட்டங்களில் வழிந்தோடும் பிரதான அணைகளுக்கு தயார்நிலை மற்றும் பதிலளிப்புகளை விருத்தி செய்தல்

- பாடசாலைகளில் பாடசாலை அனர்த்த பாதுகாப்பு திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு உதவுதல்

- குறுஞ்செய்திகள், மற்றும் VHF தொலைத்தொடர்பாடல்கள் ரேடியோ தொடர்பாடல் என்பவற்றினூடாக பொதுமக்களுக்கு முன்னெச்சரிக்கை பரப்புகையின் தற்போதுள்ள திறனை விரிவாக்குதல்

- இலங்கை டெலிகொம்மினால் இடவமைப்பு தொலைபேசிகளினூடாக பாதிக்கப்படத்தக்க சமுகங்களுக்கு ஆரம்ப கட்ட எச்சரிக்கை பரப்புகைகளைச் செய்தல்.

- பொருத்தமான நிறுவனங்களிடையே அவசர பதிலளிப்பு உபகரணங்களை கொள்வனவு செய்து விநியோகித்தல்

- மோசமாக பாதிக்கக்கூடிய மீனவ சமுகத்திற்கு விழிப்புணர்வு மற்றும் திறன் கட்டியெழுப்புகை நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்

- தயார்நிலைத் திட்டங்களை விருத்தி செய்வதற்கு அரசாங்க முகவராண்மைகளுக்கு உதவுதல் உள்ளிட்ட அனர்த்தங்களுக்கான பதிலளிப்புக்கான தயார்நிலை.

- தேசிய மற்றும் மாவட்ட மட்டங்களில் அரசாங்க, அரச சார்பற்ற அலுவலர்களின் திறன் கட்டியெழுப்புகை

3. தேசிய மட்டத்திலான பிரதான செயற்பாடுகள்

3.1 அனர்த்த முகாமைத்துவ சட்டத்தின் திருத்தம்

அனர்த்த முகாமைத்துவ அமைச்சானது 2005 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, அனர்த்த முகாமைத்துவ திட்டத்திற்கான திருத்தங்களை உறுதிபப்டுத்தியுள்ளது. அங்கீகாரத்திற்காக ஆவணம் சட்டவரைஞர் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

3.2 இலங்கை தேசிய அனர்த்த முகாமைத்துவக் கொள்கை

இதற்காக தற்போது அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ளபோது அது தற்போது அமைச்சின் இணையத்தளத்திலும் காணப்படுகின்றது.

3.3 தேசிய அனர்த்த முகாமைத்துவத் திட்டம் (*தேஅமுதி)*

வரைவு அனர்த்த முகாமைத்துவ திட்டமானது 2009 இல் மீள் திருத்தம் செய்யப்பட்டதோடு அமைச்சரவையின் அங்கீகாரம் தேசிய அனர்த்த முகாமைத்துவ பேரவையின் அங்கீகாரமும் 20013 ஆம் ஆண்டில் பெற்றுக்கொள்ளப்பட்டதோடு 2014 ஆம் ஆண்டில் அது வெளியிடப்பட்டது.

3.4 தேசிய அவசர தொழிற்பாடுகள் திட்டம் (*தேஅதொதி)*

தேசிய அவசர தொழிற்பாடுகள் திட்டமானது வரையப்பட்டிருக்கின்றது.

3.5. நிறுவனஞ்சார் அனர்த்த முகாமைத்துவத் திட்டம்

அனர்த்த முகாமைத்துவத்துக்கான திட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கு அனர்த்த முகாமைத்துவ நிலையம் முன்னெடுப்புக்களை எடுத்துள்ளதோடு, அதற்கான வரைவு வழிகாட்டல்கள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன.

3.6 கூட்டாண்மைத் திட்டம்

2010 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட கூட்டாண்மைத் திட்டமானது மீள் பரிசீலனை செய்யப்பட்டு 2012 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்டது. 2013 - 2017 ஆம் ஆண்டுக்கான கூட்டாண்மைத் திட்டம் அனர்த்த முகாமைத்துவத்துக்கான தேசிய நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றது.

3.7 இடைக்கால முகாமைத்துவக் குழு (இ.ம.கு)

அனர்த்த முகாமைத்துவ குழு நிலையத்தின் இடைக்கால முகாமைத்துவக் குழு அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் செயலாளரினால் தலைமை வகிக்கப்படுவதோடு 2014 ஆம் ஆண்டில் அனர்த்த முகாமைத்துவம் தொடர்பில் தீர்மானங்களை எடுப்பதற்கு 10 தடவைகள் சந்தர்ப்பங்கள் கூடியது. இடைக்கால முகாமைத்துவக் குழுவின் கட்டமைப்பு பின்வருமாறு காணப்படுகின்றது:

1) செயலாளர், அனர்த்த முகாமைத்துவ அமைச்சு - தலைவர்
2) பிரதிநிதி, நிதி மற்றும் கொள்கைத் திட்டமிடல் அமைச்சு – உறுப்பினர்
3) பிரதிநிதி, பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு – உறுப்பினர்
4) பிரதிநிதி, உள்ளூர் ஆளுகை மற்றும் மாகாண சபைகள் அமைச்சு – உறுப்பினர்.
5) பணிப்பாளர் நாயகம், MBRO – உறுப்பினர்
6) பிரதம கணக்காளர், அனர்த்த முகாமைத்துவ அமைச்சு – உறுப்பினர்
7) பணிப்பாளர் நாயகம், அனர்த்த முகாமைத்துவ நிலையம் – செயலாளர்

3.8 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு பின்வருவனவற்றை உள்ளடக்கியுள்ளது.

1) மேலதிகச் செயலாளர் பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு - தலைவர்
2) பணிப்பாளர் நாயகம் , அனர்த்த முகாமைத்துவ நிலையம் - உறுப்பினர்
3) பிரதம கணக்காளர், அனர்த்த முகாமைத்துவ அமைச்சு – உறுப்பினர்
4) பிரதிநிதி, பொதுத் திறைசோி – உறுப்பினர்
5) பிரதிநிதி, கணக்காய்வாளர் தலைமையதிபதி திணைக்களம் - உறுப்பினர்
6) பணிப்பாளர், விழிப்புணர்வு அனர்த்த முகாமைத்துவ நிலையம் - உறுப்பினர்
7) உதவிப் பணிப்பாளர், நிதி அனர்த்த முகாமைத்துவ நிலையம் - உறுப்பினர்

8) உள்ளக கணக்காய்வாளர், அனர்த்த முகாமைத்துவ நிலையம் - செயலாளர்

நிறுவனத்தினால் கிடைக்கப்பெற்ற கணக்காய்வுக் கேள்விகளும் உள்ளக கணக்காய்வு பிரிவின் பருவ கால அறிக்கைகளும் இந்தக் குழுவில் இடம்பெறும் கூட்டங்களில் கலந்துரையாடப்படுகின்றன. வேலும், கணக்காய்வு வினாக்களுக்கான பதில்களின் சரியான தன்மை அதை சீரமைப்பதற்கு நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட வினைத்திறன் மிக்க நடவடிக்கைகள் என்பனவும் இங்கு கலந்துரையாடப்படுகின்றன. இதன் பின்னர் இந்த விடயங்கள் நிறுவனத்தின் பதவியினர் கூட்டங்களில் கலந்துரையாடப்பட்டு ஒவ்வொரு வினா தொடர்பாகவும் விடயங்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் கூட்டங்கள் காலாண்டு ரீதியாக இடம்பெறுவதோடு, இந்த குழுவின் 2013 மறறும் 2014 ஆம் ஆண்டுக்கான கூட்டங்கள் முறையே 4 கூட்டங்களும் 2 கூட்டங்களும் இடம்பெற்றிருக்கின்றன.

3.9 " தேசத்திற்கு மகுடம்" தேசிய கண்காட்சி 2014

அனர்த்த முகாமைத்துவ நிலையமானது 2014 பெப்ரவரி 21 முதல் 2014 மார்ச்சு 1 ஆம் திகதி வரை குளியாப்பிட்டியவில் இடம்பெற்ற "தேசத்திறகு மகுடம்" தேசிய கண்காட்சிக்கு அனர்த்த முகாமைத்துவ செயற்பாடுகள் தொடர்பாக ஒரு கண்காட்சி கூடத்தை ஏற்பாடு செய்திருந்தது. அனர்த்தங்களை தணிப்பதற்காக பின்வரும் சிறியளவிலான கருத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருக்கின்றன:

மாவட்டம்	பிரதேச செயலகம்	கருத்திட்டம்	வழங்கப்பட்ட நிதி ஏற்பாடு (ரூபா மில்லியன்)	செலவு (ரூபா மில்லியன்)
புத்தளம்	சிலாபம்	பனங்குடாவத்த காணியிலிருந்து இரயில்வே தண்டவாளத்தின் குறுக்கே ஏரிவரை ஒரு ஓடையை நிர்மாணித்தல்	0.30	0.29
	பல்லம	வெள்ளத்தின் காரணமாக பாதிக்கப்பட்ட ஒதஹேன வயல் நிலப்பரப்பிற்குச் சொந்தமான நில அணையை புனரமைத்தல்	0.52	0.52
	நாத்தாண்டி	வித்தமல்கம வடிகால் முறைமையை புதுப்பித்தல்	0.04	0.04
		ஜின் ஓயாவின் பகுதியான	0.04	0.04

		வடிகாலை புனரமைத்தல்		
		வீரகன வடிகாலைப் புனரமைத்தல்	0.44	0.44
	தங்கொடுவ	சுரங்கக்குலியவிலிருந்து நீரை எடுத்துச் செல்லும் பிரதான வடிகாலை புனரமைத்தல்	0.50	0.50
கேகாலை	அரநாயக்க – கெசல்வவத்தகம பிரதேச செயலாளர் பிரிவு	கெசல்வத்தகம பிரதேச செயலாளர் பிரிவு கெசல்வத்தகம நீர் படுக்கையை பாதுகாப்பதற்காக அபாயத்தை ஏற்படுத்துகின்ற பாறைத்தொடரை உடைத்து அகற்றுதல்	0.30	0.30
	வரகாபொல	வரகாபொலவின் கூங்கொட வடிகாலமைப்பு விருத்தி செய்தல்	0.79	0.77
குருநாகல்	கொடவெகர	பொடிக்கட்டுவ வடிகாலை அகலப்படுத்தி விருத்தி செய்வதற்கான கருத்திட்டம்	1.89	1.89
	ரிதிகம	ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய குன்றை உடைத்து அகற்றுதல்	0.03	0.03
	மல்லவப் பிட்டிய	ஆபத்தை ஏற்படுத்துகின்ற குன்றை உடைத:து அகற்றுதல்	0.04	0.04
	குளியாபிட்டிய	களுபுளு ஓயாவிற்கு தடுப்பு சுவரொன்றை நிர்மாணித்தல்	0.31	0.31
		முழு மொத்தம்	**5.21**	**5.18**

அட்டவணை 3.1 : டயட்ட கிருள திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட சிறியளவிலான அனர்த்த குறைப்புத்திட்டங்கள்

2014 தேசத்திற்கு மகுடம் நிகழ்வுடன் இணைந்ததாக நடத்தப்பட்ட தயார்நிலை மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள்

நிகழ்ச்சித் திட்டம்	இலக்குக்குழு/ இடம்
பயிற்சி நிகழ்ச்சித் திட்டம், முதலுதவி நிகழ்ச்சித் திட்டம்	செஞ்சிலுவை சங்கத்தின் பங்கேற்புடன் பாடசாலை மாணவர்களும் கண்காட்சிக்கு

	வந்த பொதுமக்களும்
புத்தளம், கேகாலை மற்றும் குருநாகல் மாவட்டங்களில் நடமாடும் சேவை	பிரதேச செயலாளர்கள், கிராம சேவையாளர்கள் மற்றும் தொடர்புடைய உத்தியோகத்தாpன் பங்கேற்புடன் பிரதேசத்தில் நிலவுகின்ற அனர்த்தங்களோடு தொடர்புடைய அனர்த்தங்களைத் தீர்த்தல்
அபாயகரமான இடங்களில் குளிப்பதற்கு செல்கின்ற நபர்களுக்கான பாதுகாப்பான இடங்களை உறுதிப்படுத்தல்	கேகாலை மாவட்டத்தில் 20 அறிவித்தல் பலகைகளை அமைத்தல்

அட்டவணை 3.2 டயட்ட கிருள திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட அனர்த்த தயார்நிலை மற்றும் விழிப்புணர்வு நிகழ்வுகள்

3.10 தேசிய பாதுகாப்பு தினம் - 2014

ஹம்பாந்தோடட்ட மாவட்ட செயலகம் அரசசார்பற்ற நிறுவனங்கள், சர்வதேச அரசசார்ர்பற்ற நிறுவனங்களின் அனுசரணையில் 2014 டிசெம்பர் 26 ஆம் திகதியன்ற தேசிய பாதுகாப்பு தினம் இடம்பெற்றது. தேசிய பாதுகாப்பு தினத்தை ஏற்பாடு செய்வதன் நோக்கம் யாதெனில் அனர்த்தத்தின் காரணமாக தமது உயிர்களை இழந்த அனைவரையும் நினைவுபடுத்துவதும் பாதுகாப்பு கலாசாரமொன்றை ஏற்படுத்துவதுமாகும். பொதுமக்களிடையே அனர்த்த அபாயம் பற்றிய விழிப்புணர்வையும் பாதுகாப்பு கலாசாரமொன்றையும் உருவாக்குவதும் குறிப்பாக பாடசாலை மாணவரிடையேயாகும். இலங்கைப் பாராளுமன்ற சபாநாயகர் கௌரவ சமல் ராஜபக்ஷ இதில் பிரதம அதிதியாக கலந்துகொண்டார் MDMCC பங்கேற்பாளர்கள் இந்த வைபவத்தில் அவர்களது பதக்கங்களையும் பரிசில்களையும் வழங்கி தமது பூரண ஆதரவை வழங்கினர். பாதுகாப்பு தினத்தின் கொண்டாட்டத்தில் முழு நேரடி ஒளிபரப்பும் இலங்கை ரூபவாஹினி கூட:டுத்தாபனத்தினால் இடம்பெற்றது.

ஹம்பாந்தோட்டையில் நிகழ்ந்த பிரதான தேசிய பாதுகாப்பு தினத்தை ஒட்டியதாக மாவட்டத்தினுள் பல்வேறு பயிற்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன. அவற்றில் ஆசியரியர்கள், மாணவர்கள், அரசாங்க அலுவலர்கள், பொலிஸ் உத்தியோகத்தர்கள், மற்றும் இராணுவ உத்தியோகத்தர்கள் பயிற்றுவிக்கப்பட்டனர். இதற்கு மேலதிகமாக பயிற்சி மற்றும் விழிப்புணர்வுகச் செயற்பாடுகளும் இடம்பெற்றன.

தேசிய பாதுகாப்பு தினத்தின் பிரதான கொண்டாட்ட வைபவம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டதோடு, உள்ளூர் மட்ட தேசிய பாதுகாப்பு தினங்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட செயலகத்தில் மாவட்ட செயலாளர்களின் அனுசரணையுடன் இடம்பெற்றது.



ஹம்பாந்தொட்டை மாகம்புர ருகுனுபுர சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற 2014 பாதுகாப்பு தின வைபவங்கள்

3.11 தேசிய அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு குழுக்கள் (NDMCC)



செயற்பாட்டுக்கான Hyoko சட்டகத்தின் கண்காணிப்பு அமுலாக்கம் என்பவற்றிற்கான அனர்த்த தணிப்புக்கான சர்வதேச உபாயமுறையில் சிபாரிசு செய்யப்பட்டவாறு அனர்த்த முகாமைத்துவ அமைச்சும் அனர்த்த முகாமைத்துவ நிலையமும் NDMCC இனைத் தாபித்ததோடு இதில் அரசாங்க முகவராண்மைகள், நன்கொடையாளர்கள், ஐக்கிய நாடுகள் முகவராண்மைகள், சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள், ஊடகம், தொழில்வாண்மையாளர்கள், கல்வி நிறுவனங்கள், தனியார்துறை அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் செயலாளாpன் தலைமைத்துவத்தின்கீழ் இடம்பெற்றது. இன் நோக்கம் யாதெனில் அனர்த்தத்தின் தாக்கத்தினை குறைப்பதற்கு தேசிய முயற்சிகளை நோக்கி ஒருங்கிணைப்பதும் அனர்த்தத்திற்கு முகங்கொடுக்கத்தக்க சமுகங்களை உருவாக்குவதுமாகும்.

3.12 அவசர பதிலளிப்புக் குழு

அவசர பதிலளிப்புக் குழவானது அவசர சேவைகளின் சிரேஷ்ட உறுப்பினர்களையும் பங்குதாரர்கள் முகவராண்மைகளையும் கொண்டமைந்து நேரடியாக அனர்த்த பதிலளிப்பு செய்றபாடுகளில் ஈடுபடுகின்றது. இவர்கள் தமது நிறுவனங்களை ஒருங்கிணைத்து இயற்கை

அனர்த்தங்களின்போது மூல வளங்களை இயக்குவிக்கின்றனர். குழுவானது அனர்த்த முகாமைத்துவக் குழுவின் பணிப்பாளரின் தலைமையின் கீழ் வழமையாகக் கூடுகின்றது. இக்குழுவின் விரிந்த கோட்பாட்டு நியதிகளாக அனர்த்த முகாமைத்துவக் குழுவுக்கு அனர்த்தங்களின் போது அவசர பதலளிப்பு செயற்பாடுகளை ஒருங்கிணைப்பதற்கு உதவுவதும் அவர்களை எந்தவொரு அனர்த்தத்தையும் முகங்கொடுப்பதற்கு தயார்நிலையில் வைத்திருப்பதுமாகும். 2014 ஆம் ஆண்டில் 3 அனர்த்தப் பதிலளிப்புக் கூட்டங்கள் இடம்பெற்றிருக்கின்றன.

3.13 அனர்த்த முகாமைத்துவக் குழுவின் இணையத்தளம் *(www.dmc.gov.lk)*

அனர்த்த முகாமைத்துவ குழுவின் உத்தியொகபூர்வ இணையத்தளமான றறற.னஅஉ.பழள.டம இற்றைப்படுத்தி பேணி வருவது இந்தப் பிரிவின் பொறுப்பாகவிருப்பதோடு நிலையத்தின் அனைத்து பிரதான நிகழ்வுகள் பற்றிய தகவல்களும் 2015 ஆம் ஆண்டில் நடந்த நிகழ்வுகளும் இணையத்தளத்திற்கு பதிவேற்றம் செய்யப்பட்டிருப்பதோடு, அனைத்து அனைத்தங்களோடும் தொடர்புடைய நிலைமை அறிக்கைகளும் நாளாந்த அடிப்படையில் இணையத்தளத்தில் பதிவேற்றம் செய்யப்படுகின்றன. இதற்கு மேலதிகமாக இணையத்தளத்திற்கு www.drr.dmc.gov.lk ஊடாக அனைத்துக் கருத்திட்டங்களின் விபரங்களும் பதிவேற்றம் செய்யப்படுகின்றன. இவ்வருட காலப் பகுதியில் 12 செய்தி கட்டுரைகள் இதில் வெளியிடப்பட்டிருக்கின்றன.

3.14 அனர்த்த தரவுத் தளம் (www.desinventar.lk)

கடந்த கால அனர்த்தங்கள் பற்றிய அனைத்து விபரங்களையும் உள்ளடக்கிய தரவு வங்கியொன்று www.disinventra.lk என்ற இணையத்தளத்தினூடாக இணையத்தில் வெளியிடப்பட்டிருப்பதோடு இந்த தரவுத் தளமானது மரணங்களின் எண்ணிக்கை பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை மாவட்ட பிரதேச செயலாளர் பிரிவின் அடிப்படையில் கால ரீதியாக பாதிக்கப்பட்ட சொத்துக்கள் பற்றிய விபரங்கள் கடந்தகாலத்தில் நிகழ்ந்த ஒவ்வொரு அனர்த்தத்தோடும் தொடர்பான அனர்த்தத்தின் தன்மை போன்றவற்றை உள்ளடக்கியதாக இருக்கின்றது. இந்த தரவுத் தளமானது அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் அவசர தொழிற்பாடுகள் அலகினால் வெளியிட்ட நிலைமை அறிக்கையையும் உள்ளடக்குவதோடு வனப்பாதுகாப்பு சுகாதாரம் போன்ற விடயங்களுக்குபொறுப்பான ஏனைய நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட தகவல்களையும் கொண்டிருக்கின்றது. 1974-2014 வரையான காலப்பகுதியில் நிகழ்ந்த அடிப்படைத்தகவல்கள் இந்த தரவு வங்கியில் உள்ளடக்கப்பட்டுள்ளது. பின்வரும் அட்டவணையானது 2012, 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் உள்ளடக்கப்பட்டிருக்கின்ற நிகழ்வுகளின் எண்ணிக்கை மற்றும் தரவுகளின் எண்ணிக்கை:

ஆண்டு	நிகழ்வுகளின் எண்ணிக்கை	தரவுகளின் எண்ணிக்கை
2012	16	512
2013	**16**	**456**
2014	**13**	**456**

அட்டவணை 3.3 அனர்த்த தரவுத் தள தகவல்கள்

4. தணிப்பு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவு

4.1 பின்னனி

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் அனர்த்த தணிப்பு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவின் பிரதான தொழிற்பாடு யாதெனில் 2004 இல் இடம்பெற்ற பயங்கரமான சுனாமியின் பின்னர், பின்அனர்த்த முகாமைத்துவத்தை விட முன் அனர்த்த முகாமைத்துவம் குறித்த மிகவும் கவனம்

செலுத்துவதாக இருப்பதோடு அனர்த்த அபாயத்தை மதிப்பீடு செய்வதும் அனர்த்த அபாயத் தணிப்புக்களை அடையாளங்கண்டு அமுல்படுத்துவதும் பாதுகாப்பான இலங்கையொன்றை உருவாக்குவதை நோக்காகக் கொண்டு செயற்படுவதும் தேசிய நீரோட்ட அபிவிருத்திக்குள் அனர்த்த அபாயத் தணிப்பு முறைமையொன்றின் ஒருங்கிணைப்பாக்கத்தினூடாக பேணத்தகு அபிவிருத்திக்கு உதவுவதுமாகும்.

4.2 மாவட்ட மட்டத்திலான அனர்த்த தணிப்பு

2013 ஆம் ஆண்டில் இடம்பெற்ற அனர்த்தங்களின் தரவுப் பகுப்பாய்வொன்று அட்டவணை ஒன்றில் காட்டப்பட்டிருப்பதோடு அட்டவணை 1 இல் 2013 ஆம் ஆண்டில் நிகழ்வுகள். உயிர்களின் இழப்புக்களுக்கு மேலதிகமாக உட்கட்டமைப்பு பாரிய சேதம் ஏற்பட்டிருப்பதை தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது.


அனர்த்தங்கள் (நிகழ்வுகள்)	நிகழ்வுகளின் எண்ணிக்கை (2013)	மரணங்களின் எண்ணிக்கை	வீடுகளுக்கான சேதங்கள்
வெள்ளம்	45	02	365
வரட்சி	146	-	-
சூறாவளி	219	68	9166
மண்சரிவு	42	06	181

அட்டவணை 4.1 2013 ல் இடம்பெற்ற அனர்த்தங்கள்

இந்த தரவுகளைக் கருத்திற்கொண்டும் சமர்ப்பிக்கபடப்ட கருத்திட்ட அறிக்கைகளைக் கவனத்திற்கொண்டும் 2014 ஆம் ஆண்டுக்கான அனர்த்த தணிப்புப் பிரிவிற்காக பொதுத் திறைசோியினால் ரூபா 500 மில்லியன்கள் ஒதுக்கப்பட்டிருப்பதோடு, இது முன்னைய ஆண்டில் ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாட்டை விட இரு மடங்கு அதிகமாகும். (அட்டவணை 2, உரு 2)

ஆண்டு	ஒதுக்கப்பட்ட தொகை (ரூபா மில்.)
2011	114
2012	122
2013	274
2014	500

அட்டவணை 4.2 : 2014 ஒதுக்கீடுகள்




உரு 2 ஒதுக்கீடுகள்

அண்மைய ஆண்டுகளில் அனர்த்த தணிப்புக்காக செய்யப்பட்ட நிதி ஒதுக்குதல்கள்

2013 ஆம் ஆண்டில் நிகழ்ந்த ஒவ்வொரு அனர்த்தங்களையும் கவனத்திற்கொள்கின்றபோது அந்த அனர்த்தங்களினால் நிகழ்ந்த் பாதிப்புக்களை கருத்திற்கொண்டு ஒதுக்கப்பட்டிருக்கின்ற தொகையானது பின்வரும் அட்டவணை 4.2இல் உரு 4.2 இல் காட்டப்பட்டுள்ளவாறு அனர்த்த தணிப்பு கருத்திட்டங்களுக்காகவும் ஒதுக்கப்பட்டிருக்கின்றது. மாவட்ட அடிப்படையில் அனர்த்த தணிப்புக்கு ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடுகள் பின்வரும் அட்டவணையில் பிரதிபலிக்கின்றது அட்டவணை (4.3)


அனர்த்தம்	ஒதுக்கப்பட்ட தொகை (ரூபா மில். 2014)	%
வெள்ளம்	324	77.8
வரட்சி	90	18.2
விலங்குகளினால் ஏற்படுத்தப்பட்ட தாக்கம்	06	1.2
நிலையற்ற பகுதிகளினை ஸ்தீரப்படுத்தல்	14.2	2.8

அட்டவணை 4.3 அனர்த்த தணிப்புக்கு ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடுகள்



அட்டவணை 2

4.3 2014 ஆம் ஆண்டுக்கு அனர்த்த தணிப்புக்கு ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடு



மாவட்ட மட்டத்தில் அனர்த்த தணிப்புக்கு ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடுகள்

2014 ஆம் ஆண்டுக்கு மாவட்ட மட்டத்தில் அனர்த்த தணிப்புக்கு ஒதுக்கப்பட்ட நித ஏற்பாடுகள்

கீழே தரப்பட்டுள்ள அட்டவணை 4 உரு 4 2014 டிசெம்பர் 31 அளவில் அடையப்பெற்ற இந்த கருத்திட்டங்களின் பௌதீக முன்னேற்றத்தையும் நிதிசார் முன்னேற்றத்தையும் காட்டுகின்றது. இந்த கருத்திட்டங்களின் முழுதுமளாவிய பௌதீக முன்னேற்றமானது சுமார் 97 % மாக இருப்பதோடு நிதிசார் முன்னேற்றமும் 97% தை எட்டி இருக்கின்றது. ஆண்டின் இறுதியளவில் கடுமையான வெள்ளத்தில் சுமார் 17 மாவட்டங்கள் பாதிக்கப்பட்டதோடு, இலக்குபடுத்தப்பட்ட மொத்த முன்னேற்றம் அடையப்பட முடியவில்லை அதன் வண்ணம் இறுதி அமுலாக்க கட்டத்திலுள்ள கருத்திட்டங்கள் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

தொடரும் கருத்திட்டங்கள் 2014 - செலவுத் தலைப்பு 2205		
இல.	**கருத்திட்டத்தின் பெயர்**	**மாவட்டம்**
1	கிளிநொச்சி மாவட்டத்தில் ஓடும் மழை நீரை வசதிப்படுத்துவதற்காக சுவர் தடுப்பை அகற்றுவதற்கு தோண்டப்பட்டிருக்கின்ற நிரப்புக் கிடங்குகள்	கிளிநொச்சி
2	முருங்கன் யோதஎல மல்வதது ஓயாவூடாக வெள்ளங்களின் தணிப்பு	மன்னார்
3	கடவத்த இசல கரகஹமுனவின் மஹிந்த மாவத்தையில் மலை மேட்டின் சரிவினைத் தடுப்பதற்காக பகுதி சுவர் நிர்மாணித்தல்	கம்பஹா
4	குடா ஓயாவில் வெள்ளத்தைக் கட்டுப்படுத்துதல்	பதுளை
5	கனுக்கெல்லையிலிருந்து துனுவன்கிரிய வரையான வெள்ள	பதுளை

	நிலைமையைக் குறைத்தல்	
6	இகல அழுத்வெவ குளத்தை அகலமாக்குதல்	பதுளை
7	முதலைகளுக்கெனதிரான பாதுகாப்பு கூடுகளை நிர்மாணித்தலும் வெள்ளத்தை தணித்தலும்	மாத்தறை
8	564/B, E முன்கந்தவல வடிகால் கால்வாய் மீள் நிர்மாணம்	புத்தளம்
9	FC 9 C கால்வாயை ஓரமாக பக்க சுவர்களின் நிர்மாணம்	ஹம்பாந்தோட்டை

அட்டவணை 4.4 பாரியளவிலான அனர்த்த தணிப்புத்திட்டங்கள்



வெள்ளத்தை தணித்தல் – காலி மாவட்டம்



பாதுகாப்பான குளித்தல் இடம் – மாத்தறை மாவட்டம்
(முதலைகளினால் ஏற்படும் ஆபத்தினைக்



வரட்சியின் தாக்கத்தை தணிப்பதற்கான சுகவர்கள் நிர்மாணம் – முல்லைத்தீவு மாவட்டம்




உடுநுவரையில் மண்சரிவை குறைப்பதற்காக வடிகால் முறைமையை விருத்தி செய்தல்

அவசர அனர்த்த நிவாரணத்திற்காக சுமார் ரூபா 50 மில்லியன் நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டிருப்பதோடு அந்த நிதி ஏற்பாடுகள் அபாயகரமான முறையில் கிடக்கின்ற நிலையற்ற பாறைகளை அடக்குதல், வீடுகள் உட்கட்மைப்பு அல்லது பாதைகளைத் தடுத்து காணப்படுகின்ற சேதப்படுத்துகின்ற விழுந்திருக்கின்ற பாறைகளை அகற்றுதல், வீதிகளை தடுத்து வீதிகளின் மீது விழுந்திருக்கின்ற மரங்கள் அல்லது மண்களை அகற்றுதல், போக்குவரத்துக்கு தடையாக இருக்கின்ற சிறிய பாலங்களை அகற்றுதல், அனர்த்

நிலைமைகளை உருவாக்கத்தக்கதான சேதங்களைத் தடுப்பதற்குத் தேவையான இயந்திரசாதனங்களுக்கான எரிபொருள் செலவுகள் அல்லது வாடகைகளை வாங்கிக்கொள்ளுதல், பாதிக்கப்பட்ட ஆபாத்தை எதிர்நோக்கியுள்ள நிலைமைகளிலுள்ள அணைத்தாங்கிகளை நிலைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்தல், பாதுகாப்பான இடங்களுக்கு அனர்த்தத்தினால் பாதிக்கபப்பட்டோரைக் கொண்டு செல்லுதல், அனர்த்தங்களின் தாக்கத்தை குறைப்பதற்கான உபகரணங்களைக் கொள்வனவு செய்தல், அனர்த்தத்தில் சேதமடைந்த உட்கட்மைப்புக்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் சுவர்களைச் சுத்தப்படுத்துவதற்கான நீர்ப்பம்பிகளை வாடகைக்கு கொள்வனவு செய்தல் போன்ற அவசர அனர்த்த நிவாரண சேவைகளுக்காக இவை பயன்படுத்தப்பட்டுள்ளன. இன்றளவில் நிலையமானது ரூபா 50 மில்லியன் நிதி ஏற்பாட்டை பெற்றிருப்பதோடு அவசர அனர்த்தங்களை தணிப்பதற்காக மாவட்ட மட்டத்தில் முதலீடப்பட்டிருக்கின்ற நிதி ஏற்பாடு அட்டவணை 5 இல் காட்டப்பட்டிருக்கின்றது. பாரிய வெள்ளத்தினால் ஏற்படுத்தப்பட்ட அவசர அனர்த்தங்களைத் தவிர்ப்பதற்கு வழங்கப்பட்டிருக்கின்ற நிதி ஏற்பாடுகள் அந்த நோக்கத்திற்காக வருட இறுதியளவில் போதியதாக இருக்கவில்லை.

மாவட்டம்	செலவினத் தொகை (ரூபா
முல்லைத்தீவு	500,000.00
புத்தளம்	1,334,539.50
கொழும்பு	960,000.00
இரத்தினபுரி	2,031,146.62
ஹம்பாந்தோட்டை	10,292,288.76
அனுராதபுரம்	2,095,642.01
கண்டி	4,047,070.00
காலி	1,118,500.00
குருநாகல்	500,000.00
மாத்தளை	1,861,750.00
பதுளை	1,411,500.00
கேகாலை	1,568,331.02
நுவரெலியா	3,137,375.00
களுத்துறை	3,168,000.00
வவுனியா	500,000.00
கம்பஹா	2,082,000.00
யாழ்ப்பாணம்	3,260,000.00
கிளிநொச்சி	500,000.00
திருகோணமலை	3,996,250.00
மொனராகலை	27,000.00
பொலன்னறுவை	3,632,494.00
அம்பாறை	970,000.00



மன்னார்	500,000.00
மாத்தறை	500,000.00
மட்டக்களப்பு	1,000,000.00
மொத்தம்	**49,993,886.91**

அட்டவணை 4.5 : மாவட்ட ரீதியில் அவசர செயற்பாடுகளுக்காக செலவு செய்யப்பட்ட நிதி விபரம்.



அவசர பதிலளிப்பு – அனுராதபுரம்



அவசர பதிலளிப்பு – நுவரெலியா



அவசர பதிலளிப்பு – மாத்தறை



4.4 அவசர வெள்ளத் தணிப்பு

4.4.1 பானந்துறையில் வெள்ளத் தணிப்பு

பானந்துறை பிரதேச செயலாளர் பிரிவானது அதிகரித்த மழை காரணமாக நகர வெள்ள நிலைக்குட்பட்டது. இந்த விடயத்திற்கு விசேட கவனம் செலுத்தி கருத்திட்டமொன்றுக்கான அங்கீகாரம் பெற்பட்டதோடு, அது தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு 2013 ஆம் ஆண்டிலிருந்து ஆரம்பித்து 3 வருடங்களினுள் நிறைவு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கு ரூபா 139 மில்லியன் தொகை செலவிடப்பட்டுள்ளது. மோதஎல மற்றும் கரபுன் எல ஆகியவை தடை செய்யப்படுவதன் விளைவாக இந்த வெள்ள நிலைமை ஏற்படுவதாக இக் கருத்திட்டத்தினூடக அடையாளங்காணப்பட்டிருப்பதோடு அதிகாரமளிக்கப்படாத புதிய ஏற்பாட்டாளரினால் வாய்க்கால் மறிக்கப்படுவதும் வாய்க்கால் உரிய முறையில்

பராமரிக்கப்படாமல் இருப்பதும் இதற்கான காரணமங்களாகும். இதன் வண்ணம் களுத்துறை மாவட்ட செயலகத்தினுடன் இணைந்ததாக மேற்படி நிதி ஏற்பாடுகளைப் பயன்படுத்தி இந்தக் கால்வாயை விருத்தி செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதோடு இது காணி மீட்பு அபிவிருத்தி கூட்டுத்தாபனத்தினால் விருத்தி செய்யப்பட்ட திட்டங்களுக்கு அமைவாக அமுல்படுத்தப்படுகின்றது. இக்கருத்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக 2014 ஆம் ஆண்டளவில் சுமார் 45 மில்லியன் தொகை பெறப்பட்டிருக்கின்றது. இது 3 வருடகாலப்பகுதியினுள் பூர்த்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. தற்போதளவில் திட்டமிடப்பட்ட கருத்திட்டத்தின் 75% செயற்பாடுகள் பூர்த்தி செய்யபடப்டுள்ளன. 2014 ஆம் ஆண்டுக்கு கருத்திட்டத்தின் முழுதுமளாவிய நிதிசார் முன்னேற்றம் 100% மாக உள்ளதோடு 2014 ஆம் ஆண்டில் செய்யப்பட்ட பணிகளுக்கான கொடுப்பனவுகளுக்குத் தேவையான போதிய நிதிசார் ஏற்பாடுகள் பெறப்படவில்லை. 2014 ஆம் ஆண்டுக்குப் பெறப்பட்ட தொகை அத்தகைய நோக்கத்திற்காக கொடுப்பனவுகளுக்கு பயன்பட விருக்கின்றது. 2014 ஆம் ஆண்டுக்கு உத்தேசிக்கபடப்ட 75 % மான செயற்பாடுகள் தற்போது பூர்த்தி செய்யப்பட்டிருக்கின்றன. எவ்வாறாயினும் அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரமளிக்கப்படாத குடியிருப்பாளர்களை அமர்த்துவதிலுள்ள சிக்கல்கள் காரணமாகவும் சமுகத்திலிருந்து ஏற்படுகின்ற பிரச்சினைகளின் காரணமாகவும் எதிர்பார்க்கப்பட்ட முன்னேற்றத்தை அடைவது சிரமமாகவுள்ளது.



முன்னர்



பின்னர்



முன்னர்



பின்னர்

4.4.2 தம்புள்ளையில் வெள்ளத் தணிப்பு

தம்புள்ளை நகரத்தில் தம்புள்ளை பொருளாதார மையம் தம்புள்ளை ஆஸ்பத்திரி தம்புள்ளை ஜம் உதான வளாகங்கள் உள்ளடங்களாக சமுகப் பொருளாதர முக்கியத்துவம் வாய்ந்த பல இடங்கள் வருடாந்தம் நகர வெள்ளத்திற்கு உட்படுகின்றது. இது மிரிஸ்கோளனிய ஓய தம்மன்னா ஆகியவற்றின் தடுப்புக் காரணங்களாகும். இந்த நிலைமைக்கு கவனம் செலுத்தி சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்ற கருத்திட்ட அறிக்கையை கவனத்ததிற்கொண்டு வெள்ளத் தணிப்பு கருத்திட்டமொன்றுக்காக சுமார் ரூபா 60 மில்லியன்கள் ஒதுக்கபடப்டதோடு, 2012 ஆம் ஆண்டில் ஆரம்பத்து 3 வருடங்களிலும் இக்கருத்திட்டங்களை நிறைவு செய்வதற்கு திட்டமிடப்பட்டிருக்கின்றது. 2014 ஆம் ஆண்டுக்கு ரூபா 20 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருப்பதோடு 2013 ஆம் ஆண்டில் போதிய நிதி ஏற்பாடுகள் கிடைக்கப்பெறாமையின் காரணமாக அவ்வருடத்தில் செய்யப்பட்ட பணிகளுக்கு கொடுப்பனவுகளைச் செய்தவற்காக 2014 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாட்டை அதற்காக பயன்படுத்த வேண்டி இருந்தது

2014 ஆம் ஆண்டிக்கு திட்டமிடப்பட்டிருக்கின்ற ஏற்பாடுகளின் பௌதீக முன்னேற்றம் 90% மாகவுள்ளது. இக்கருத்திட்டத்தை அமுல்படுத்தியதன் விளைவாக ஆயிரக்கணக்கான மக்கள் நேரடியாகவும் மறைமுகமாகவும் நன்மையடைந்திருப்பதோடு 2011 ஆம் ஆண்டிலிருந்து பாரிய மழைவீழ்ச்சி ஏற்பட்டபோதிலும் இப்பகுதி வெள்ளத்தில் மூழ்கவில்லை. இந்தக்கருத்திட்டமானது மொத்த தேசிய உற்பத்தியை அதிகரிப்பதற்கும் பங்களிப்புச் செய்துள்ளதோடு அனர்த்த சேதங்கள் நிகழ்வதைத் தடுத்தல் நிவாரணங்களுக்காக பணத்தை செலவழிக்க தேவையற்றிருத்தல் மக்களின் சமுக, பொருளாதர, உள மனப்பாங்கை உரிய முறையில் பேணுதல் போன்றவற்றினால் கருத்திட்டத்தின் முக்கிய தாக்கத்ததின் காரணமாக நாட்டின் மூல வளங்கள் பாதுகாக்கப்பட்டிருக்கின்றன.






தம்புள்ளையில் வெள்ளத்தை தணித்தல்

4.4.3 யாழ்ப்பாணத்தில் வெள்ளத்தைத் தணித்தல்

யாழ்ப்பாண மாவட்டம் ஒரு தரைமட்டமான பகுதியாக இருப்பதால் மழைநீர் வடிகாலமைப்பு மிகவும் குறைவான விகிதத்திலே உள்ளது. மழை நீர் முகாமைத்துவத்துக்காக நிர்மாணிக்கப்பட்டிருக்கின்ற பல சிறிய குட்டைகள் இப் பகுதியின் பல இடங்களில் காணப்படுகின்றது. ஆனால் இந்த குட்டைகள் முறைமையும் மழை நீர் கழிவு வாய்க்கால் முறைமையும் யுத்த நிலைமையின் பின்னர் முறையாகத் தொழிற்படுவதாக இல்லை. இதன் விளைவாக இப்பகுதி மக்கள் வெள்ளம் உள்ளிட்ட பல இயற்கை அனர்த்தங்களுக்கு முகங்கொடுக்க வேண்டி இருந்தது. இந்த நிலைமையைக் கவனத்தில் எடுத்து 3 வருட காலப்பகுதியொன்றுக்கு அனர்த்த பகுதிப் பிரிவு ஒன்றினால் உத்தேசிக்கப்பட்டுள்ள வெள்ள தணிப்பு கருத்திட்டமொன்றை அமுல்படுத்துவதற்காக ரூபா 120 மில்லியன் நிதி ஒதுக்கீட்டுக்கு திறைசேரி அங்கீகாரம் வழங்கப்பட்டது. அதன் வண்ணம் கருத்திட்டம் 2012 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டதோடு ரூபா 12 மில்லியன் மற்றும் ரூபா 35 மில்லியன் நிதி ஏற்பாடு முறையே 2012 2013 ஆம் ஆண்டுகளுக்கு ஒதுக்கப்பட்டது. ஆனால் 2013 ஆம் ஆண்டுக்கு வழங்கப்பட்ட நிதியின் அளவு கொடுப்பனவுகளைச் செய்வதற்கு போதியதாக இன்மையால் 2014 க்கு ஒதுக்கப்பட்ட ரூபா 50 மில்லியன் தொகையில் ரூபா 15 மில்லியன் தொகை 2013 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்ட பணிகளுக்கான கொடுப்பனவாக செய்வதற்கு பயன்படுத்தப்பட்டது. 2014 ஆம் ஆண்டில் இக்கருத்திட்டம் மூலம் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளில் பௌதீக முன்னேற்றம் 100% அடையப் பெற்றுள்ளது. ஆனால் பூர்த்தி செய்யப்பட்ட பணிகளுக்கான கொடுப்பனவுகளைச் செய்வதற்கு போதிய நிதிகள் கிடைக்கப்பெறவில்லை. இக்கருத்திட்டத்தினூடாக பெரும் எண்ணிக்கையான மக்கள் நேரடியாகவும் மறைமுகமாகவும் பயனடைகின்றனர். எனினும், இப்பகுதியில் தொழில்நுட்ப அலுவலர்களின் பற்றாக்குறை காரணமாகவும் சமுகப் பிரச்சினைகளால் உருவாக்கப்பட்ட நிலைமைகளின் காரணமாகவும் இப்பகுதியில் வசிக்கின்ற இனக் குழுமங்கள் இக்கருத்திட்டத்தினை அமுல்படுத்துவதன் ஊடாக பாரிய தாக்கத்தைப் பெற்றன.








யாழ்ப்பாணத்தில் வெள்ளத் தணிப்பு

4.5 அபிவிருத்தி செயன்முறையின் தேசிய நீரோட்டத்தில் அனர்த்த அபாய தணிப்பை ஒருங்கிணைத்தல்

அனர்த்த அபயாங்கள் எந்தவொரு தொழிற்பாட்டுத் துறையிலும் சம்பந்தப்பட்டவையாக இருக்கின்றன. ஆதலால், நிலையான அபிவிருத்திக்கு அனர்த்த அபாயம் தணிக்கப்பட்ட வேண்டியது அத்தியாவசியமானதாகும். இந்த விடயத்திற்கு கவனம் செலுத்தி ஆசிய அனர்த்த தயார் நிலையத்தின் அனுசரணையுடன் தொடர்புடைய பங்காளர் நிறுவனங்களுடன்

இணைந்து தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை அலுவலர்கள் உள்ளூராட்சி மன்றங்களின் தொழில்நுட்ப அலுவலர்கள் ஆகியோருக்கிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக வீடுகளை நிர்மாணிப்பதில் அனர்த்த அபாயத்தை தணிப்பதற்கு கைக்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து நிகழ்ச்சித் திட்டமொன்று அமுல்படுத்தப்பட்டு வருகின்றது. அந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இலங்கை உள்ளூர் ஆளுகை மற்றும் பயிற்சி நிறுவனத்துடன் இணைந்து சுமார் 650 அலுவலர்கள் சுமார் 300 உள்ளூராட்சி மன்றங்கள் என்பவற்றிற்கிடையே அனர்த்த பாதிப்பற்ற வீடுகளை நிர்மாணித்தல் தொடர்பாக விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டமொன்றுக்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் 75 அலுவலர்களுக்கு பயிற்சி வழங்குவதற்கும் இதனூடாக திட்டமிட்டிருக்கின்றது.

இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் உள்ளூராட்சி அமைப்புகளுக்கான வழிகாட்டலொன்றை தயாரிப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றது. மேலும் நகர அபிவிருத்தித் திட்டமிடல் தொடர்பான வழிகாட்டல்களும் இக்கருத்திட்டத்தின்கீழ் பாதுகாப்பான நகரங்களை உருவாக்குதல் என்பதன்கீழ் விருத்தி செய்யப்பட்டு வருகின்றது. இது மனித குடியிருப்புக்களுக்கான ஐக்கிய நாடுகள் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்படுகின்றது.

4.6 சர்வதேச நிறுவனங்களுடன் இணைந்து அமுல்படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள்

தெற்காசிய பிராந்திய அனர்த்த முகாமைத்துவ நிலையத்துடன் இணைந்து இலங்கையின் சார்பில் பேணப்பட்டு வருகின்ற தெற்காசிய பிராந்தியத்தில் அறிவு வலைப்பின்னலோடு தொடர்பான இணையத்தளப் பகுதியானது இற்றைப்படுத்தப்பட்டுள்ளதோடு பிராந்தியத்திலுள்ள ஏனைய நாடுகளின் பங்கேற்புடன் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பட்டப்பின் நிறுவகம் மற்றும் தெற்காசிய பிராந்தியத்தின் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் ஒக்டோபர் மாத்தினால் அனர்த்த சேதங்களும் இழப்புக்களும் பற்றிய செயலமர்வொன்றை செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மேலும், இப்பிரிவானது ஐக்கிய நாடுகள் செயலகத்தின் அனர்த்த தணிப்பு முகாமைத்துவ உபாய முறைகளுடன் தொடர்புடைய செயற்பாட்டுக்கான Hyogo சட்டகத்திற்கமைவாக கடந்த இரு ஆண்டுகளுக்கான முன்னேற்ற அறிக்கையையும் தயாரித்துள்ளதோடு, செயற்பாட்டுக்கான Hyogo சட்டகத்தின் பின்னர் ஆரம்பிக்கப்படவுள்ள "2015 க்கு பின்னர்" நிகழ்ச்சித் திட்டத்திற்கான 7 உத்தேச தொனிப்பொருள்களின் கீழ் இலங்கையின் தேவைகளை அடையாளம் காணும் அறிக்கையையும் தயாரித்து உள்ளது. இப்பிரிவினால் அமுல்படுத்தப்பட்ட மற்றுமொரு பிரதான செயற்பாடு யாதெனில் "எமக்குத் தேவையான எதிர்காலம்" என்ற தலைப்பில் அமைச்சின் கீழ் நடாத்தப்பட்ட "2015க்குப் பின்னர்" நிகழ்ச்சித் திட்டத்துடன் தொடர்பான அனர்த்த அவசர தொழிற்பாடுகள் மற்றும் தயார் நிலை பற்றிய செயலமர்வொன்றையும் நடாத்தியமையாகும்.

காணி அமைச்சுடன் இணைந்து அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்திற்கேற்ப GFDRR இன் ஒத்துழைப்புடன் இலங்கைக்கான தகவல் பரிமாற்றும் முறையொன்றினூடாக திட்டங்களின் தயார்நிலையொன்றுடன் தொடர்புடைய செயற்பாடுகளை ஒருங்கிணைத்தல், பங்குதார நிறுவனங்களின் பங்கேற்புடன் பொருத்தமான செயற்பாடுகளுக்கான செயலமர்வொன்றை நடாத்துதல் போன்றன இந்தப் பிரிவினால் நடாத்தப்பட்ட ஏனைய செயற்பாடுகளாகும். வருடத்தின் ஆரம்பத்தில் இலக்குப்படுத்தப்பட்ட அனைத்து நிகழ்ச்சித் திட்டங்களும் ஆரம்பிக்கப்பட்டதோடு தற்போது வரை அமுல்படுத்தப்பட்டும் வருகின்றன. பயிற்றப்பட்ட மனித வளங்களின் பற்றாக்குறை மற்றும் நிதிகளின் பற்றாக்குறை காரணமாக இந்த இலக்குகளை அடைவதிலுள்ள பிரதான சிக்கல்களாக உள்ளன.


5. விழிப்புணர்வுப் பிரிவு

5.1 அறிமுகம்

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் விழிப்புணர்வுப் பிரிவானது அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பதவியினர் வடுப்பட்ட சமுகங்கள் அரசாங்கம் மற்றும் அரச சார்பற்ற பங்காளர்கள் கல்விசார் நிறுவனங்கள் பாடசாலை ஆசிரியர்கள் பாடசாலை மாணவர்கள் மற்றும் ஏனையோருக்கு பயிற்சி மற்றும் பொது விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை வழங்குவதற்கு பங்குதாரர்களுடன் இணைந்த வகையில் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் பல நிகழ்ச்சித் திட்டங்களும் ஏற்பாடு செய்து நடாத்தப்பட்டுள்ளன.


5.2 2014 ஆம் ஆண்டுக்கான நிதிகளின் ஒதுக்கீடு

2014 ஆம் ஆண்டைப் பொறுத்தவரையில் அலுவலர்களின் திறன்களையும் பொதுமக்களையும் மேம்படுத்துவதற்காக விழிப்புணர்வு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு சுமார் 12.5 பில்லியன் கிடைக்கப்பெற்றுள்ளது. பெற்றுக்கொள்ளப்பட்ட நிதியை 2012, 2013 ஆம் ஆண்டுகளுடன் ஒப்பிடும்போது 2014 மற்றும் 2015 க்கான விழிப்புணர்வு மற்றும் பயிற்சி செயற்பாடுகளுக்கான நிதி ஒதுக்கீடு கீழே உரு 5.1 இல் விளக்கப்பட்டுள்ளது.




உரு. *5.1: 2012* இலிருந்து *2015* ஆம் ஆண்டு வரை பெறப்பட்ட ஒதுக்கப்பட்ட நிதிகளின்

2014 ஆம் ஆண்டுக்கு கிடைக்கப்பபெற்ற நிதி ஒதுக்கீடுகள் தேசிய, மாவட்ட, பிரேதச மற்றும் கிராம மட்டங்களில் விழிப்புணர்வு மற்றும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்துவதற்கு பயன்படுத்தப்பட்டது. விழிப்புணர்வுப் பிரிவு தேசிய மட்ட நிகழ்ச்சித் திட்டங்களை ஏற்பாடு செய்துள்ளதோடு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு பிரிவு மாவட்ட, பிரதேச, உள்ளூர் மட்ட நிகழ்ச்சித் திட்டங்களை ஏற்பாடு செய்தன. தேசிய மாவட்ட மற்றும் உள்ளூர் மட்ட நிகழ்ச்சித் திட்டங்களுக்காக நிதிகளின் விநியோகம் உரு 5.2 இல் விளக்கப்பட்டுள்ளது.



உரு 5.2: *தேசிய மாவட்ட மற்றும் உள்ளூர் மட்ட நிகழ்ச்சித் திட்டங்களுக்கிடையே நிதிகளின் விநியோகம்* 2014




உரு. 5.3: *தேசிய ஒதுக்கப்பட்ட தொகை ரூபா மில்லியன்*

மாவட்ட அனர்த்த ஒருங்கிணைப்பு பிரிவினால் மாவட்ட மட்டத்தில் பயிற்சி மற்றும் திறன் கட்டியெழுப்புதல் நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பில் பாரிய நிதித் தொகையொன்று ஒப்பீட்டளவில் செலவளிக்கப்பட்டது. அதன்வண்ணம் 25 மாவட்டங்களுக்கும் சுமார் 8.5 மில்லியன் வழங்கப்பட்டிருப்பதோடு அனர்த்தங்களுக்கான நிதிகளின் விநியோகம் உரு 5.3 இல் தரப்பட்டுள்ளது.

மாவட்டங்களுக்கு வழங்கப்பட்ட நிதிகளின் ஒப்பீடு 2014

2013 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2014 ஆம் ஆண்டு நிதிகளின் அதிகரிப்புடன் அவற்றின் விழிப்புணர்வு மற்றும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. உரு 5.4 இல் 2012, 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட விழிப்புணர்வு மற்றும் பயிற்சி செயற்பாடுகளின் எண்ணிக்கையைக் காட்டுகின்றது.



உரு. 5.4: 2012 *முதல்* 2014 *வரை நடாத்தப்பட்ட விழிப்புணர்வு மற்றும் பயிற்சி செயற்பாடுகளின் ஒப்பீடு*

5.3 தேசிய மட்ட நிகழ்ச்சித் திட்டங்கள்

5.3.1 தேசிய மட்ட திறன் கட்டியெழுப்புகை அனர்த்த முகாமைத்துவ நிலைய பதவியினருக்கானது

தொடர்புடைய மாவட்டங்களில் அனர்த்தம் ஒன்றின் முன்னரும் அனர்த்தத்தின் பின்னரும் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளில் கவனம் செலுத்தியும் வினைத்திறன் மிக்க பதிலளிப்புக்காகவும் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் அலுவலர்களின் திறன்களை பலப்படுத்துவதற்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் மேற்கொள்ளப்பட்டது. அத்தகைய நிழ்ச்சிகள் மாவட்ட உதவிப் பணிப்பாளர்கள், மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவியாளர்கள், முகாமைத்துவ உதவியாளர்கள், அழைப்பு நிலைய பதவியினர், அலுவலக உதவியாளர், சாரதிகள் ஆகியோருக்காக 2014 இல் நடாத்தப்பட்டது.



உதவிப் பணிப்பாளர்கள் முகாமைத்துவ உதவியாளர்கள் சாரதிகளுக்கான பயிற்சி நிகழ்ச்சித்

5.3.2 பங்குதாரர்களின் திறன்களை கட்டியெழுப்புதல்

பொருத்தமான பங்குதாரர்கள் முகவராண்மைகளின் அனர்த்த முகாமைத்துவ திறனை மேம்படுத்துவதற்காக நிதிகளையும் அனர்த்த முகாமைத்துவ நிலைய ஒதுக்கியதோடு 2014 ஆம் ஆண்டில் பின்வரும் நிகழ்ச்சிகளும் கூட்டங்களும் நடாத்தப்பட்டன:

- விமானப் படை அலுவலர்களுக்கான அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான ஒரு நாள் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்
- சிறைச்சாலை அலுவலர்களுக்கான அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான ஒரு நாள் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்
- பங்களாதேஷ் குழுவுக்கான அரை நாள் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம்
- பங்களாதேஷ் அனர்த்த முகாமைத்துவ தொழில்வாண்மையாளர்களுக்கான அரை நாள் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம்
- விமானப் படைகளுக்கான ஒரு நாள் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்
- கடற்படை அலுவலர்களுக்கான ஒரு நாள் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்
- தொலைத் தொடர்பாடல் அதிகாரிகளுக்கான ஒரு நாள் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்



இலங்கை விமானப்படை அலுவலர்கள் மற்றும் ஏனைய அரசாங்க முகவராண்மைக்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்

5.4 உப தேசிய மட்ட நிகழ்ச்சித் திட்டங்கள்

5.4.1 உப தேசிய மட்டங்களில் பங்குதாரர்களின் திறன்களைக் கட்டியெழுப்புதல்

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் விழிப்புணர்வுப் பிரிவு அனர்த்த முகாமைத்துவ செயற்பாட்டில் மாவட்ட மற்றும் தேசிய மட்டங்களில் பங்களிப்பு செய்யும் பங்குதாரர் முகவராண்மைகளின் மாவட்ட மற்றும் பிரதேச மட்ட அங்கத்தவர்களின் கரங்களைப் பலப்படுத்துவதற்கும் நிதிகளை ஒதுக்கியது. நிகழ்ச்சித் திட்டமானது குறித்த பிரதேசங்களில் நிகழ்கின்ற அனைத்து விதமான அனர்த்தங்களின் வகைகளையும் உள்ளடக்கியதாக இருந்ததோடு அனர்த்த முகாமைத்துவ நிகழ்ச்சிகளை எவ்வாறு வெற்றிகரமாக அமுல்படுத்துவது என்பதாகவும் அமைந்தது. அதன்வண்ணம் தொடர்புடைய மாவட்டங்களில்

மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு அலகுகளினால் பங்குதாரர்களுக்கு பின்வரும் திறன் கட்டியெழுப்புகை நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன.

- ஒவ்வொரு மாவட்டத்துக்கும் ஒவ்வொரு நிகழ்ச்சித் திட்டமென்ற வகையில் 25 மாவட்ட மட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள்
- யாழ்ப்பாணம், கண்டி, கேகாலை, கொழும்பு, காலி, மாத்தறை, பொலன்னறுவை, அனுராதபுரம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் ஊடகவியலாளர்களுக்கான 10 விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள்
- புத்தளம், கண்டி, களுத்துரை, திருகோணமலை, முல்லைத்தீவு மாவட்டங்களிலுள்ள பொலிஸ் மற்றும் இராணுவ அலுவலர்களுக்கான 5 நாள் நிகழ்ச்சித் திட்டங்கள்
- அரசாங்க அலுவலர்களுக்கான 2 மாவட்டங்களில் 50 பிரதேச மட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள்.



பொலிஸ் இராணுவம் மற்றும் அரசாங்க அலுவலர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்

5.4.2 உள்ளூர் அதிகாரசபைகளின் திறன்களைக் கட்டியெழுப்புதல்

அனர்த்த முகாமைத்துவ செயற்பாட்டில் உள்ளூர் ஆளுகை ஒரு முக்கியமான வினைத்திறன்மிக்க கட்டமைப்பாக இருப்பதால் அது அதன் அதிகாரங்கள், பணிகள் பயிற்சி மற்றும் நிகழ்ச்சித் திட்டங்கள் என்பவற்றை உள்ளூர் அதிகார சபைகளின் அங்கத்தவர்கள் மற்றும் அலுவலர்களுக்காக நடாத்தியது. 2014 ஆம் ஆண்டில் அத்தகைய 48 நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன.



உள்ளூர் அதிகார சபைகளின் உறுப்பினர்கள் மற்றும் அலுவலர்களுக்கான வழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம்

மாவட்ட செயலக பதவியினர், அரசாங்க அலுவலர்கள், மாவட்ட உதவிப் பணிப்பாளர்கள், மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவியாளர்கள் போன்றவர்களுக்கு யாழ்ப்பாணம், வவுனியா, அனுராதபுரம், கொழும்பு ஆகிய மாவட்டங்களுக்காக 3 சம்பவ கட்டளை முறைமை பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன.



துல்ஹிரியவில் சம்பவ கட்டளை முறைமை நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்துதல்

5.4.4 மதசார் சமுகத்திற்கான திறன் கட்டியெழுப்புகை

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் விழிப்புணர்வுப் பிரிவு 2014 ஆம் ஆண்டில் மதசார் சமுகத்தின் திறன்களை வலப்படுத்துவதற்கும் நிதிகளை ஒதுக்கியது. மதசார் சமுகத்திற்காக குருநாகல், கேகாலை, கம்பஹா, களுத்துறை, இரத்தினபுரி, காலி, பதுளை, மொனராகலை, அம்பாறை மற்றும் வவுனியா மாவட்டங்களிலுள்ள அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு பிரிவுகளினூடாக 10 திறன் கட்டியெழுப்புகை நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன.



மதசார் சமுகத்திற்காக விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்

5.4.5 அனர்த்த நெருக்கடி கூடிய பிரதேசங்களில் பெண்களின் திறன்களைக் கட்டியெழுப்புதல்

யாழ்ப்பாணம், மன்னார், குருநாகல், நுவரெலிய, மாத்தளை, பதுளை, மொனராகலை, வவுனியா, முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் அனர்த்த நெருக்கடி வாய்ப்புக்கூடிய கிராமங்களிலுள்ள பெண்களின் திறன்களை மேம்படுததுவதற்காக 10 விசேட விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன.



அம்பாறை மாவட்டத்தில் விசேட பெண் நிகழ்ச்சித்திட்டம்

5.5 பாடசாலை ஆசியரியர் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

ஆரம்பத்திலிருந்தே அனர்த்த முகாமைத்துவ நிலையத்ததினால் பாடசாலை ஆசிரியர்கள் தொடர்ந்தும் பயிற்சிக்கு உட்படுத்தப்பட்டு வந்திருக்கின்றனர். 2014 ஆம் ஆண்டில் பாடசாலை ஆசிரியர்களுக்கு 50 பயிற்சி நிகழ்ச்சிகளும் பாடசாலை சிறுவர்களுக்கு 55 பயிற்சி நிகழ்ச்சிகளும் நடாத்தப்பட்டிருக்கின்றன.



பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்

5.6 அனர்த்த முகாமைத்துவ கிராமக் குழுக்களுக்கான திறன் கட்டியெழுப்புகை

கிராம மட்டத்தில் அனர்த்த பதிலளிப்பு செயற்பாடுகளை அமுல்படுத்துவதற்காக அனர்த்த முகாமைத்துவ கிராம குழுக்கள் தாபிக்கப்பட்டிருப்பதோடு குழு

உறுப்பினர்களின் திறன்களைக் கட்டியெழுப்புது கீழே காட்டப்பட்டவாறு தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டுள்ளது:

- முதலுதவி மற்றும் முகாம் முகாமைத்துவம் தொடர்பான பயிற்சி 85 நிகழ்ச்சித் திட்டங்கள்
- இரத்தினபுரி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை, பொலன்னறுவை, அனுராதபுர மாவட்டங்களில் படகு கையாளல் தொடர்பான 5 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்
- காலி, ஹம்பாந்தோட்டை, மாத்தறை, மாத்தளை, மட்டக்களப்பு மற்றும் பொலன்னறுவை மாவட்டங்களில் தேடல் மற்றும் மீட்டல் பணி தொடர்பான 5 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்



முதலுதவி மற்றும் படகு கையாளல் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்

5.7 தொண்டர்க் குழுக்களின் தாபிதம்

அனர்த்த முகாமைத்துவத்துக்கான தேசிய பேரவையின் தீர்மானத்திற்கமைய கல்வி அமைச்சின் அனுசரணையுடன் 15 பாடசாலை தொண்டர் குழுக்கள் தாபிக்கப்பட்டுள்ளன. 2013 ஆம் ஆண்டில் 25 மாவட்டங்களிலும் 25 மாணவர் பாடசாலைத் தொண்டர்குழுக்கள் தாபிக்கப்பட்டன. 2014 ஆம் ஆண்டில் 25 பாடசாலை தொண்டர்க் குழுக்களும் 24 இளைஞர் தொண்டர்க் குழுக்களும் கல்வி அமைச்சினதும் இளைஞர் விவகார அமைச்சினதும் அனுசரணையுடன் தாபிக்கப்பட்டன.

இளைஞர் மற்றும் பாடசாலைத் தொண்டர் குழுக்களின் தாபிப்பு

5.8 மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்புக் குழு அங்கத்தவர்களின் திறன் கட்டியெழுப்புகை

தேசிய அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்புக்குழுவினால் மேற்கொள்ளப்படுகின்ற செயற்பாடுகளுடன் இணைந்ததாக மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்புக்

குழுக்களின் அங்கத்தவர்களின் திறன் கட்டியெழுப்புகை மற்றும் அறிவு மேம்பாட்டுக்காக 2014 ஆம் ஆண்டில் நிதிகள் ஒதுக்கப்பட்டன. அத்தகைய நிகழ்ச்சித் திட்டங்கள் 2014 ஆம் ஆண்டில் அனைத்து 25 மாவட்டங்களிலும் நடாத்தப்பட்டன.

5.9 தேசிய மற்றும் உள்ளூர் கண்காட்சிகளினூடாக பொதுமக்கள் விழிப்புணர்வு

பின்வரும் மாவட்டங்களில் நடத்தப்பட்ட தேசத்திற்கு மகுடம் கண்காட்சி உள்ளிட்ட பல்வேறு தேசிய உள்ளூர் மற்றும் பாடசாலை மட்ட கண்காட்சிகளை பயன்படுத்தி அனர்த்தங்களின் பல்வேறுபட்ட அம்சங்கள் தொடர்பில் நாட்டிலுள்ள மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது.

- கொழும்பு
- ஹம்பாந்தோட்டை
- கம்பஹா
- அனுராதபுரம்
- குருநாகல்



5.10 நடமாடும் வாகனங்களினூடான பொதுமக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள்



பொதுமக்களிடையே அனர்த்த முகாமைத்துவம் தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு அனர்த்த முகாமைத்துவ நிலையம் நடமாடும் வாகன நிகழ்ச்சித் திட்டத்தை பயன்படுத்தியிருக்கின்றது. 2014 ஆம் ஆண்டில் கம்பஹா, களுத்துறை, குருநாகல் மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டங்களில் அதிக அனர்த்தத்திற்கு உட்படத்தக்க பிரதேசங்களை

மையப்படுத்தி விசேட கவனத்துடன் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன. நடமாடும் வாகனங்களினூடாக பானந்துறை ஈக்ஸ் சர்வதேச பாடசாலையில் மாணவர்கள் பாடசாலை சிறுவர் விழிப்புணர்வு

5.11 *விழிப்புணர்வு* பொருட்களை அச்சிடுதல்

விழிப்புணர்வுப் பிரிவானது துண்டுப் பிரசுரம், குறும்படங்கள், இருவட்டு, டீவீடீ, வரைபடங்கள், திட்டங்கள், சிறு துண்டு பிரசுரங்கள், கைநூல்கள் போன்ற பொது மக்களிடையேயும் பங்குதாரர்கள் இடையேயும் மற்றும் பாடசாலை மாணவர்களிடையேயும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக பயிற்சி மற்றும் பொது மக்கள் விழிப்புணர்வு பொருட்களை வடிவமைத்து அச்சிடுவதற்குப் பொறுப்பாகவுள்ளது. பின்வரும் பொருட்கள் தேசிய மற்றும் உள்ளூர் மட்ட கண்காட்சிகளில் மாவட்ட அனர்த்த முகாமைத்து ஒருங்கிணைப்பு குழுக்களிலும் ஏனைய நிகழ்ச்சிகளும் வடிவமைக்கப்பட்டு விநியோகிக்கப்பட்டன.



அச்சிடப்பட்ட DVD **மற்றும் ஏனைய பொருட்கள்**

5.12 வெளிநாட்டு பயிற்சியும் செயலமர்வுகளும்

நாட்டில் அனர்த்த முகாமைத்துவ செயன்முறையை அமுல்படுத்துவதற்கு சர்வதேச அமைப்புக்கள் நிறுவனங்களுடன் தொடர்புபடுதலும் சர்வதேச அறிவையும் அனுபவங்களையும் பெறுவது முக்கியமானதாகும். அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் அலுவலர்கள் நேபாளம், இந்தியா, தாய்லாந்து, சுவீட்சர்லாந்து, மாலைதீவு, இந்துநேசியா, பங்களாதேஷ், கொரியா, சீனா, ஒஸ்ரியா, ஹவாய் மற்றும் பிலிப்பின் போன்ற நாடுகளில் சர்வதேச நிறுவனங்களினால் நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் செயலமர்வுகள் கருத்தரங்குகள் மற்றும் மாநாடுகளில் கலந்து கொள்வதற்கும் அவற்றுக்கு விஜயம் செய்வதற்கான வாய்ப்பைப் பெற்றன.


6. தயார்நிலைத் திட்டமிடல் பிரிவு

6.1 அறிமுகம்

தயார்நிலை பிரிவானது மாவட்ட பிரதேச மற்றும் கிராம மட்டங்களில் அனர்த்த தயார்நிலை மற்றும் அவசர பதிலளிப்புத் திட்டங்களை தயாரிப்பதில், தேசிய அனர்த்த முகாமைத்துவ திட்டங்களை தயாரிப்பதில் உதவுவது தேசிய அனர்த்த முகாமைத்துவ திட்டங்களை பிரதானமாக ஒருங்கிணைப்பதற்கு ஒருங்கிணைக்கப்பட்டும் வழிகாட்டல்களை வழங்குவதற்கும் அத்துடன் சமுக மட்ட அனர்த்த முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டங்களை ஒருங்கிணைப்பதிலும் பங்களிப்பு செய்கின்றது. அனைத்து அரச துறை நிறுவனங்களுக்கும் அனர்த்த முகாமைத்துவ திட்டங்களை பூர்த்தி செய்ய உதவியளித்தலும் மாவட்ட பிரதேச மற்றும் வடுப்பட்ட கிராம மட்ட பிரிவுகளின் அனர்த்த முகாமைத்துவ திட்டங்களைத் தயாரித்தலும் மற்றும் அரச துறை நிறுவனங்களில் தயாரித்தலும் 2015 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, அனர்த்த முகாமைத்துவ சட்டத்திற்கு இயைபானதாகும். வெள்ளம், மண்சரிவு, சுனாமி, சூறாவளி போன்ற இலங்கையில் அடிக்கடி ஏற்படும் ஆபத்துக்களுக்கான அனர்த்த தயார்நிலைத் திட்ட செயற்பாடுகளை மேற்கொள்ளுதல் என்பனவும் அனர்த்த தயார் நிலை திட்டமிடல் பிரிவினால் மேற்கொள்ளப்படும் திட்டமிடல் செயற்பாடுகளில் ஒன்றாகும்.

2014 ஆம் ஆண்டில் அனர்த்த முகாமைத்துவ நிலையம் 25 மாவட்டங்களிலும் தயார்நிலை திட்டமிடல் செய்றபாடுகளுக்காக ரூபா **9,228,000.00** தொகையொன்றை ஒதுக்கியது. நிதிகள், நிலவுகின்ற அனர்த்தங்களுக்கான முன்னுரிமையின் படி நிகழ்ச்சித் திட்ட வேண்டுதல்களின் முக்கியத்துவத்தினைக் கருத்திற்கொண்டு வழங்கப்பட்டிருக்கின்றன.

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் தயார்நிலைத் திட்டமிடல் பிரிவானது மாவட்ட பிரதேச மற்றும் கிராம சேவைகள் மட்டங்களில் அனர்த்த முகாமைத்துவ சேவை பொறிமுறை பலப்படுத்துவற்கு மாவட்டங்களுக்கான பல்வேறு தயார்நிலை திட்டங்கள் செயற்பாடுகளுக்காக நிதிகளை ஒதுக்கியது. நிதிகள் பங்காளர் கூட்டங்கள் அனர்த்த முகாமைத்துவ திட்டங்கள் தயாரிப்பு செயலமர்வுகள் உறுதியான நகர நிகழ்ச்சித் திட்டத்திற்கான திட்டங்களை அச்சிடுதல் போன்றவற்றுக்காகவும் வழங்கப்பட்டன. சுனாமி, வெள்ளம், சமுக மட்ட CDPR நிகழ்ச்சத்திட்டம், அபாய வரைபடமிடல், வடுப்படுநிலை பகுப்பாய்வு, கிராம மட்டக் குழுக்களின் தாபிதம், அணை உடைப்பு மற்றும் அவசர நிலைமைகளில் பாதிக்கப்பட சமுகத்திற்கான தயார் நிலைத் திட்டங்களின் தயாரிப்பு போன்றவை கிராம மட்டத்தில் கிராம சேவகர் மட்டத்ததில் நிதியளிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களாகும்.




உரு 6.1 செயற்பாடுகளுக்கான ஒதுக்கீடுகள்

- மாவட்ட அ.மு. திட்டங்களின் மீளாய்வு 6%
- பிரதேச ஆரம்ப முன்னெச்சரிக்கை முறைமை 5%
- பிரதேச இறுதி முன்னெச்சரிக்கை முறைமை 12 %
- கி.சே.மட்ட அ.மு. திட்டங்களின் தயாரிப்பு 11%
- அபாய எச்சரிக்கை, விழிப்புணர்வு, ஆபத்து வரைபடமிடல் 36%
- அணைகளுக்கான அவரச பதிலளிப்பு திட்டங்கள் 9%
- மாவட்ட மட்ட அ.மு. குழு கூட்டங்கள் 3%
- நீரில் மூழ்குதலை குறைத்தல் 8%
- பிரதேச அ.மு. திட்டங்களின் அச்சிடுகை 7%
- நிலையான நகர நிகழ்ச்சித்திட்டம் 3%

6.2. கிராம சேவகர் மட்டத்தில் நடத்தப்பட்ட அபாய எச்சரிக்கை நிகழ்ச்சித் திட்டங்கள்

2014 ஆம் ஆண்டில் நாட்டின் 14 சுனாமி அச்சுறுத்தல் உள்ள மாவட்டங்களில் சுனாமி வெளியேற்றுகை எச்சரிக்கை நிகழ்ச்சித் திட்டங்கள் கிராம சேவகர் மட்டத்தில் அபாய எச்சரிக்கை நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன. அத்துடன் 14 சுனாமி நிகழத்தக்க மாவட்டங்களில் நடாத்தப்பட்ட மொத்த அபாய எச்சரிக்கை நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிகை 247 ஆகும். இதற்கு மேலதிகமாக மண்சரிவு மற்றும் வெள்ளப் பாதிப்பு உள்ள மாவட்டங்களில் கிராம சேவகர் பிரிவு மட்டத்தில் 23 மண்சரிவு நிகழ்ச்சித் திட்டங்களும் 39 வெள்ள அபாய எச்சரிக்கை நிகழ்ச்சித் திட்டங்களும் நடாத்தப்பட்டன. 2014 ஆம் ஆண்டில் தேசிய அபாய எச்சரிக்கையும் 3 தடவைகளில் மிகவுமே பாதிக்கப்பட்ட சமுகத்திற்காக

நடாத்தப்பட்டதோடு அனைத்தும் இயற்கை ஆபத்துக்கு பாதுகாப்பையும் உறுதிப்படுத்துதலும் வேண்டும். 2014 ஆம் ஆண்டில் அபாய எச்சரிக்கை நிகழ்ச்சித் திட்டத்திற்காக ரூபா 359,000 தொகையொன்று ஒதுக்கப்பட்டுள்ளது.



உரு 6.2 மாவட்ட மட்டத்தில் நடாத்தப்பட்ட சுனாமி அபாய எச்சரிகையின் சுருக்கம்




ஹம்பாந்தோட்டையில் நடாத்தப்பட்ட சுனாமி வெளியேற்றல் அபாய எச்சரிக்கை நிகழ்ச்சித்திட்டம்

சுனாமி அபாய எச்சரிக்கை நிகழ்ச்சித்திட்டத்திற்கு மேலாக வெள்ளம் மற்றும் மண்சரிவு அபாயம் உட்பட்ட பிரதேசங்களிலுள்ள பாதிக்கப்படக் கூடிய சமுகங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக உள்ளூர் மட்ட பங்காளர்களின் ஆதரவுடன் நடாத்தப்பட்டன.

அட்டவணை 2014 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட வெள்ளம் மற்றும் மண்சரிவு அபாய எச்சரிக்கை நிகழ்ச்சித் திட்டங்கள்

மாவட்டம்	வெள்ள எச்சரிக்கை நிகழ்ச்சித் திட்டம்	மண்சரிவு எச்சரிக்கை நிகழ்ச்சித் திட்டம்	நிதி
கண்டி	01	03	40,000.00
நுவரெலியா		05	50,000.00
பதுளை	01	04	50,000.00
மாத்தளை		05	50.000.00
கேகாலை		04	40,000.00
இரத்தினபுரி	06	01	70,000.00
குருநாகல்	03		30,000.00
அனுராதபுரம்	04		40,000.00
பொலன்னறுவை	03		30,000.00
மொனராகலை	02	01	30,000.00
மன்னார்	01		10,000.00
வவுனியா	04		40,000.00
கம்பஹா	05		50,000.00
முல்லைத்தீவு	01		10,000.00
கிளிநொச்சி	01		10,000.00
வவுனியா	04		40,000.00
ஹம்பாந்தோட்டை	01		10,000.00
காலி	01		10,000.00
மாத்தறை	01		10,000.00
மொத்தம்	**39**	**23**	**620,000.00**

அட்டவணை 6.1 வெள்ள மற்றும் நிலச்சரிவு ஒத்திகைகள் 2014



நுவரெலிய மாவட்டத்தின் பல்வதுர கிராம சேவகர் பிரிவில் நடாத்தப்பட்ட மண்சரிவு எச்சரிக்கை நிகழ்ச்சித் திட்டம்

6.3 பாரிய அணைகளோடு தொடர்புடைய அனர்த்தங்களுக்கான தயார்நிலை செயற்பாடுகள்

சூறாவளி, அதிகரித்த மழை அல்லது புவி நடுக்கம் போன்றவற்றின் காரணமாக ஏற்படத்தக்க அனர்த்தங்களோடு தொடர்புடைய அணையோடு சாத்தியப்படத்தக்க தெரிவு செய்யப்பட்ட பிரதான அணை சார்ந்து வாழ்கின்ற சமுகங்களின் திறன் தயார்நிலை மேம்படுத்துவற்கு அனர்த்த முகாமைத்துவ நிலையம் நிகழ்ச்சித் திட்டமொன்றை முன்னெடுத்துள்ளது. நிகழ்ச்சித் திட்டமானது SAR முதலுதவி முகாம் முகாமைத்துவம் கிராம பாதுகாப்பு, முன்னாயத்த எச்சரிக்கை, பரப்புகை பொறிமுறையை விருத்தி செய்தல், நீரினால் மூழ்கக் கூடிய பகுதிகளை வரைபடமிடல், அடையாள பதாகைகளை காட்சிப்படுத்துதல், அவசர வெளியேற்றல் முன்னெச்சரிக்கைகளை நடாத்துதல் போன்ற உப குழுக்களை பாதிக்கப்பட்ட சமுகங்களுக்கிடையே அமைப்பதற்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களையும் கொண்டிருந்தது.



அணைக்கட்டு பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டம் இரத்தினபுரி

மாவட்டம்	நிதி ஏற்பாடு (ரூபா)	நிகழ்ச்சித் திட்டம்
பொலன்னறுவை	45,000.00	03
நுவரெலியா	90,000.00	06
நுவரெலியா	105,000.00	07
கண்டி	90,000.00	06
அம்பாறை	15,000.00	01
பதுளை	45,000.00	03
மாத்தளை	30,000.00	02
இரத்தினபுரி	45,000.00	03
குருநாகல்	45,000.00	03
புத்தளம்	30,000.00	02
மட்டக்களப்பு	30,000.00	02
களுத்துறை	30,000.00	02
முல்லைத்தீவு	30,000.00	02
கிளிநொச்சி	15,000.00	01
வவுனியா	15,000.00	01
ஹம்பாந்தோட்டை	45,000.00	03
மொத்தம்	**705,000.00**	**47**

அட்டவணை 6.2: மாவட்டரீதியாக மேற்கொள்ளப்பட்ட அணை பாதுகாப்பு நிகழ்ச்சிதிட்டங்களின் சுருக்கம்

6.4. மாவட்ட அனர்த்த முகாமைத் திட்டங்களின் அபிவிருத்தி

அனர்த்த தயார்நிலைத் திட்டமென்பது அனர்த்தங்கள் நடக்கின்றபோதும் அதன் பின்னரும் அனர்த்தங்களுக்கு பதிலளிப்பதற்கான மாவட்ட மட்ட பொறிமுறையொன்றை தாபிப்பதற்கு உதவும் ஒரு தொழிற்பாட்டு ஆவணமாகும். மாவட்ட அனர்த்த ஒருங்கிணைப்புக் குழுவானது மாவட்டமொன்றில் அனர்த்தங்களுக்கான பதிலளிப்புக்குள்ள அதிஉச்ச முகாமைத்துவக் குழுவாகும். குழுவின் அங்கத்தவர்களும் உபகுழுக்களும் அவற்றின் பங்களிப்புக்களும் பொறுப்புக்களும் திட்டத்தில் பட்டியலிடப்பட்டிருக்கின்றன. இந்த திட்டங்கள் நிருவாகத் துறை சார்ந்த தகவல்கள் நிகழத்தக்க ஆபத்துக்கள் ஆபத்தொன்றின் பெறுபேறுகள் நிகழ்த்தப்பட்ட மோசமான தன்மையிலான மதிப்பீடுகள் ஒரு முக்கிய தளத்தின் தொடர்பு விபரங்கள் பிரதேசத்தில் காணப்படுகின்ற மனித மற்றும் பௌதீக மூல வளங்கள் அனர்த்த பதிலளிப்பு பொறிமுறையொன்றில் சம்பந்தப்பட்ட பல்வேறு பட்ட பங்குதாரர்களின் பொறுப்புக்கள் போன்றவற்றைக் கொண்டிருக்கும்.

2014 ஆம் ஆண்டின் டிசெம்பர் இறுதியளவில் 25 மாவட்ட அனர்த்த முகாமைத்துவத் திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கின்றன. 11மாவட்ட அனர்த்த முகாமைத்துவத் திட்டங்கள் மீள் திருத்தப்பட்டு புதிய தகவல்களுடன் பங்குதாரர்களிடையே அச்சிடப்பட்டு விநியோகிக்கப்பட்டிருக்கின்றன.

6.5. பிரதேச அனர்த்த முகாமைத்துவத் திட்டங்கள்

2014 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட ஏற்பாடுகளின் கீழ் பிரதேச மட்ட அனர்த்த முகாமைத்துவத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. பிரதேச அனர்த்த முகாமைத்துவத் திட்டங்களை அறிமுகப்படுத்தி தயார்படுத்துவதற்காக **24** ஆரம்ப செயலமர்வுகள் நடாத்தப்பட்டிருக்கின்றன. பங்குதாரர்களிடையே பிரதேச அனர்த்த முகாமைத்துவ திட்டங்களின் இறுதி வரைவை முன்வைப்பதற்கு **48** செயலமர்வு நடாத்தப்பட்டிருக்கின்றன.



வவுனியாவில் பிரதேசமட்ட அனர்த்த தயார்நிலைத் திட்டங்கள்

இதன் வண்ணம் **44** திட்டங்கள் பங்குதாரர்களிடையே அச்சிடப்பட்டு விநியோகிக்கபடப்டிருக்கின்றன. சுமார் ரூபா **2,161,000.00** தொகையொன்று பிரதேச முகாமைத்துவ அனர்த்த முகாமைத்துவ தயார்நிலைக்காக செலவிடப்பட்டிருக்கின்றது.

இல.	மாவட்டம்	ஆரம்ப செலமர்வு		இறுதி செயலமர்வு	
		செயலமர்வுகளின் எண்ணிக்கை	பிரதேச செயலகம்	செயலமர்வுகளின் எண்ணிக்கை	பிரதேச செயலகம்
1	கொழும்பு			2	மஹரகம, ஜயவர்தனபுர கோட்டே
2	கம்பஹா				
3	காலி	1	ஹிக்கடுவ	3	இமதுவ, ஹாராடுவ, பத்தேகம
4	மாத்தறை	2	கிரின்டா, பிடகட்டர	1	அதுரலிய
5	கண்டி	2	பஹதஹேவாஹெட்ட பாததும்பர	3	மினிபே, தும்பனே, அகுரண
6	மாத்தளை	2	நாஉல ரத்தோட்ட	1	நஉல
7	கேகாலை			6	யடியன்தோட்டே, வரகாபொல, கலிகமுவ, மாவனெல்ல, கேகாலை, ரம்புக்கென
8	இரத்தினபுரி			02	இபுல்பே, கிரில்ல
9	குருநாகல்			08	இப்பாகமுவ, மஹாவ, உடுபத்தாவ, அபன்பொல, கல்கமுவ, வாரியபொல, கொடவேஹர, குளியாபிட்டி
10	அனுராதபுரம்	01	பலுகஸ்வவ		
11	பொலன்னறுவை				
12	மன்னார்			2	மடு மற்றும் மன்னார்
13	புத்தளம்			2	பல்லேகம, ஆனமடுவ
14	திருகோணமலை	3	சேருவில மூதூர், கந்தளாய்		
15	மட்டக்களப்பு			1	kPW DS
16	அம்பாறை			1	தமன

17	மொனராகலை				
18	யாழ்ப்பாணம்	4	சங்காணி, சண்டில்பாய் காரைநகர், வேலணை	4	ஊறுகாவற்றுறை, பருத்தித்துறை, மருதங்கேணி, சங்காணி
19	முல்லைத்தீவு	4		4	
20	கிளிநொச்சி	1	கிளிநொச்சி	2	கரச்சி,பூநகரி
21	வவுனியா	2	வவுனியா தெற்கு மற்றும் வடக்கு	2	வவுனியா தெற்கு மற்றும் வடக்கு
22	ஹம்பாந்தோட்டை	1	தங்கல்ல		
23	களுத்துறை			4	பலிந்தநுவர, புலத்சிங்கள, மில்லனிய, மதரவெல
	மொத்தம்	24		48	

அட்டவணை 6.3: பிரதேச முகாமை அனர்த்த முகாமைத்துவத் திட்டங்களைத் தயாரிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட பிரதேச செயலகங்கள் மட்டத்திலான செயலமர்வுகள்

6.6. கிராம சேவகர் மட்ட சமுக அனர்த்த முகாமைத்திட்டங்களின் உறுதி (DMPs)

கிராம சேவகர் பிரிவு மட்டத்தை சுமார் 192 அனர்த்த முகாமைத்துவ திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கின்றன. கிராமங்களில் நிலவுகின்ற அபாயகரமான பல்வேறு அனர்த்த நிலைகளைக் கருத்திற்கொண்டே இது செயற்படுத்தப்பட்டிருக்கின்றது. சமுக பங்கேற்பும் சமுக மட்ட ஆபத்து வரைபடமிடலும் கிராம மட்ட திட்டமிடல் செயன்முறையின் பிரதான செயற்பாடுகளாகும். மேலும் அவர்கள் சமூக மட்ட ஆபத்து வரைபடமிடலின் தயார்நிலை, அடையாளமிடுதல், வெளியேறும் பாதைகளை அடையாளங்காணுதல், பாதுகாப்பான இடங்கள், முதலுதவி, உள்ளக ரீதியாக இடம்பெயர்ந்தோர்களுக்கான முகாங்களை அமைத்தலும் முகாமைத்துவம் செய்தலும் போன்ற துறைகளில் பயிற்சியளிக்கப்பட்டிருக்கின்றனர்.





வவுனியா மாவட்டத்தில் கிராம சேவகர் பிரிவு மட்ட தயார்நிலை திட்டமிடல் செயற்பாடுகள்

6.7. நிரந்தர நகர நிகழ்ச்சித்திட்டம்

ஐக்கிய நாடுகள் சபையின் ISDR தேவைப்பாடுகளாக இரண்டு பிரதான கட்டங்களில் இது முன்னெடுக்கப்படுகின்றது. அதாவது, உள்ளூர் அரசாங்கங்களினால் நிரந்தர நிகழ்ச்சித்திட்டம் ஆரம்ப கட்டம் உள்ளூராட்சி மன்றத்திற்கான செயற்பாட்டுத்திட்டங்களை அமுல்படுத்துதலும் மற்றும் கண்காணித்தலும் அமுலாக்கத்திட்ட கட்டமைப்பு இதன் நோக்கத்திற்காக 10 விடய சரிபார்ப்பு பட்டியலுக்கு Hyogo சட்டக செயற்பாட்டின் அமுலாக்கல் வழிகாட்டியொன்றும் உள்ளூர் பங்குதாரர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றது.

ஆரம்ப நிலையான நிகழ்ச்சித் திட்டம் யாழ்ப்பாண நகர சபையில் நடாத்தப்பட்டது. நகர அனர்த்த அபாயங்களை குறைப்பதற்கும் பிரஜைகளின் நலன்களை மேம்படுத்துவதற்குமான நோக்கில் ஆரம்ப கட்ட நிலையான நகர நிகழ்ச்சித் திட்டங்கள் யாழ்ப்பாண நகர சபை (4 செயலமர்வுகள்) கம்பொல நகர சபை (02 செயலமர்வுகள்), புத்தளம் நகர சபை (02 செயலமர்வுகள்) மற்றும் பானந்துறை நகர சபை (02 செயலமர்வுகள்) ஆகியன நடாத்தப்பட்டன. நிகழ்ச்சித் திட்டமானது, அடிமட்ட வலைப்பின்னலின் தேசிய அதிகாரசபைகள் உள்ளூர் சமுகங்கள் சேர்ந்து பணியாற்றுவற்கு உள்ளூர் அதிகாரசபைகளை ஊக்குவிக்கும் நோக்குடன் செயற்படுகின்றது.

6.8. நாட்டில் நீரில் மூழ்குதல் காரணமாக ஏற்படும் மரணங்களைத் தடுத்தல்

இலங்கையில் கடந்த சில ஆண்டுகளாக நீரில் மூழ்குவதனால் ஏற்படும் மரணங்கள் அதிகரித்துவரும் போக்கொன்றை அறிக்கைகள் காட்டுகின்றன. இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கம் யாதெனில் அத்தகைய பாதிக்கப்படத்தக்க பகுதிகளில் அடையாடப் பதாகைகளைத் தாபிப்பதும் அதனூடாக அபாயகரமான அறியப்படாத குட்டைகள், ஆறுகள், வாவிகளில் குளிப்பதையிட்டு மக்களை எச்சரிப்பதுமாகும். இந்த அடையாள பதாகைகள் கொழும்பு, காலி, கம்பஹா, களுத்துறை, அம்பாறை, ஹம்பாந்தோட்டை, இரத்தினபுரி, மொனராகலை, மாத்தறை, அனுராதபுரம், பொலன்னறுவை, திருகோணமலை, பதுளை, கண்டி மற்றும் மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் தாபிக்கப்பட்டிருக்கின்றன.



நீரில் மூழ்கி மரணமடைதலை குறைப்பதற்கான சமிக்ஞைகளை காட்சிப்படுத்தல்

6.9. தயார்நிலை திட்டமிடல் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட விசேட கருத்திட்டங்கள்




2014 இல் குளியாப்பிடிய தேசத்திற்கு மகுடம் கண்காட்சியில்

7. அவசர தொழிற்பாடுகள் நிலையம்

7.1 அறிமுகம்

அவசர தொழிற்பாடுகள் நிலையமானது 2006 **ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்டதோடு இது நாளின்** 24 மாணித்தியாலங்களிலும் வாரத்தின் 7 நாட்களிலும் செயற்படுகின்றது. அவசர தொழிற்பாட்டு நிலையமானது இடம்பெறத்தக்க இயற்கை அனர்த்தங்கள் பற்றிய ஆரம்ப எச்சரிக்கைத் தகவல்களை தொழில்நுட்ப முகவராண்மைகளிலிருந்து பெறுவதோடு சம்பந்தப்பட்ட பகுதி தரப்பினருக்கு அதை பரப்புகை செய்து, நிலைமையை தொடர்ந்தும் கண்காணித்து வருகின்றது. அனர்த்த முகாமைத்துவ நிலையம் இயற்கைசார்ந்த மற்றும் மனிதன் உருவாக்கிய அனர்த்தங்கள் தொடர்பான நாடளாவிய அனைத்து தகவல்களையும் திரட்டி பேணிவருவதோடு ஒரு தினசரி நிலைமை அறிக்கையொன்றையும் தயாரிக்கின்றது. இந்த அறிக்கையானது அதிமேதகு சானாதிபதியின் செயலாளர் அனர்த்த முகாமைத்துவ அமைச்சுக்கான செயலாளர் அனைத்து ஊடகங்கள் மற்றும் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு முன்வைக்கப்படுகின்றது. இயற்கை அல்லது மனித ரீதியான அனர்த்தம் ஏற்படுகின்ற போது அனர்த்த முகாமைத்துவ நிலையமானது மீட்பு பணிகளை ஒருங்கிணைத்து, வளங்களை இயக்குவித்து, இராணுவம் பொலிஸ் மற்றும் சம்பந்தப்பட்ட தரப்பினருடன் அவசர நிவாரண வழங்கள் உதவிகளை ஒருங்கிணைப்பு செய்கின்றது. இந் நிலையமானது மேம்படுத்தப்பட்ட வசதிகளுடன் கொழும்பு 07 வைத்திய மாவத்தையில் அமைந்துள்ள புதிய கட்டிடத்தில் இயங்கி வருகின்றது.



7.2 பிரதான அனர்த்தங்களுக்கான அவசர பதிலளிப்பு

7.2.1 வரட்சியினால் பாதிக்கப்பட்ட மக்கள்

2014 யூலை முதல் செப்டெம்பர் வரை சுமார் 17 மாவட்டங்களில் வரட்சி காரணமாக சுமார் மொத்தம் 1,495,082 பேர் பாதிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது. அவசர தொழிற்பாட்டு நிலையமானது தேசிய அனர்த்த மீட்பு மற்றும் பாதுகாப்பு நிலையத்துடனும் மாவட்ட ஒருங்கிணைப்பு பிரிவுகளுடனும் ஒருங்கிணைந்து குடிநீரை பவுசர்களினூடாக வழங்குவதோடு பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வினைத்திறன்மிக்க நீர் விநியோகத்தை உறுதிப்படுத்துவதற்குமாக செயற்படுகின்றது.

7.2.2 வெள்ளத்தின்போது பாதிக்கப்படுகின்ற மக்கள்

2014 ஜனவரி முதல் டிசெம்பர் வரையான காலப்பகுதியில் வெள்ளத்தின் காரணமாக சுமார் மொத்தமாக 1,171,988 மக்கள் பாதிக்கப்பட்டதாக அறிக்கை செய்யப்பட்டிருக்கின்றது. மாவட்ட ஒருங்கிணைப்பு பிரிவினால் உதவிகள் கோரப்படுகின்றபோது அவசர தொழிற்பாட்டுகள் பிரிவு நிலையம் பொலிஸ் மற்றும் இராணுவ படையைத் தொடர்பு கொண்டு மீட்பு மற்றும் வெளியேற்றல் அவசர நிவாரண சேவைகள் தொழிற்பாடுகளை ஒருங்கிணைப்புச் செய்கின்றது. அவசர தொழிற்பாடுகள் நிலையமானது தேசிய அனர்த்த பாதுகாப்பு நிலையத்துடனும் பிரதேச செயலாளர்கள் கிராம சேவையாளர்களுடனும் ஒருங்கிணைந்து பாதிக்கப்பட்ட மக்கள் கவனமாகவும் பாதுகாப்பான இடங்களில் வைக்கப்பட்டுள்ளார்கள் என்பதை உறுதிப்படுத்துவதற்கு தேவையான பொருட்களையும் உணவுகளையும் வழங்குகின்றது.



அ.மு.நி பௌசர்களினால் தெனகவில கி.சே. பிரிவில் நீர் வினியோகம், (மொனறாகலை மாவட்டம்) .

7.2.3 மண்சரிவும் வெட்டுதலும்

பலத்த மழைவீழ்ச்சி காரணமாக 2014 ஆம் ஆண்டில் சுமார் 8 மண்சரிவு மற்றும் சரிந்த வீடுகள் சம்பவங்கள் அறிக்கை செய்யப்பட்டுள்ளதோடு இதன் மூலம் 30 மரணங்கள் அறிக்கை செய்யப்பட்டிருக்கின்றன. அனர்த்த முகாமைத்துவ நிலையமானது ஊடாகங்களினூடாக மண்சரிவு இடம்பெறக்கூடிய இடங்களிலிருந்து பலத்த மழையின்போது பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேறுமாறு ஊடகங்களினூடகா பொதுமக்களுக்கு அறிவுறுத்தியுள்ளது. இந்த பகுதிகள் தொடர்பில் பொதுமக்களை அறிவுட்டுவதற்காக விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களும் நடாத்தப்பட்டன. இலங்கை இராணுவத்தின் வேண்டுதலின் பேரில் எச்சரிக்கையொன்றில் மண்சரிவு அனர்த்தத்திற்குட்படக்கூடிய பகுதிகளில் மக்களை வெளியேற்றுவதற்கு விரிவான திட்டமொன்றை செய்றபடுத்தியுள்ளது.




2014 ஒக்டோபர் 29 ஆம் திகதி பதுயை மீரியாபெத்த மண்சரிவில் மீட்புப் பணிகள்

7.2.4 பலமான காற்று

2014 ஆம் ஆண்டில் 25 பலத்த காற்றுச் சம்பவங்கள் அறிக்கை செய்யப்பட்டிருப்பதோடு இதன் மூலம் 2 மரணங்கள் ஏற்பட்டதோடு 13,907 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அனர்த்த முகாமைத்துவ நிலையமானது மீட்புத் தொழிற்பாடுகள், வீதி சுத்தப்படுத்தல்கள், தொடர்பாடல்களை மீளக்கட்டியமைத்தல், மின் இணைப்புக்களை மீளக் கட்டியமைத்தல் போன்றவற்றை ஒருங்கிணைக்க முடியுமாக இருப்பதோடு தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையம் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு என்பவற்றின் உதவியுடன் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணங்களை வழங்க முடியுமாக இருந்தது. அனர்த்த முகாமைத்துவ நிலையம் பருவாகல காற்றுக்கு முன்னர் தமது வீடுகளுக்கு அருகிலுள்ள ஏதாவது அபாயகரமான மரங்கள் அவற்றின் கிளைகளின் பகுதிகளிலிருந்து அகன்று செல்லுமாறு ஊடகங்களினூடகாக பொதுமக்களுக்கு அறிவுறுத்தல் விடுத்தது.

7.2.5 வெள்ள மற்றும் ஏனைய அனர்த்த பதிலளிப்பு

செயற்பாடுகளுக்காக அவசர பதிலளிப்பு உபகரணங்களைக் கொள்வனவு செய்தல் பல்வேறுபட்ட அனர்த்தங்களை பகுப்பாய்வு செய்ததன் பின்னர் அவசர பதிலளிப்பு உபகரணங்கள் அவசர தொழிற்பாட்டு தலைப்பின் கீழ் அவசர முகாமைத்துவ நிலையத்தினால் கொள்வனவு செய்யப்பட்டன. இவை 15 வெட்டுவாள்கள், சங்கிலிவாள்கள் 9, சப்டர்கள் 20, நீர்த்தாங்கிகள் எஞ்சின்களுடான, 9 படகுகள் மற்றும் பின்னனினைப்புகள் கொண்ட 3 படகுகள், 20 மின் பிறப்பாக்கிகள் ,2கிலோவோட், 180 உடன் விளக்குகள், 3000 உயிர்காப்பு அங்கீகள், 8571 அனர்த்த முகாமைத்துவ அங்கீகள், 600 நீர்ப் பம்பிகள், 45 கெடமரா ஆகியவற்றை உள்ளடக்குகின்றன.

7.2.6 காற்று மற்றும் நகரத்தீக்கான அவசர பதிலளிப்பு

2014 ஆம் ஆண்டில் 167 காட்டுத் தீ சம்பவங்கள் அறிக்கை செய்யப்பட்டன. வனவளத் திணைக்களம் மற்றும் வனவளத் திணைக்களத்தின் உதவியுடன் காட்டுத் தீயைக் கட்டுப்படுத்துவதற்கு இராணுவம் விமானப்படை பொலிஸ் அதிகாரிகளின் உதவி பெறப்பட்டது. கிராமத்தவர்கள் ஆதனங்களுக்கும் சூழலுக்கும் மக்களுக்கும் ஏற்படக்கூடிய பாரிய சேதத்தைத் தவிர்ப்பதற்கு உதவினர். அனர்த்த அவசர தொழிற்பாட்டு நிலையமானது அனர்த்த முகாமைத்துவ நிலையத்துடன் காணப்படக்கூடிய அனர்த்த முகாமைத்துவ நிலையத்ததின் பயனுரு தொடர்பாடல் வலைப்பின்னலின் காரணமாக உடனடியாக பொலிஸ் விமானப் படை மற்றும் இராணுவத்திடமிருந்து உதவிகளைப் பெற்றுக்கொள்ள முடியுமாக இருந்தது.

7.2.7 மின்னல் தாக்கம்

2014 ஆம் ஆண்டில் 21 மின்னல் தாக்க சம்பவங்கள் அறிக்கை செய்யப்பட்டுள்ளதோடு அதில் 21 மரண சம்பவங்களும் அறிக்கை செய்யப்பட்டுள்ளது. அனர்த்த முகாமைத்துவ நிலையமானது மின்னலின்போது பாதுகாப்பான நடவடிக்கைகளை எடுக்கும்மாறு ஊடகங்களினூடாக பொதுமக்களுக்கு அறிவித்தலை வழங்கியது. மின்னலின் அபாயம் குறித்து மக்களுக்கு அறிவுறுத்துவதற்காக விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களையும் நடாத்தியிருக்கின்றது.

7.3 2014 ஆம் ஆண்டில் இடம்பெற்ற அனர்த்த சம்பவங்களும் அதன் மூலம் ஏற்பட்ட பாதிப்புக்களும்

2014 **ஆம் ஆண்டில் அனர்த்தங்கள் காரணமாக உயிரிழப்புக்கள் காயங்கள் சேதங்கள் பற்றிய ஒரு சுருக்க அட்டவணை** 7.1 **ல் கீழே தரப்பட்டுள்ளது**:

சம்பவம்	மரணங்கள்	காயமடைந்தோர்	காணாமல்போனோர்	அழிவடைந்த வீடுகள்	சேதமடைந்த வீடுகள்	பாதிக்கப்பட்டவர்கள்	பாதிக்கப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை
விபத்து	**0**	**0**	**0**	**0**	**5**	**21**	**5**
விலங்கு தாக்குதல்	**7**	**1**	**0**	**0**	**0**	**0**	**0**
கரையோரப் பாதிப்பு	**0**	**0**	**0**	**1**	**36**	**710**	**170**
மரம் விழுதல்	**3**	**4**	**0**	**5**	**23**	**556**	**140**
வரட்சி	**0**	**0**	**0**	**0**	**0**	**1495082**	**494011**
நீரில் மூழ்குதல்	**20**	**4**	**1**	**0**	**0**	**0**	**0**
தீ	**1**	**5**	**0**	**104**	**33**	**555**	**129**
முழுமையான வெள்ளம்	**0**	**0**	**0**	**0**	**0**	**4**	**21**
வெள்ளம்	**34**	**32**	**3**	**4875**	**15217**	**1171988**	**317080**
மண்சரிவு	**30**	**5**	**31**	**72**	**147**	**13848**	**3791**
மின்னல் தாக்கம்	**21**	**8**	**0**	**0**	**18**	**76**	**21**
மழை	**0**	**0**	**0**	**43**	**318**	**5578**	**1667**
காட்டுத்தீ	**0**	**0**	**0**	**0**	**1**	**4**	**1**
பாறை சரிவு	**0**	**0**	**0**	**3**	**7**	**50**	**12**
பலத்த காற்று	**2**	**21**	**0**	**206**	**3648**	**13907**	**4142**
நிலநகர்வு	**0**	**0**	**0**	**0**	**33**	**130**	**33**
எழுச்சி	**0**	**0**	**0**	**3**	**0**	**15**	**3**
மரம் விழுதல்	**1**	**0**	**0**	**0**	**14**	**42**	**11**
மொத்தம்	**119**	**80**	**35**	**5312**	**19500**	**2702566**	**821237**

மூலம்: *Disinventra*

7.4 அவசர தொழிற்பாட்டு நிலையத்தின் ஏனைய அவசர தயார்நிலை செயற்பாடுகள்

7.4.1 ஆரம்ப முன்னெச்சரிக்கை பரப்புதல்கள்

தொடர்பாடல் வசதிகளுக்கு செய்யப்பட்ட மேம்பாடுகளின் விபரம் கீழே தரப்பட்டுள்ளது. அனர்த்த முகாமைத்துவ தொடர்பாடல் பதிலளிப்பு திறன் விருத்தி கருத்திட்டத்தின் இரண்டாம்

கட்டத்தின் கீழ் 25 முன்னெச்சரிக்கை கோபுரங்கள் ஆரம்பிக்கப்பட்டதோடு அவை முன்னெச்சரிக்கை பரப்புகை வலைப்பின்னலுடன் சேர்க்கப்பட்டன. மொத்த 77 கோபுரங்கள் இது வரையில் தொழிற்படுகின்றன. முன்னோடியாக கிக்கடுவ காலி தேவேந்திர முனையில் நிர்மாணிக்கப்பட்டவற்றிற்கு பதிலாக 3 புதிய கோபுரங்களும் தாபிக்கப்பட்டுள்ளன. வானொலி தொடர்பாடலினூடாக முன்னெச்சரிக்கை கோபுரங்களில் குரல் வசதியை பொருத்தப்பட்டு கோபுரங்களினூடாக பரிசோதனை நடவடிக்கைகள் ஒவ்வொரு வியாழக்கிழமையும் மு.ப. 10 மணிக்கு மேற்கொள்ளப்படுகின்றது. அனர்த்த முகாமைத்துவ நிலையமானது அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் மாவட்ட கூறுகள் கிராமமட்டக் குழுக்களுக்கிடையே முன்னெச்சரிக்கை பரப்புதல்களை பலப்படுத்துவதற்காக மிக உயர்ந்த முன்னுரிமையை வழங்கியிருக்கின்றது. 52 முன்னெச்சரிக்கை கோபுரங்களின் உத்தரவாதக் காலம் நிறைவடைந்ததன் காரணமாக 2015 ஒக்டோபர் 31 ஆம் திகதி வரை அதன் பராமரிப்புக் காலம் நீடிக்கப்பட்டுள்ளன.

7.4.2 அரசாங்கங்க நிறுவனங்களுக்கடையிலான வலைப்பின்னல்

அரச தாபனங்களுக்கிடையிலான வலைப்பின்னல் முறைமையானது டயலெக் நிறுவனத்தின் ஆதரவுடன் மீளத் தாபிக்கப்பட்டுள்ளது. அது தொழில்நுட்ப நிறுவனங்கள் ஊடகம் பொலிஸ் மற்றும் அவசரத் தொழிற்பாட்டு நிலையம் அனர்த்த முகாமைத்துவ நிலையம் என்பவற்றை மொத்தமாக இணைத்து வைத்திருக்கின்றது. இந்த முறைமையானது 14 நிறுவனங்களுக்கிடையே துண்டிப்பற்ற தொடர்பாடலை உறுதிப்படுத்துவதற்காக செய்யப்பட்ட ஓர் அர்ப்பணிக்கப்பட்ட தொடர்பாடல் சேவையாக இருக்கின்றது.

7.4.3 இலங்கை அனர்த்த மூல வல வலைப்பின்னல் (SLDRN)

இலங்கை அனர்த்த மூலவல வலைப்பின்னலானது அவசர நிலைமையொன்றின்போது பயன்படத் தக்க ஒவ்வொரு மாவட்டத்திலும் காணப்படும் மூல வளங்கள் தொடர்பான ஒரு தரவுத் தளமாகும். இந்த தரவுத் தளமானது அவசரத் தொழிற்பாட்டு நிலையத்தினால் காலாண்டு ரீதியில் இற்றைப்படுத்தப்படுகின்றது,

7.4.4 சுனாமி வெளியேற்றல் முன்னெச்சரிக்கை அபாயங்கள்

கரையோர சமுகங்களின் தயார் நிலை மற்றும் பாதுகாப்பு என்பவற்றை மேம்படுத்தும் நோக்கில் தேசி மட்ட சுனாமி அபாய எச்சரிக்கை ஒலிகள் 2014 ஏப்ரல் மட்டும் டிசெம்பர் மாதங்களில் 14 சுனாமி ஏற்படத்தக்க மாவட்டங்களை உள்ளடக்கியதாக நடாத்தப்பட்டது. (கொழும்பு,

திருகோணமலை, கிளிநொச்சி, மன்னார், ஹம்பாந்தோட்டை, மாத்தறை, முல்லைத்தீவு, களுத்துறை, அம்பாறை, காலி, யாழ்ப்பாணம், புத்தளம், கம்பஹா, மட்டக்களப்பு)

இந்த செயற்பாட்டின் நோக்கம் யாதெனில் முன்னெச்சரிக்கை முறைமையின் தயார் நிலைமட்டங்களை உறுதிப்படுத்தி அதன் நம்பத் தன்மையை பரிசோதிப்பதும் இறுதி பரப்புகையையும் பயனுறுதி நிலைமையையும் உறுதிப்படுத்துவதுமாகும். இந்த தேசிய அபாய முன்னெச்சரிகை செயற்பாடுகளை காலாண்டு ரீதியிலான செயற்பாடுகளாக நடாத்துவதானது சுனாமிக்கு உட்படத்தக்க சமுகங்களிடையே அவற்றின் நடைமுறை மற்றும் விழிப்புணர்வுக்கான இடைவெளிகளை அடையாளங் காண்பதற்கு முக்கியமானதாக இருப்பதோடு கீழ் மட்டத்தில் வெளியேற்றல் நடைமுறைகளை மேம்படுத்துவதற்கும் முக்கயிமானதாகும். 2010 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட ஆரம்பக்கட்டத்தில் அது ஒரு மணித்தியலாம் 40 நிமிடங்களை எடுத்தது. சமுகங்களை வெளியேற்றுவதற்காக ஆனால் 2014 ஆம் ஆண்டில் மாவட்ட மட்டத்தில் மசமுகங்களை வெளியேற்றுவதற்கு சராசரியாக 35 நிமிடங்கள் எடுத்தன.





அடிமட்டத்தில் வெளியேற்றல் நடைமுறைகளை மேம்படுத்துவதற்காக சுனாமி முன்னெச்சரிக்கை நடவடிக்கை

7.4.5 அழைப்பு நிலையங்கள்

புதிய கட்டடத்தில் அழைப்பு நிலையமொன்று தாபிக்கப்பட்டிருப்பதோடு அது தொடர்ந்தும் தொழிற்பட்டு வருகின்றது. 117 அனர்த்த முகாமைத்துவ நிலையத்திற்கான அவசர தொலைபேசி இலக்கமாக ஒதுக்கப்பட்டுள்ளதோடு அனர்த்த முகாமைத்துவ நிலையத்துடன் தொடர்புறுவதற்கு பொதுமக்களுக்கு தனியாக ஒதுக்கப்பட்ட ஒரு தொலைபேசி இணணப்பு தாபிக்கப்பட்டுள்ளது. இதற்காக 21 தொலைபேசி இயக்குநர்கள் ஆட்சேர்க்கப்பட்டதோடு தற்போது அழைப்பு நிலையம் 24 மணித்தியாலமும் வாரத்தில் 7 நாட்களிலும் செயற்பட்டு வருகின்றது.






அழைப்பு நிலையம் 24 மணித்தியாலமும் வாரத்தில் 7 நாட்களிலும்

7.4.6 *அனைத்து முன்னெச்சரிக்கை கோபுரங்களுக்குமான* VHF அலைவரிசையூடாக குரல் செய்திகளை தாபித்தல்

அனர்த்த முகாமைத்துவ நிலையமானது கரரையேரப்பகுதிகளில் தாபிக்கபட்டுள்ள 77 கோபுரங்களினூடாக வடுப்படத்தக்க சமுகங்களுக்கு அவசர முன்னெச்சரிக்கைகளை செய்திகளை முன்வைப்பதற்காக அனைத்து முன்னெச்சரிக்கை கோபுரங்களிலும் VHF தொடர்பாடல் தொகுதிகளை பொருத்தியிருக்கின்றது.

7.4.7 குறுஞ்செய்தி பரப்புகை பொறிமுறை

அனர்த்த முகாமைத்துவ துறையில் பிரதான பங்காளர்கள் / அதிகாரிகளை எச்சரிக்கைசெய்வதற்காக அனர்த்த அவசர எச்சரிக்கை வலைப்பின்னல் முறைமையை பயன்படுத்தி தாபிக்கப்பட்ட குறுஞ்செய்தி பரப்புகை பொறிமுறையூடாக அனர்த்தத்துடன் தொடர்பான எச்சரிக்கைகளும் நாளாந்த வானிலை எதிர்வுகூறலும் வழங்கப்படுவதோடு ஊடகம் 24 x 7 அடிப்படையில் செயற்படுகின்றது. அனர்த்த அவசர எச்சரிக்கை வலைப்பின்னல் முறைமையின் புதிய வடிவம் 2014 திசெம்பர் 26 ஆந் திகதியன்று வெற்றிகரமாக ஆரம்பித்துவைக்கப்பட்டது.



7.4.8 அவசர பதிலளிப்புக் குழுக்கள்

2017 ஆம் ஆண்டின் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தில் 3 அவசர பதிலளிப்பு குழு கூட்டங்கள் இடம்பெற்றதோடு இவை இரசாயன விபத்து தயார்நிலை, இலங்கையில் ஏற்படுகின்ற சமகால இரசாயன விபத்துக்கள், அனர்த்த எச்சரிக்கை பொறிமுறை மற்றும் ஊடக அனுசரணை என்பவற்றை கலந்துரையாடின. அவசர பதிலளிப்புக்குழுக்களின் பங்குதாரர்கள் எதிர்காலத்தில் வரக்கூடிய அனர்த்தத்தின் தன்மை பற்றிய செயற்பாடுகள் அனர்த்த முகாமைத்துவ நிலையத்திறத்கு பதிலளிப்பதற்கு உதவுவார்.

7.4.9 டெங்கு ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டம்

2014 ஆம் ஆண்டில் அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்புப் பிரிவுகள், சுகாதார அலுவலர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள், பாடசாலைகள், இராணுவப் படை மற்றும் பொலிஸ் ஆகியவற்றின் மாகாண, மாவட்ட மற்றும் கிராம மட்ட அதிகாரிகளுடன் இணைந்து டெங்கு ஒழிப்பு நிகழ்ச்சித்திட்ட முன்னெடுப்பு திட்டத்தினை ஏற்பாடு செய்ய உதவி செய்துள்ளனர்.

7.4.10 தேசிய அவசர தொழிற்பாடுகள் திட்டம்

2005 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க அனர்த்த முகாமைத்துவ சட்டமானது தேசிய அவசர தொழிற்பாட்டுத் திட்டங்களின் அபிவிருத்திக்கு ஏற்பாடு செய்துள்ளது. இலங்கையில் ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் நிதி மற்றும் தொழிறல் நுட்ப ஆதரவுடன் தேசிய அவசர தொழிற்பாட்டு நிகழ்ச்சித்திட்டம் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

தேசிய அவசர தொழிற்பாடுகள் திட்டமானது ஒருங்கிணைப்பு அவசர பதிலளிப்பு பொறிமுறை என்பவற்றை தெளிவுபடுத்துகின்ற அவசர தொழிற்பாடுகளுக்கான ஒரு விரிவான முறைமையாகும். இது பொருத்தமான பங்குதாரர்களை தேசிய, உபதேசிய மட்டங்களில் கொண்டிருக்கிறது.

வரைவு தேசிய அவசர தொழிற்பாடுகள் திட்டத்தினை உறுதிப்படுத்துவதற்கும் இயக்குவிப்பதற்குமான முன்னோடி கருத்திட்டம் அனர்த்த பதிலளிப்பு தொழிற்பாடுகளில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களினதும் ஆளணியிரின் ஆற்றல்களை மேம்படுத்துவதற்குமாக முன்னோடிக் கருத்திட்டம் வரைவு தேசிய அவசர தொழிற்பாடுகள் திட்டம் மற்றும் அதன் பங்காளர்களுடன் மீளாய்வு செய்து இறுதிப்படுத்துவதற்காக ஆரம்பித்து வைக்கப்பட்டது. பங்குதாரர்களின் வரைவுப் பொருட்கள் மேலதிக கருத்துரைக்காக இணையத்தளத்தில் காணப்படுகின்றது. இணையத்தளம் (www.dmc.gov.lk/neop/)

7.4.11 அனர்த்த முகாமைத்துவத்திற்கான சம்பவ கட்டளை முறைமை தொடர்பான இடைக்கால பயிற்சி பாடநெறி

சம்பவ கட்டளை முறைமையின் புரிதலொன்றை வழங்குவதற்கு பிரதான கட்டளை பதவிகளின் பொறுப்புக்களை வழங்குவதற்கும் சம்பவ கட்டளை முறைமை செயலமர்வுகளையும் பயிற்சியும் மாவட்ட மட்டத்தில் நடாத்துவதற்கான அனர்த்த முகாமைத்துவ ஆளனிக் குழுவை அமைப்பதற்காக வழங்கப்பட்டது. வடமாகாணத்தின் தொடர்புடைய மாவட்டங்களை பிரதிநிதித்துவப்படுத்தி சம்பவ கட்டளை முறைமை முகாமைத்துவக்குழு ஒவ்வொரு மாவட்ட செயலகங்களின் கீழ் தாபிக்கப்பட்டது. யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட அலுவலர்களுக்கான கைநூல்விளக்க நிகழ்ச்சி சுண்ணாகத்தில் 2014 யூன் 17 ஆம் திகதியிலிருந்து 20 ஆம் திகதி வரை இடம்பெற்றதோடு யாழ்ப்பாணம் மற்றும் மன்னார், முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்ட அலுவலர்களுக்கான கைநூல்விளக்க நிகழ்ச்சி அனுராதபுரத்தில் 2014 ஆண்டு ஒக்டோபர் 31 ஆம் திகதி வரை இடம்பெற்றது.





மன்னார், முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்ட பங்கேற்பாளர்கள்





7.4.12 இலங்கையில் நகரங்களுக்கான அனர்த்த நிலையான நகர அபிவிருத்தி உபாய முறைகளின் முன்னெச்சரிக்கை திறன்களின் மேம்பாடு – 2 ஆம் கட்டம் (UNHABITAT)

அனர்த்த நிலையான நகர அபிவிருத்தி உபாயமுறை பற்றிய கருத்திட்டம் UNHABITAT. நிதியளிப்புடன் அம்பாறை, வவுனியா மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் நடாத்தப்பட்டது. கிராம சமுகங்கள், வானொலி உபகரணங்கள் மற்றும் ஏனைய அவசர

முகாமைத்துவ செயற்பாடுகளை பயன்படுத்துவது பற்றி மீள ஒழுங்கமைக்கப்பட்டு பயிற்றுவிக்கப்பட்டனர். முன்னெச்சரிக்கை உபகரணங்களின் கொள்வனவு ஏற்கனவே பூர்த்தி செய்யப்பட்டுள்ளதோடு, நகர பகுதிகளில் அவை வடுப்படத்தக்க சமுகங்களுக்கிடையே விநியோகிக்கப்பட்டுள்ளது.

VHF தொடர்பாடல் கருவிகள் மாவட்ட மட்டங்களுக்கு வழங்கப்பட்டிருப்பதோடு அவை தெரிவு செய்யப்பட்ட வடுப்படத்தக்க கிராம சேவகர் மட்டங்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டன. கிராம மட்ட சமுகங்கள் தொடர்பாடல் உபகரணங்களை கையாள்வது பற்றி பயிற்றுவிக்கப்பட்டனர். மொத்தமாக 16 VHF தொடர்பாடல் தொகுதிகள் அக்கறைப்பற்று, முல்லைத்தீவு, வவுனியா மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களுக்கு பொருத்தப்பட்டுள்ளன.

7.4.13 வெளிநாட்டு நிதிகளுக்காக 2015 ஆம் ஆண்டுக்காக ஒதுக்கப்பட்ட செயற்பாடுகள் ரூபா மில்லியன் 11.4)

அவசர பதிலளிப்பு பயிற்சிகள் பூர்த்தி செய்யப்பட்டவிருக்கின்றது. (முதலுதவி மற்றும் அக்கறைப்பற்று, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் சமுக அங்கத்தவர்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ நிலைய பதவியினருக்கான முதலுதவி மற்றும் உயிர் பாதுகாப்பு பயிற்சி என்பன)

வடமாகாணத்தில் வளமான பகுதியில் இரண்டு அறிக்கை செய்யும் நிலையங்கள் மீளளிக்கப்பட வேண்டி இருக்கின்றது.

7.4.14 இலங்கையில் கரையோர ஆபத்துக்கான முனைக்கு முனையான பல் ஆபத்து முன்னெச்சரிக்கை முறைமைகளின் திறன்களை மேம்படுத்துதல்

ADPC-UNESCAP ஆகிய இந்த நிதியளிக்கப்பட்ட கருத்திட்டமானது முனைக்கு முனை பல் ஆபத்து ஆரம்ப முன்னெச்சரிக்கை முறைமையோடு தொடர்புடையதாக விடயங்களை விருத்திசெய்யும் நோக்கில் மேம்படுத்தப்படவுள்ள தேவைகளை அடையாளங் காண்பதற்கு நடாத்தப்பட்ட ஒரு விரிந்த இடைவெளி பகுப்பாய்வு செயற்பாடாகும். இதில் ஆபத்திலுள்ள உள்ளூர் சமுகங்கள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் இதற்கு மேலதிகமாக கருத்திட்டமானது கரையோர சமுக நிரந்தர சட்டகத்தை மீளாய்வு செய்வதோடு (CCR) சட்டகத்தின் ஒருங்கிணைந்த அம்சமொன்றாக (EWS) ஆரம்ப முன்னெச்சரிக்கை முறைமை கட்டத்தின் பல்வகை ஆபத்தையும் ஒருங்கிணைப்பதை ஆராய்ந்து பார்த்தது.

- மூன்று மாத கீழ் மட்ட பரிசோதனைகளுடன் உள்ளூர் மட்டத்தில் *2* ஏர்கு வானொலி தள நிலையங்கள் பூரணமாக பொருத்தப்பட்டன. கருவிகள் பின்வரும் இடங்களில் பொருத்தப்பட்டதோடு *VHF* பயணர் வழிகாட்டி உள்ளூர் மொழியில் விருத்தி

செய்யப்பட்டிருக்கின்றது. செந்தூர் முன்னோடி திட்டத்திற்காக குச்சவெளி பொலிஸ் நிலையமும் முன்னோடி ஆரம்ப முன்னெச்சரிக்கை தகவலக்ளை மேம்படுத்தி பரப்புதலுக்கு கல்குடா, பாசிக்குடா பகுதிகளில் கல்குடா துறைமுகத்திலும் ஒதுக்கப்பட்டுள்ளது.

- கள மட்ட பொதுமக்கள் கூட்டங்கள் கரையோர ஆபத்து முன்னெச்சரிக்கை குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக அனைத்து முன்னோடி சமுக அங்கததவர்களுக்குமாக நடாத்தப்பட்டது. 2 உள்ளூர் மட்ட சமுக ஆரம்ப முன்னெச்சரிக்கை மற்றும பதிலளிப்பு கூறுகள் *DDMC* உடன் தொடர்புபட்டு 2 முன்னோடி இடங்களில் தாபிக்கப்பட்டன. இளைஞர் தொண்டர் கூறுகள் மீன்பிடிக் கூட்டுத்தாபனங்கள் மற்றும் தொடர்புடைய மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு அலகுகள். கொத்தனி அடிப்படையிலான வெளியேற்றல் வரைபடங்கள் பாதுகாப்பான இடங்களை அடையாளங் காணுதல் எச்சரிக்கை பரப்புதலுக்கான நடைமுறைகள் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றுதல் போன்றவை கூட்டாக விருத்தி செய்யப்பட்டன.
- சமுக மட்ட ஆரம்ப முன்னெச்சரிக்கை முறைமை தூண்டல் மற்றும் பதிலளிப்பு தேசிய சுனாமி தூண்டல் தொடர்பான தூண்டலுடனான ஒருங்கிணைப்புடன் கல்குடா பகுதியில் பரிட்சிக்கும் முறைக்காக 2014 டிசெம்பர் 12 ஆம் திகதி நடாத்தப்பட்டது.
- ஒரு முனையிலிருந்து மறு முனைக்கான சமுக ஆரம்ப முன்னெச்சரிக்கை பரப்புகைக்கான கைநூல் பிராந்திய மட்ட கைநூலொன்றுக்கான விளக்கம் கரையொர ஆபத்துக்களுக்கான பதிலளிப்பு திட்டமிடல் மற்றும் நடைமுறைகள் என்பன விருத்தி செய்யப்பட்டிருப்பதோடு அனர்த்த தயார்நிலைக்கான *CDP* மற்றும் *ADPC*. நிறுவனத்தினால் வரைவு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.
- ஊடகம் மற்றும் விழிப்புணர்வு வழிகாட்டி மற்றும் பொருட்கள் தொடர்பான வரைவு அனர்த்த முகாமைத்துவ நிலையம் ஊடக மற்றும் தொழில்வாண்மையாளர் பங்களிப்புடன் மேற்கொள்ளப்பட்டு வருவதோடு சமர்ப்பிக்கப்படவுமுள்ளது.
- ஊடக ஆளனியினருக்கிடையே *SOP* ஊடக நிகழ்ச்சித் திட்டம் ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டதோடு சிறிய வழிகாட்டல் கைநூலொன்று இணைய வைக்கப்பட்டுள்ளது.
- அனர்த்த திட்ட மற்றும் ஊக்குவிப்பு பயிற்சி தயார்நிலை நிகழ்ச்சி செந்தூர் நாசிவன்தீவு ஆகிய இடங்களில் இடம்பெற்றன.
- சுனாமி பாதிக்கப்படத் தக்க மாவட்டங்களிலுள்ள அலுவலர்களுக்கு வரைபடமிடல் மற்றும ஆரம்ப முன்னெச்சரிக்கை பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.
- வானிலை எதிர்வு கூறல் தொடர்பான வானிலை ஆராய்ச்சியாளருக்கான 5 நாள் பயிற்சி பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.
- செந்தூர் நகரம் திருகோணமலையில் சமுகங்களுக்கான தூண்டல் பயிற்சி நடாத்தப்பட்டது.

7.4.15 கரையோர ஆபத்து முன்னெச்சரிக்கை மற்றும் பதிலளிப்பு கருவிகள் சர்வதேச பலப்படுத்தல்களை மேம்படுத்துதல் (2012-2014)

கரையோர ஆபத்து முன்னெச்சரிக்கை மற்றும் பதிலளிப்பை மேம்படுத்தவதற்கான கருத்திட்டங்கள் கருவிகளும் நிறுவன பலப்படுத்துகையும் 2012 யூலை 6 ஆம் திகதியன்று முன்னெடுக்கப்பட்டதோடு இது 2014 யூன் 30 ஆம் திகதிவரை தொடர்ந்திருக்கும். இந்தக் கருத்திட்டமானது இலங்கையில் பிரதானமாக சுனாமி அழிவு மாதிரி மற்றும் ஆபத்து வெளியேற்றல் உள்ளிட்ட உயர் தராதரத்துடனான தரவு உருவாக்கம் போன்றவற்றில் திறன் கவனம் செலுத்தி திறன் கற்றல் செயற்பாடுகளுக்கு ஆதரவளிக்கின்றது. ஹம்பாந்தோட்டை இதற்கான முன்னணி இடமாக தெரிவு செய்யப்பட்டுள்ளதோடு, எனினும் ஆரம்ப சுனாமி எச்சரிக்கை மற்றும் பதிலளிப்பு திறன்களை மேம்படுத்துவதற்கு அதன் குடா நிலைமை பொருத்தமானதாக காணப்படுகின்றது. இதற்கு மேலதிகமாக சுனாமி இழப்பு மதிப்பீடு சுனாமி ஆபத்து மதிப்பீட்டில் விரிவான பகுப்பாய்வு என்பன நகரப்பகுதிகளில் நடாத்தப்பட்டதோடு, குறைந்த ஆபத்து பகுப்பாய்வு ஹம்பாந்தோட்டை பகுதியின் வெளிப்புறங்களுக்கும் விரிவு படுத்தப்பட்டது.

லிடா தரவானது நிலஅளவை திணைக்களத்திடமிருந்தும் பயன்படுத்தப்பட்டதோடு இக்கருத்திட்டத்திற்கு அருகிலுள்ள தரைதோற்றத்தின் கீழும் பயன்படுத்தப்பட்டது. சுனாமி ஆபத்து வரைபடமிடல் விருத்தி மற்றும் வெளியேற்றல் திட்டம் என்பன பிராந்திய சுனாமி சேவைகள் வழங்குநர்களிடமிருந்தான சுனாமி எச்சரிக்கை தகவலுக்கான சாத்தியமான தொடர்பாக கருதப்படல் வேண்டும். இக்கருத்திட்டமான வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டதோடு இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளது.

7.5 அவசர தொழிற்பாட்டு நிலையத்தினால் 2014 ஆம் ஆண்டு காலப்பிரிவில் நடாத்தப்பட்ட ஏனைய செயற்பாடுகள்

7.5.1 அவசர தொழிற்பாட்டு நிலையங்களின் விஜயங்களும் பயிற்சிகளும்

அவரச தொழிற்பாடுகள் மற்றும் முன்னெச்சரிகை செயல்முறைகள் சம்பந்தமாக பங்குதாரர்களுக்கும் பாடசாலை சிறுவர்களுக்கும் வெளிநாட்டு பிரதிநிதிகள் மற்றும் அரசாங்க அலுவலர்கள் தொடர்பான பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் அவசர தொழிட்பாட்டு பிரிவினால் நடாத்தப்பட்டது. அவசர தொழிற்பாடுகள் மற்றும் முன்னெச்சரிக்கை தொடர்பாக விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் அவசர பிரிவினால் மேற்கொள்ளப்படுதல்





அவரச தொழிற்பாடுகள் மற்றும் ஆரம்ப முன்னெச்சரிக்கை செயன்முறை பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் அவசர தொழிற்பாடுகள் நிலையத்தினால் மேற்கொள்ளப்பட்டது

8. நிதிசார் முன்னேற்றம் (2014 டிசெம்பர் 31)

2017 ஆம் ஆண்டுக்காக அனர்த்த முகாமைத்துவ நிலையத்திற்கு ரூபா 945 மில்லியன் தொகையொன்று ஒதுக்கப்பட்டது. இதில் 160 மில்லியன் மீண்டெழும் செலவினத்திற்கும் 14.3 மில்லியன் தேசிய அனர்த்த முகாமைத்துவ நிலையத்திற்கும் 770.97 மில்லியன் மூலதன செலவுக்குமாக உள்ளடக்கப்பட்டது. இந்த மொத்த இணைந்த ஒதுக்கத்தில் ரூபா 901.52 பில்லியன் திறைசேரியினால் விடுவிக்கப்பட்டதோடு அவற்றில் 926.34 பில்லியன் செலவழிக்கப்பட்டுள்ளது. எஞ்சிய பணத்தொகை 2014 டிசெம்பர் அளவில் காணப்பட்டது. 2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான செயலாற்றுகை அறிக்கை அட்டவணை **8.1**.இல் தரப்பட்டுள்ளது.

2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிசார் செயலாற்றுகை அறிக்கை

தலை. இல.	செயற்பாடு/ நிகழ்ச்சித் திட்டம்	வரவு செலவுத் திட்ட ஒதுக்கம் 2014 (ரூபா மில்)	கிடைக்கப் பெற்ற தொகை (ரூபா மில்)	செலவழிக்கப்பட்ட நிதிகள் (ரூபா மில்)	நிதிசார் முன்னேற்ற %	ஒதுக்கத்திற் கெதிரான பௌதீக முன்னேற்றம் %
106-02-03-01-1503	அனர்த்த முகாமைத்துவதத்துக்கான தேசீய பேரவை (NCDM)	14.03	12.5	11.85	95	95
106-2-3-2-1503	மீண்டெழும் செலவீனம்	160	160	159.91	100	100

மூலதனச் செலவீனம் - உள்ளூர்						
106-2-3-3-2401	திறன் கட்டியெழுப்புகை மனித வள அபிவிருத்தி	0.5	0.5	0.5	100	100
106-2-3-5-2201 (I &II)	மாவட்டங்களில் அனர்த்தத்தின் தாக்கத்தினைக் குறைப்பதற்கான தணிப்பு கருத்திட்ட அமுலாக்கம் (சிறு மற்றும் நடுத்தரக் கருத்திட்டங்கள்)	500	485.3	485.3	97	97
106-2-3-5-2201 (III)	அவசர நிலையில் பாதுகாப்பான வெளியேற்றம்	50	50	50	100	100
106-2-3-7-2201	வெள்ள மற்றும் வரட்சி அவசர நிலைக்கான உபகரணங்களின் கொள்வனவு	75	75	74.98	100	100
106-2-3-8-2201	தயார்நிலைத் திட்டங்களை தயாரிப்பதற்கு அரச நிறுவனங்களுக்கு உதவுதல்	10	10	9.05	90	90
106-2-3-22-2201	களுத்துறை, பானந்துறைப் பிரிவுகளில் வெள்ளத் தணிப்பு	45	45	45	100	75*
106-2-3-23-2201	தம்புள்ள பிரதேச செயலகப் பிரிவில் வெள்ளத் தணிப்பு	20	20	20	100	90*
106-2-3-24-2201	யாழ்ப்பாண பிரதேச செயலகப் பிரிவில் வெள்ளத் தணிப்பு	50	50	50	100	100
106-2-3-25-2201	விழிப்புணர்வு கட்டியெழுப்புகை	12	12	11.58	96	96
	மொத்த மூலதனச் செலவினம்	**762.5**	**747.8**	**746.41**		
மூலதனச் செலவினம் - வெளிநாடு						

106-2-3-26-2201	ஆரம்ப முன்னெச்சரிக்கை முறைமை UNHABITAT இன் திறன் கட்டியெழுப்புகை	8.467	8.467	8.17	96	97
	மொத்த மூலதன செலவு (உள்ளூர் மற்றும் வெளிநாடு	**770.97**	**756.27**	**754.58**		

அட்டவணை 8.1: 2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிசார் செயலாற்றுகை அறிக்கை

*நிருவாக விடயங்கள் காரணமாக களுத்துறை மற்றும் தம்புள்ளை கருத்திட்டங்கள் 2016 இல் தாமதமாகவே ஆரம்பிக்கப்பட்டன. ஆதலால், அவை இது வரை பூர்த்தி செய்யப்படவில்லை. முன்னைய ஆண்டின் எஞ்சிய பற்றுச் சீட்டுகளின் கொடுப்பனவுகளுக்காக ஆண்டுக்கான மொத்த வரவு செலவுத் திட்ட ஒதுக்கத்தை அவை பயன்படுத்தியுள்ளன. இக்காரணமானது மெய்சார் முன்னேற்றத்தினதும் ஆண்டுக்கான பௌதீக முன்னேற்றத்தின் தாக்கத்தில் செல்வாக்கு செலுத்தியுள்ளது."

அனர்த்த முகாமைத்துவ நிலையம்

2014.12.31ஆம் திகதியில் இருந்தவாறான நிதி நிலைமைகள் தொடர்பான கூற்று

	குறிப்பு	2014 ரூபா. சதம்.	2013 ரூபா. சதம்.
சொத்துக்கள்			
நடைமுறையற்ற சொத்துக்கள்			
ஆதனங்கள், உபகரணங்கள், சொத்துக்கள்	05	1,460,770,656.98	1,691,023,694.83
நடைமுறைச் சொத்துக்கள்			
தொடரும் கருத்திட்டங்களுக்கான மூலதன வேலைகள்	06	77,262,863.25	89,171,689.92
அனர்த்த பதில் நடவடிக்கை உபகரணக் கையிருப்பு	07	13,193,408.48	15,510,050.56
பொருட் பதிவேடுகள்	08	2,887,945.41	2,377,930.16
செலுத்தல்களும் முற்பணங்களும்	09	9,269,335.23	3,927,602.90
வைப்புக்களும் ஏனைய கிடைப்பனவுகளும்	10	1,435,163.62	1,435,163.62
காசு மற்றும் காசுக்குச் சமமானவை	11	5,755,454.02	15,692,118.02
மொத்த நடைமுறைச் சொத்துக்கள்		**109,804,170.01**	**128,114,555.18**
மொத்தச் சொத்துக்கள்		**1,570,574,826.99**	**1,819,138,250.01**
நிதிகள், ஒதுக்கல்கள் மற்றும் வருமதிகள்			
தேறிய சொத்துக்கள்/ பங்குகள்		-	-
திரண்ட நிதியம்		**(35,294,840.79)**	**(41,740,875.81)**
ஒதுக்கல்கள்			
மூலதன வழங்கல் – பொதுத் திறைசேரி		901,357,691.45	540,245,702.20
சொத்துக்கள் மீதான மூலதன மானியம் – பொதுத் திறைசேரி		12,245,000.00	16,985,000.00
சொத்துக்கள் மீதான மூலதன மானியம் - ICET		1,423,794,229.73	1,646,126,656.73
மூலதன வழங்கல் மீதான முதலீடுகள்	12	(752,671,921.64)	(366,801,288.19)
மொத்தத் தேறிய சொத்துக்கள்/ பங்குகள்		**1,549,430,158.75**	**1,794,815,194.93**
நடைமுறையற்ற பொறுப்புக்கள்			
ஏனைய நிறுவனங்களிடமிருந்து கிடைத்த மானியம்	13	5,117,213.12	2,535,583.90
இளைப்பாறு பண உதவிகள் தொடர்பான பொறுப்புக்கள்	14	12,474,738.75	9,068,095.63
நடைமுறைப் பொறுப்புக்கள்			
வர்த்தகம் மற்றும் ஏனைய செலுத்தல்கள்	15	3,346,704.81	9,842,576.49
ஏனைய செயற்பாடுகள்	16	206,011.56	2,876,799.06
மொத்த நடைமுறைப் பொறுப்புக்கள்		**3,552,716.37**	**12,719,375.55**
மொத்தப் பொறுப்புக்கள்		**21,144,668.24**	**24,323,055.08**
மொத்த நிதிகளும் பொறுப்புக்களும்		**1,570,574,826.99**	**1,819,138,250.01**

கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தின் 1 தொடக்கம் 17 வரையிலான குறிப்புக்கள் நிதிக்கூற்றின் அவசியமான பகுதிகளாகும்.

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு	இணங்காமை
(அ) 2014 சனவரி 01 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க நிதி, திட்டமிடல் அமைச்சின் தேசிய பாதீட்டு சுற்றறிக்கை	இரண்டாம் தர அடிப்படையில் இணைக்கப்பட்டிருந்த உத்தியோகத்தர்களுக்கு வாகனங்கள் மற்றும் எரிபொருள் படிகள் வழங்குவதற்கு முன்னர் குறித்த உத்தியோகத்தர் நிரந்த சேவை நிலையத்தில் அவ்வசதிகளை பெற்றுக்கொள்ளவில்லை என்பதற்கான எழுத்துமூல உறுதியொன்று பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு சேர்க்கப்பட்ட உத்தியோகத்தரொருவருக்கு எழுத்துமூல உறுதிப்படுத்தலொன்று இல்லாமல் 05 மாத காலப்பகுதிக்காக அவ்வசதிகள் வழங்கப்பட்டிருந்தன.
(ஆ) 1993 திசெம்பர் 31 ஆந் திகதிய பீபீஏ/6/1/1 ஆம் இலக்கம் மற்றும் 2010 யூலை 09 ஆந் திகதிய சீஏ/1/1/16/1 ஆம் இலக்க சனாதிபதி செயலக சுற்றறிக்கைகள்	அரச உத்தியோகத்தர்கள் உத்தியோகபூர்வ வெளிநாட்டு சுற்றுலாவொன்றில் பங்குபற்றி மீண்டும் நாட்டுக்கு வருகை தந்ததன் பின்னர் 07 நாட்களுக்குள் சுற்றறிக்கையின் "ஊ" இணைப்பில் காண்பிக்கப்பட்டுள்ள மாதிரியின் பிரகாரம் அறிக்கையொன்று சமர்ப்பிக்க வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் போது

		14 வெளிநாட்டு செயலமர்வுகளிலும் மாநாடுகளிலும் பங்குபற்றிய 07 உத்தியோகத்தர்கள் குறித்த அறிக்கைகளை சமர்ப்பித்திருக்கவில்லை.
(இ)	இலக்க சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம்	
	(i) நிதிப்பிராமணம் 104 மற்றும் நிதிப்பிராமணம் 110	மீளாய்வாண்டினுள் நிலையத்திற்குச் சொந்தமான 09 வாகனங்கள் 10 விபத்துகளுக்குட்பட்டிருந்ததுடன், நிதிப் பிராமணத்தின் பிரகாரம் ஆரம்ப அறிக்கையொன்றோ அல்லது முழுமையான அறிக்கையொன்றோ சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. மேலும் அது தொடர்பான விபரங்கள் சேதங்கள் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.
	(ii) நிதிப் பிரமாணம் 371(2)(ஆ) மற்றும் (5) ஆம் பிரிவு	(i) முற்பணம் வழங்கப்பட்ட செயற்பாடு பூர்த்தியடைந்த உடனேயே தீர்க்கப்பட வேண்டிய போதிலும், 23 சந்தர்ப்பங்களின் போது ரூபா 254,900 கூட்டுத்தொகையான முற்பணங்கள் 02 முதல் 10 மாதங்கள் வரையான காலவீச்சில் தாமதமாக தீர்க்கப்பட்டிருந்தன. மேலும் முற்பணமாக வழங்கப்பட்ட சகல பணத்தையும் ஆண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்த்து வைக்கப்பட வேண்டிய வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையில் அவ்வாறு தீர்க்கப்படாதிருந்த முற்பணத் தொகைகளின் கூட்டுத்தொகை ரூபா 1,885,238 ஆக இருந்தது.
		(ii) பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்த்த வழங்கல் அல்லது சேவைக்களுக்காக நேரடியாக கொடுப்பனவு செய்ய முடியுமான போதிலும், மாவட்ட

அலுவலகங்களுக்கு இணைக்கப்பட்டிருந்த வாகனங்களைத் திருத்தம் செய்வதற்காக முற்பணமாக மாவட்ட செயலாளர்களுக்கு நிதிஏற்பாடு விடுவிக்கப்பட்டிருந்தது. அவ்வாறு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தொகையில் ரூபா 557,154 தொகையான முற்பணங்கள் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

3. நிதி மீளாய்வு

3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது நிலையத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் விளைவுகள் ரூபா 2,616,060 ஆன மிகையொன்று காணப்பட்டதுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் பற்றாக்குறை 9,452,720 ஆக இருந்தது. அதன் பிரகாரம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 12,068,780 ஆன அதிகரிப்பொன்று தென்பட்டது. நிலையத்தின் செயற்பாட்டு செலவினம் ரூபா 18,003,277 ஆல் அதிகரித்திருந்த போதிலும், வருமானம் ரூபா 30,072,057 ஆல் அதிகரித்தமை நிதி விளைவுகளில் அதிகரிப்பிற்கு காரணமாக இருந்தது.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 செயலாற்றல்

(அ) நாட்டின் வெவ்வேறு பிரதேசங்களில் வெள்ளம், மண்சரிவு, வறட்சி, சூறாவளி, கடல் கொந்தளிப்பு மற்றும் மிருகங்களின் தாக்கம் போன்ற அனர்த்தம் தொடர்பாக இனங்கண்டு அவற்றைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதற்காக நிலையத்தினால் அனர்த்தங்களைக் குறைக்கும் செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் சிறிய அளவிலான, நடுத்தர அளவிலான மற்றும் பாரியளவிலான செயற்திட்டங்கள் மீளாய்வாண்டில் நடைமுறைப்படுத்துவதற்காக மதிப்பிடப்பட்ட தொகை ரூபா 537,032,019 ஆக இருந்தது. நிலையத்தால் அனர்த்தங்களைக் குறைத்தல் தொடர்பான செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்காக மீளாய்வாண்டின் போது மாவட்ட செயலாளர்களுக்கு ரூபா 538,817,431 நிதி ஏற்பாடு விடுவிக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டிற்காக அனர்த்த முகாமைத்துவ அமைச்சு தயாரித்திருந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நிலையத்தின் மூலம் 148 செயற்திட்டங்களை செயற்படுத்தப்படுவதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், நிலையத்தின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 108 செயற்திட்டங்கள் மாத்திரம் காண்பிக்கப்பட்டிருந்த காரணத்தினால் இந்நிறுவனங்களின் செயல்நடவடிக்கைத் திட்டங்கள் இணைந்ததாக இருக்காமை அவதானிக்கப்பட்டது.

(ii) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நடைமுறை வேலைகளின் கீழ் குறிப்பிடப்பட்டிருந்த சகல செயற்திட்டங்களும் மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு உட்படுத்தப்பட வேண்டிய போதிலும், 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்பாடு பூர்த்தி செய்யப்படாதிருந்த போதிலும், 2014 ஆம் ஆண்டில் ரூபா 4,160,000 தொகை செலவிடப்பட்டு பூர்த்தி செய்யப்பட்ட அம்பாந்தோட்டை மாவட்டத்தில் அமைந்துள்ள புன்சி அப்பு ஐந்துவ வாவியின் அலைத்தடுப்பு அமைக்கும் செயற்திட்டம் 2014 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) செயற்திட்டத்திற்குரிய நிதிஏற்பாட்டை வழங்குவதற்கு முன்னர் முறைப்படி செயற்திட்ட முன்மொழிவொன்று தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 108 அனர்த்தங்களை குறைக்கும் செயற்திட்டங்களுக்குரிய செயற்திட்ட முன்மொழிவுகளை சமர்ப்பிக்காமல் ஏற்பாடு விடுவிக்கப்பட்டிருந்தன. அச்செயற்திட்டங்களுக்குரிய மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூபா 324,553,620 ஆக இருந்தன.

(iv) நிலையத்தினால் 2013 நவம்பர் 25 ஆந் திகதிய உள்ளக சுற்றறிக்கையொன்றின் மூலம் செயற்திட்டங்களுக்காக முற்பணமாக வழங்கப்படும் தொகை மொத்த மதிப்பீட்டு பெறுமதியில் 40 சதவீதம் என மாவட்ட உதவிப் பணிப்பாளர்களுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் இந்த எல்லையைக் கருத்திற்கொள்ளாமல் 09 செயற்திட்டங்களுக்காக மொத்த மதிப்பீட்டு பெறுமதியில் 42 சதவீதம் முதல் 77 சதவீதம் வரையான வீச்சில் முற்பணம் வழங்கப்பட்டிருந்தது.

(v) அனர்த்தங்களைக் குறைக்கும் செயற்திட்டங்களை ஆரம்பிக்கும் போது ஒப்பந்தக்காரர்களுடன் உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட வேண்டிய போதிலும், ரூபா 230,209,426 மதிப்பீட்டுப் பெறுமதியான 71 அனர்த்தங்களைக் குறைக்கும் செயற்திட்டங்களுக்காக உடன்படிக்கைப் பத்திரங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(vi) அனர்த்தங்களைக் குறைக்கும் செயற்திட்டங்களை அமுல்படுத்தியதன் பின்னர் அப்பணத்தை செலவிடுவதற்கான தேவைப்பட்டியல், மாவட்ட செயலாளர் பணம் பெற்றுக் கொண்டதற்கான பற்றுச்சீட்டு மற்றும் செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டமைக்கான அறிக்கையொன்று என்பவற்றை நிலையத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் போது ரூபா 501,132,349 மதிப்பீட்டுப் பெறுமதியான 167 செயற்திட்டங்களுக்குரிய தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை.

(vii) அனர்த்தங்களைக் குறைக்கும் செயற்திட்டங்களுக்காக பணத்தை வழங்கியதன் பின்னர் அச்செயற்திட்டங்களின் பௌதீக முன்னேற்றம் பரீட்சிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு முற்பணம் வழங்கப்பட்டதன் பின்னர் எஞ்சிய தவணைகள் கொடுப்பனவின் போதும் இத்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், செயற்திட்டங்கள் செயற்படுத்தப்பட்ட 22 மாவட்டங்களில் அவ்வாறு பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமைக்கான அறிக்கைகள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது சிறிய மற்றும் நடுத்தர அளவிலான 143 செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வு திகதியான 2015 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் அதில் 37 செயற்திட்டங்ளுக்குரிய செலவு செய்யப்படாத பணத்தை மாத்திரம் நிலையத்திற்கு மீள அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. 106 செயற்திட்டங்ளுக்காக செலவின அறிக்கைகளை பெற்றுக்கொள்ளாமையால் 2015 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் எஞ்சிய பணம் நிலையத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் அனர்த்தங்களை குறைக்கும் செயற்திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த பணத்தை மாவட்ட செயலகங்களில் தடுத்துவைக்காமல் நிலையத்திற்கு பெற்றுக்கொள்ளும் முறைமையொன்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நிலையத்தினால் வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டினுள் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அனர்த்தங்களைக் குறைக்கும் செயற்திட்டங்களின் கீழ் ஆண்டின் இறுதியில் வேலை நிறைவு செய்யப்படாத செயற்திட்டங்கள் 09 எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், 13 மாவட்ட அலுவலகங்களினால் சமர்ப்பிக்கப்பட்ட செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் அந்த 09 செயற்திட்டங்களுக்கு மேலதிகமாக ரூபா 95,983,256 ஆன முற்பணங்கள் விடுவிக்கப்பட்டிருந்த 27 செயற்திட்டங்களில் வேலை பூர்த்தி செய்யப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

(ii) மேலும் மீளாய்வாண்டின் போது 03 மாவட்டங்களில் 20 செயற்திட்டங்களுக்காக ரூபா 46,534,568 மொத்த மதிப்பிடப்பட்ட பணமும் மாவட்ட செயலாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், திசெம்பர் 31 வரையிலும் அச்செயற்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் போது பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்த்த பாரியளவிலான 03 செயற்திட்டங்களின் வேலைகள் 2011 ஆம் ஆண்டின் போது அமுல்படுத்தப்பட்டிருந்தது. அந்த செயற்திட்டங்களின் செயன்முன்னேற்ற அறிக்கைகளின் படி களுத்துறை மற்றும் பாணந்துறை பிரதேசங்களில் வெள்ள அனர்த்தத்தைக் குறைக்கும் செயற்திட்டத்தினதும் தம்புள்ள வெள்ள அனர்த்தத்தைக் குறைக்கும் செயற்திட்டத்தினதும் நடவடிக்கைகள் 2015 மார்ச் மாதம் வரை வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் யாழ்ப்பாண தீபகற்பத்தில் வெள்ள அனத்தத்தைக் குறைக்கும் செயற்திட்டத்தின் செயன்முன்னேற்ற அறிக்கை கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) அனர்த்த இடரினைக் குறைக்கும் நோக்கம் ஒவ்வொரு மாவட்டத்திலும் முன் தயார்படுத்தல் திட்டமிடல் நிலையத்தினால் நிறைவேற்றப்படுகின்றது. மீளாய்வாண்டின் போது முன் தயார்படுத்தல் திட்டமிடலுக்காக 797 நிகழ்ச்சித்திட்டங்கள் திட்டமிடப்பட்டிருந்ததுடன், அதற்காக ரூபா 8,003,000 தொகை மாவட்ட செயலாளர்களுக்கு அனுப்பப்பட்டிருந்தன. அந் நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பாக ஆரம்ப சந்தர்ப்பத்திலேயே செயல்நடவடிக்கைத் திட்டத்தையும் நிகழ்ச்சித்திட்டங்களின் இறுதியில் செய்யப்பட்ட வேலை தொடர்பான அறிக்கையொன்றை தயாரித்துச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், சமூகமளித்தவர்களின் பொறுப்பேற்றல் மற்றும் சிக்கல்களைக் குறைப்பதற்கு முன்வைக்கப்பட்ட பரிந்துரைகள் அவ்வறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

4.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் 2009 ஆம் ஆண்டின் போது பாதுக்க பிரதேசத்தில் தகவல் தொடர்பாடல் நிலையமொன்று தாபிக்கப்பட்டு அங்கு ரூபா 72,471,168 பெறுமதியான உபகரணங்கள் பொருத்தப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் இந்நிலையம் 2011 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் செயற்படாதிருந்ததுடன், 2015 மே 15 ஆந் திகதி வரை அவ் உபகரணங்கள் கழற்றி அகற்றப்பட்டு நிலையத்தின் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) நெதர்லாந்து வெளிநாட்டு கடன் உதவித் திட்டத்தின் கீழ் பெற்றுக்கொள்ளப்பட்டு 14 மாவட்டங்களில் தாபிக்கப்பட்ட 77 சுனாமி முன்தயார்படுத்தல் ஒலிச் சமிக்ஞை கோபுரங்களுக்காக செயற்கைக் கோள் தொழில்நுட்ப தொடர்புபடுத்தலுக்காக அமெரிக்கன் சிக்னல் கோப்பரேஷன் நிறுவனத்திற்கு வருடாந்தம் ரூபா 6,778,353 தொகையான கட்டணம் செலுத்தப்பட்டிருந்த போதிலும், அந்நிறுவனத்துடன் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) இலங்கையில் நகர தொடர்புபடுத்தல் அனர்த்தத்திற்குள்ளான நகரங்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் தந்திரோபாய மார்க்க முன் அறிவுறுத்தல் இயலளவு மேம்படுத்தல் செயற்திட்டத்தின் கீழ் வெவ்வேறு செயற்பாடுகளுக்காக ஐக்கிய நாடுகள் அமைப்பினால் ரூபா 10,260,000 தொகை நிலையத்திற்கு மீளாய்வாண்டின் போது வழங்கப்பட்டிருந்ததுடன், அதில் ரூபா 7,410,000 தொகை குறித்த செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்படாமல் திறைசேரிக்கு மீள அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) நிலையத்தினால் அவசர பொறுப்பேற்றலுக்காக மீளாய்வாண்டினுள் கொள்வனவு செய்யப்பட்ட உபகரணங்களில் ரூபா 13,193,408 பெறுமதியான 13 உபகரண வகைகள் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் பகிர்ந்தளிக்கப்படாமல் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தது.

(உ) அனர்த்த முகாமைத்துவ நிலையம் நடாத்திச் செல்லப்படும் கட்டிடம் வளிமண்டலவியல் திணைக்களத்திற்குரிய காணியொன்றில் 2010 ஆம் ஆண்டின் போது நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும், அக்காணியை நிலையத்திற்கு கையேற்கும் நடவடிக்கைகள் 2015 யூன் 30 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஊ) அமைப்பிற்குரிய ரூபா 206,011 பெறுமதியான பொருள் இருப்பொன்று காணாமல் போய் 07 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும், அப்பெறுமதியை அறவிடுவதற்கு அல்லது பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) ஒழுக்காற்று பரிசோதனையொன்று மூலம் குற்றவாளியாக்கப்பட்ட நிலையத்தின் இரண்டு உத்தியோகத்தர்களுக்கு 2011 ஆம் ஆண்டிலிருந்து ரூபா 272,168 தொகையும் மேலும் இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 132,000 தொகையும் அறவிடப்பட வேண்டிய போதிலும், 2015 யூன் 30 ஆந் திகதி வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) நிலையத்திற்குச் சொந்தமான வாகனமொன்று மீளாய்வாண்டின் சனவரி மாதத்தின் போது விபத்திற்குட்பட்டிருந்ததுடன், அது தொடர்பாக ரூபா 168,645 ஆன நட்டமொன்று கணக்கிடப்பட்டிருந்தது. அந்நட்டத்தை அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் யூலை மாதத்தின் போது அவ்விபத்திற்கு குற்றவாளியாக்கப்பட்ட உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், 2015 யூன் 30 ஆந் திகதி வரையிலும் அறவிடுவதற்கு நிலையம் தவறியிருந்தது.

4.3 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை 257 ஆக இருந்த போதிலும், உள்ளவாறான எண்ணிக்கை 224 ஆக இருந்தமையால் வெற்றிடங்கள் 33 ஆக இருந்தது. அதன் பிரகாரம் பணிப்பாளரொருவர், 07 பிரதிப் பணிப்பாளர்கள், 02 மொழிபெயர்ப்பாளர்கள் மற்றும் 03 தொடர்பாடல் தொழில்நுட்ப வல்லுனர்கள் தொடர்பாக 04 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக காணப்பட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்கு 2015 யூன் 30 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிலையத்தின் அனர்த்தத்தை தவிர்ப்பதற்கும் குறைப்பதற்குமான பிரிவு பணிப்பாளர் (செயற்பாடு) மற்றும் 03 உதவி முகாமைத்துவ உத்தியோகத்தர்களை உள்ளடக்கியிருந்த போதிலும், பிரதிப் பணிப்பாளர், உதவிப் பணிப்பாளர் பதவிகளுக்காகவும் செயற்திட்டங்களின் தொடர் நடவடிக்கைகளை பரீட்சிப்பதற்கு தேவையான உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

5.1 அனர்த்த முகாமைத்துவ நிலைய அதிகாரச்சட்டத்தை உருவாக்குதல்

2005 இன் 13 ஆம் இலக்க இலங்கை அனர்த்த முகாமைத்துவ அதிகாரச்சட்டத்தின் 18 ஆம் பிரிவின் கீழ் அனர்த்த முகாமைத்துவ நிலையம் செயற்படுத்தப்பட்டுள்ளது. இந்த அதிகாரச்சட்டம் அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் திருத்தம் செய்யப்பட்டு சட்ட வரைவுத் திணைக்களத்திற்கு 2014 யூன் 16 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. 2015 ஆகஸ்ட் 31 ஆம் திகதி வரையிலும் அந்த வரைவு அதிகாரச்சட்டத்திற்காக அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை.

5.2 தேசிய அவசர செயற்பாட்டுத் திட்டம்

இத்திட்டம் 2015 மே 31 ஆம் திகதி வரையிலும் வரைவு நிலையிலேயே காணப்பட்டது.

5.3 உள்ளகக் கணக்காய்வு

நிலையத்தின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவிற்காக 02 கணக்காய்வு உத்தியோகத்தர்கள் மாத்திரம் இணைக்கப்பட்டிருந்தமையால் நிலையத்தின் அனைத்து நடவடிக்கைகளையும் மேவுகை செய்யக்கூடிய வகையில் விரிவான கணக்காய்வொன்றை மேற்கொள்ள முடியாமல் இருந்தது.

6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

நிலையத்தின் உள்ளகக் கட்டுப்பாடு மற்றும் தொடர்புடைய கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது பணிப்பாளர் நாயகத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதுடன், பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) அனர்த்த இடரினைக் குறைக்கும் செயற்திட்டங்கள்
(இ) பதவியணியினர் நிர்வாகம்

ஒப்பம்: டபிள்யூ.பீ.சீ.விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி (பதில்)

கணக்காய்வாளர் நாயகம்,
கணக்காய்வாளர் திணைக்களம்,
306/72,
பத்தரமுள்ளை.

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் 2014 டிசெம்பர் 31ஆம் திகதியுடன் நிறைவடையும் வருடத்துக்கான நிதி அறிக்கை தொடர்பில் 1971ஆம் ஆண்டு 38ஆம் இல்க்க நிதிச் சட்டத்தின் 14 (2) (சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வு அறிக்கை.

மேலே குறிப்பிடப்பட்ட விடயம் தொடர்பிலான தங்களது டீஈ2/ஜீ/டீஎம்சீ/1/14/18 எனும் அதே இலக்கத்தைக் கொண்ட 2015 ஜுன் 08ஆம் திகதிய கடிதம் தொடர்பானது. இதற்கான விளக்கம் முன்வைத்தல் பின்வருமாறாகும்.

2.1 நிதிக் கூற்றுக்கள் தொடர்பான கருத்து வெளியீடு

2.1.1 இலங்கை கணக்கீட்டுத் தரங்கள்

இலங்கை கணக்கீட்டுத் தர இலக்கம் 07

உடன்படுகின்றேன்.
2015ஆம் ஆண்டு தொடக்கம் குறிப்பிட்ட தரங்களுக்கமைவாக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

2.1.2 கணக்கீட்டு குறைபாடுகள்

(அ) உடன்படுகின்றேன்.

2015இல் நிலையான சொத்துக்கள் கணக்கில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

(ஆ) உடன்படுகின்றேன்.

இந்த 52 கருத்திட்டங்களும் வேலை நிறைவு பெறாத கருத்திட்டங்களாக கணக்கு கூற்றில் உள்ளடக்க வேண்டியமைக்கான தரவுகள் நிதி அமைச்சுக்கு வழங்கப்படாமையினால் நிதிக் கூற்றில் உள்வாங்கப்படவில்லை. 2015ஆம் ஆண்டு தொடக்கம் குறிப்பிட்ட தகவல்களை குறிப்பிட்ட பிரிவுகளிலிருந்து பெற்றுக் கொண்டு கணக்குக் கூற்றில் உள்ளடக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

2.1.3 கணக்காய்வுக்கான சாட்சிகளின்மை

குறிப்பிட்ட விபரங்கள் 2015.07.13ஆம் திகதிய கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

2.4 சட்டதிட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இசையாமை

(அ) இந்த உத்தியோகத்தருக்கு தமது உத்தியோகபூர்வ கடமைகளுக்காக அனர்த்த முகாமைத்துவ அமைச்சுக்கு வருவதற்கும், கடமை நிறைவடைந்து தமது வீட்டுக்கு செல்வதற்குமாக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் வாகனமொன்று வழங்கப்பட்டது. இந்த உத்தியோகத்தர் இது வரை அனர்த்த முகாமைத்துவ நிலையத்தில் 05 மாதங்கள் வரை கடமையாற்றியுள்ளார். அவருக்கு கிடைக்கப்பெற்ற பதவியுயர்வுடன் மீண்டும் இலங்கை கடற்படையில் சேவைக்கு செல்ல வேண்டுமெனவும், பணிப்பாளர் (கருமமாற்றல்) பதவிக்கு வேறு

கடற்படை உத்தியோகத்தரொருவர் பெயர் குறிக்கப்பட்டுள்ளமையால், குறித்த பின்னுரிமை உத்தியோகத்தருக்கு இக்கடமையை ஒப்படைக்க அனுமதிக்குமாறும் கோரி 2014.10.16ஆம் திகதிய கடிதத்தினால் நிலையத்துக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

தேசிய வரவு செலவு சுற்றறிக்கை இலக்கம் 1/2014 2.1.3 இல் V வது பந்தியில் காட்டப்பட்டுள்ளவாறு வாகனத்தை இணைப்பது தொடர்பான விபரங்களை இலங்கை கடற்படையிலிருந்து பெற்றுக் கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தபோதிலும் குறித்த உத்தியோகத்தர் மீண்டும் கடற்படையில் சேவையாற்றச் செல்ல வேண்டுமென தெரிவித்ததனால் குறித்த விபரங்களைப் பெற்றுக் கொள்வதற்காக கடிதம் முன்வைக்கப்படவில்லை.

(ஆ) வெளிநாட்டுப் பயிற்சிகளில் ஈடுபடுவதற்கு முன்னர் அது தொடர்பான அறிக்கையொன்றை 07 நாட்களுக்குள் சமர்ப்பிக்க வேண்டுமென வாய்மூலமாகவும் எழுத்து மூலமாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அமைச்சின் உள்ளக சுற்றிக்கை 04/2014 மூலம் சகல பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது)

இதன் பிரகாரம் இந்த உத்தியோகத்தர்கள் கலந்து கொண்ட வெளிநாட்டு உத்தியோகபூர்வ பயணங்கள் தொடர்பான அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

(இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம்

(i) நிதிப் பிரமாணம்

இந்தப் பத்து விபத்துக்கள் தொடர்பான ஆரம்ப அறிக்கைகள் அல்லது பூரணமான அறிக்கைகள் ஒரு மாத காலத்துக்குள் சமர்ப்பிக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

(ii) நிதிப் பிரமாணம்110

சேதங்கள் தொடர்பான பதிவேட்டில் உள்ளக்கப்பட வேண்டிய தகவல்கள் நிதிப் பிரிவுக்கு வழங்கப்படாமையால் அதில் உள்ளடக்க முடியவில்லை என்பதுடன் எதிர்வரும் நாட்களில் நிருவாகப் பிரிவிலிருந்து குறித்த தகவல்களைப் பெற்று சேதங்கள் தொடர்பான பட்டியலில் உள்ளடக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

(iii) நிதிப் பிரமாணம் 371 (2) (ஆ)

முற்பணம் பெறல் மற்றும் அவற்றை தீர்த்து வைத்தல் தொடர்பில் செயற்பட வேண்டிய விதம் குறித்து தெளிவுபடுத்தி உள்ள சுற்றிக்கையொன்று 2015 மே மாதம் 29ஆம் திகதி சகல உத்தியோகத்தர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன், ஜூன் மாதம் முதல் குறிப்பிட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் சகல உத்தியோகத்தர்களும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனவும் ஆலோசனையும் வழங்கப்பட்டுள்ளது. இதன்பிரகாரம் இனிமேல் முற்பணம் தீர்த்தல் தொடர்பில் எத்தகைய தாமதமும் ஏற்பட மாட்டாது என்பதை அறியத்தருகின்றேன்.

(iv) நிதிப் பிரமாணம் 371 (5)

இந்த முற்பணத்தை தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவ்வருடம் தொடக்கம் இனிமேல் சகல (நிதி மற்றும் வேலைகள்) முற்பணங்களையும் டிசெம்பர் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை அறியத் தருகின்றேன்.

(v) நிதிப் பிராமாணங்கள் 757 (1) (அ) மற்றும் (ஆ)

எதிர்காலத்தில் நிதிப் பிரமாணம் 757 (1) (அ) மற்றும் (ஆ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

(vi) நிதிப் பிரமாணம் 1647

நிறுவனத்துக்குரிய 37 வாகனங்களில் 25 வாகனங்களின் கருவிகள் பற்றிய முழுமையான ஆய்வொன்று நடத்தப்பட்டுள்ளதுடன், இதன் அறிக்கையும் தயாரிக்கப்படுகின்றது. எஞ்சிய 12 வாகனங்கள் தொடர்பான ஆய்வுகளையும் துரிதமாக நிறைவு செய்யப்பட்டு இதன் முழுமையான அறிக்கையை ஒரு மாத காலப்பகுதிக்குள் சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறிவிக்கின்றேன்.

4. கருமமாற்றல் மீளாய்வு

4.1 செயலாற்றுகை

(அ) அனரத்த ஆபத்துக்களை தணிப்பதற்கான கருத்திட்டம்

(அ) 2014ஆம் ஆண்டுக்கான செயலாற்றுகைத் திட்டமானது 2013ஆம் ஆண்டின் இறுதியில் முன்னுரிமைக் கருத்திட்டம் தயாரிக்கப்பட்டு அதன்படி தயார் செய்யப்பட்டுள்ளது. அதன்படி ஆரம்ப கட்டத்தில் 148 கருத்திட்டங்கள் உள்வாங்கப்பட்டிருந்தபோதிலும் பின்னர் இந்தக் கருத்திட்டங்கள் தொடர்பாக பிரதேச அரசியல் அதிகாரமுள்ளவர்களிடமிருந்தும் மாவட்ட அபிவிருத்திக் குழுக்களிடமிருந்தும் பெறப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு முன்னுரிமைக் கருத்திட்டங்களை தயார்படுத்தி செயலாற்றுகை திட்டத்தை திருத்த வேண்டி நேரிட்டதனால் ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளின் மூலம் சுமார் 108கருத்திட்டங்களை செயற்படுத்த வேண்டி ஏற்பட்டது. திருத்தப்பட்ட கருத்திட்டப் பட்டியலின் பிரதிகள் அமைச்சுக்கும் இடைக்கால முகாமைத்துவ சபைக்கும் அனுப்பி வைக்கப்பட்டதுடன் திருத்தப்பட்ட செயலாற்றுகை அறிக்கையின் பிரதி கணக்காய்வுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

(ஆ) நிலையத்தின் திருத்தப்பட்ட செயலாற்றுகை திட்டத்தில் இந்தக் கருத்திட்டங்கள் முன்வைக்கப்படவில்லை என்பதை அறியத்தருகின்றேன்.

(இ) இந்தக் கருத்திட்டம் 2014ஆம் ஆண்டுக்கான செயலாற்றுகைத் திட்டத்தில் உள்ளடங்கியமை தவறுதலாக இடம்பெற்றுள்ளதுடன் முன்னேற்ற மீளாய்வின்போது இந்தக் கருத்திட்டத்தின் முன்னேற்றம் முன்வைக்கப்பட்டுள்ளது. இனிமேல் அத்தகைய குறைபாடுகள் ஏற்படாமல் இருப்பதற்கான வகை செய்யப்படும்.

(ஈ) எதிர்வரும் வருடங்களுக்கான கருத்திட்டங்களுக்கான நிதியை ஒதுக்கீடு செய்யும்போது தேசிய திட்டமிடல் திணைக்களத்துக்கு கருத்திட்டங்களின் சுருக்கமான அறிக்கையொன்றை அதன் மாதிரியின் பிரகாரம் சமர்ப்பிக்கப்படுமென்பதுடன், மதிப்பீட்டுப் பெறுமதியானது மொத்தப் பெறுமதியாக அமையும். கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தும்போது அளவிடலை மேற்கொண்டு மீண்டும் விபரமான மதிப்பீடுகள் சமர்ப்பிக்கப்படுமென்பதை அறியத்தருகின்றேன்.

(உ) இதன்போது 40% இற்கும் அதிகமாக ஒதுக்கீடுகள் வழங்கப்படுவதற்கான காரணம் நிதி ஒதுக்கீடுகள் தாமதமடைகையில் கருத்திட்டங்களுக்கான ஒப்பந்தங்களை மேற்கொள்ளும்போது மாவட்ட செயலகங்களில் பிரச்சினைகள் எழும் என தெரிவிக்கப்பட்டதனால் ஒப்பந்தங்கள் செய்துகொள்ளப்படுவது தாமதமடைவதை தவிர்க்கும் நோக்குடனும் இந்த மாவட்டங்களில் முன்னைய ஆண்டுகளில் காணப்பட்ட முன்னேற்றத்தின் அடிப்படையில் கருத்திட்டங்களை வினைத்திறனுடன் மேற்கொள்வதற்கான ஒத்துழைப்பினை நல்குவதற்குமாகும். அதேபோன்று சில மாவட்ட செயலகங்களில் கருத்திட்டங்களுக்கான ஒப்பந்தங்களை செய்து கொள்ளும்போது நிலையத்தினால் வழங்கப்படும் பணத்தில் சுமார் 20% நிதி ஒதுக்கம் ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தமையும் இதற்கான ஒரு காரணமாயமைந்தது. எவ்வாறெனினும் குறித்த குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக அறிவிக்கின்றேன்.

(ஊ) கருத்திட்டத்துக்கான அனைத்து பற்றுச்சீட்டுக்களையும் ஒப்பந்தங்களையும் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், நிர்மாணப்பணிகளுக்கான ஒப்பந்தங்கள் வழங்கப்படும் வரையில் மீதி நிதிஏற்பாடுகள் வழங்கப்படமாட்டாது என்பதை அறியத்தருகின்றேன்.

(எ) குறித்த கோரல் படிவங்களை (ரிக்விசிஷன்) பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், பற்றுச்சீட்டுக்களையும் கருத்திட்டம் பூர்த்தியடைந்தமைக்கா அறிக்கையினையும் வழங்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் பற்றுச்சீட்டுக்களையும் கருத்திட்டம் பூர்த்தியடைந்தமைக்கான அறிக்கையினையும் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(ஏ) கருத்திட்டங்களின் பின்னாய்வு பற்றிய அறிக்கைகள் குறித்த கருத்திட்டங்களின் கோப்புக்களில் சேர்க்கப்படவில்லையாயினும், கள அவதானிப்பின் பின்னர் குறித்த அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. கருத்திட்டங்களின் முன்னேற்றமானது மாதாந்தம் இடைக்கால முகாமைத்துவ சபை மற்றும் அமைச்சுக்கும் தவணைரீதியில் மீண்டும் அமைச்சுக்கும் ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளது.

(ஐ) குறித்த கருத்திட்டத்துக்கான கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. குறித்த கடிதம் மாவட்ட செயலாளரிடமிருந்து கிடைக்கப் பெற்றதன் பின்னர் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் ஹொரணை பிரதேச செயலாளர், தாழ்நிலங்களை மீட்கும் மற்றும் அபிவிருத்தி செய்யும் சபை மற்றும் குறித்த பிரதேசத்தின் அரசியல் தலைமைத்துவம் ஆகியவற்றுடன் இடம்பெற்ற

பேச்சுவார்த்தையின் பின்னர் கருத்திட்டத்தை விரைவாக பூர்த்தி செய்வதாக இணங்கியதன் அடிப்படையில் மீதிப் பணம் செலுத்தப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றேன்.

(ஒ) இந்தக் கருத்திட்டுக்கான கள ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு பிரதேச செயலாளர் மற்றும் மாவட்ட செயலாளருடனும் பேச்சவார்த்தைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆனால், குறித்த கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துகையில் அத்துமீறிய குடியிருப்பாளர்களை அகற்றுவதில் குறித்த தரப்பு நிறுவனங்களின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்வதில் சிக்கல் எழுந்தது. ஆகவே, கருத்திட்டத்தின் பணிகளை ஆரம்பிப்பதில் தாமதம் ஏற்பட்டதுடன், சில நீண்ட சுற்றுப் பேச்சுவார்த்தைகளின் பின்னர் நடைமுறைப்படுத்துவதற்கு இணங்கியபோதிலும், வருட இறுதியல் நிலவிய மழை காரணமாக கருத்திட்டத்தை செயற்படுத்துவது சிக்கலாக அமைந்தது.

(ஓ) மீதி 108 கருத்திட்டங்களினதும் மீதிப் பணம் 2015.05.31ஆம் திகதி பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றேன்.

(ஔ) கருத்திட்டங்களின் முன்னேற்றமானது மாதாந்தம் இடைக்கால முகாமைத்துவ குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், தவணைமுறையில் நடத்தப்படும் முன்னேற்ற மீளாய்விலும் மீளாய்வுக்கு உட்டுத்தப்பட்டுள்ளது. கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துகையில் பின்பற்ற வேண்டிய ஆலோசனைகள் உள்ளடங்கிய ஆலோசனை வழிகாட்டியொன்று சகல மாவட்டங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. மேலும், கள ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டு கருத்திட்டங்களின் முன்னேற்றம் குறித்து ஆராய்ந்து பார்த்து குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
அம்பாந்தோட்டை மாவட்டத்தில் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில், கருத்திட்டங்களுக்கான கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்காக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் மாவட்ட செயலாளருக்கு வழங்கப்பட்ட பணமானது நிலையத்துடன் தொடர்புபடாத வேறு கணக்குகளில் ஈடுபடுத்தப்பட்டதாக அறியவந்தமை சிக்கலாக அமைந்தது. ஆனால், குறித்த கருத்திட்டங்கள் பௌதீகரீதியில் பூர்த்தி செய்யப்பட்டிருந்தமையால் அவை வேலை பூர்த்தி செய்யப்பட்ட கருத்திட்டங்களாக காட்டப்பட்டுள்ளன என்பதை அறியத்தருகின்றேன்.

(உ) 03 மாவட்டங்களில் 18 கருத்திட்டங்களுக்கான ரூ.45,870,783 நிதித்தொகை செலவிடப்படவில்லையென டீஈ02/ஜீ/டீஎம்/சி/விவி12/2014 கணக்காய்வு விசாரணைக்கான பதிலில் அறிவிக்கப்பட்டுள்ளதுடன், கணக்காய்வு அறிக்கையின் பிரகாரம் குறித்த 20கருத்திட்டங்களுக்கான ரூ.46,534,568 முழுமையான மதிப்பிடப்பட்ட நிதித்தொகையும் மாவட்ட செயலாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதென குறிப்பிடப்பட்டுள்ளது என்பதையும் அறியத்தருகின்றேன்.
தற்போது 18 கருத்திட்டங்களில் 16 கருத்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. புத்தளம் மாவட்டத்தில் தித்தகடை வாவியை புனரமைக்கும் கருத்திட்டத்தையும் கம்பஹ மாவட்டத்தில்

ஒரு கருத்திட்டத்தையும் பிரதேச அரசியலுடனான ஒரு சிக்கல் நிலை தோன்றியதன் விளைவாக வருடத்தின் இறுதிப் பகுதியில் ஆரம்பிக்க வேண்டி ஏற்பட்டது என்பதை அறிவிப்பதுடன், கருத்திட்டமானது டிசெம்பர் மாதம் 31ஆம் திகதியளவில் ஆரம்பிக்கப்பட்டிருந்தது என்பதையும் அறியத்தருகின்றேன்.

(ஊ)

(i) கருத்திட்டத்தின் ரூ. 5,029,042 பெறுமதியான இறுதி பற்றுச்சீட்டுக்கு மேலதிகமாக கருத்திட்டத்தின் நிருவாக செலவாக ரூ..438,647 பணத்தொகை மாவட்ட செயலகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும், கருத்திட்டத்தின் வேலைப்பூர்த்தி அறிக்கையை வழங்குமாறு மாவட்ட முகாமைத்துவப் பிரிவுக்கு நினைவூட்டல் கடிதங்களை அனுப்பியுள்ளதாகவும், குறித்த அறிக்கைகள் கிடைக்கப் பெற்றதன் பின்னர் கணக்காய்வு சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் அறிவிக்கின்றேன்.

(ii) குருகொடை வாவி கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் ஏற்பட்ட சிக்கல் நிலை காரணமாக நிருவாகத்தின் ஆலோசனையின் பிரகாரம் அரசாங்க திணைக்களமான நீர்ப்பாசன திணைக்களத்துடன் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு கருத்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டதுடன், கருத்திட்ட பூர்த்தி அறிக்கையினையும் குறித்த கொடுப்பனவுகளின் பற்றுச்சீட்டுக்களையும் பெற்றுக்கொள்வதற்கான துரித நடவடிக்கை மேற்கொள்வதுடன், மீதிப் பணம் நிலையத்துக்கு வழங்கப்பட்ட கோரல் படிவங்களை (ரிக்விசிஷன்) இத்துடன் சமர்ப்பிப்பதாக அறிவிக்கின்றேன்.

(iii) குறித்த கருத்திட்டத்துக்கான வேலைப் பூர்த்தி அறிக்கை, ஒப்பந்தங்கள், கோரல் படிவங்கள் (ரிக்விசிஷன்) மற்றும் பற்றுச்சீட்டுக்கள் அனைத்தும் நிலையத்துக்கு கிடைக்கப்பெற்றுள்ளன என்பதை அறியத்தருகின்றேன்.

(iv) தேசிய இடர் முகாமைத்துவ சபையின் தீர்மானத்தின் பிரகாரம் இக்கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக முற்பணம் வழங்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டதுடன், கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் எழுந்த நிருவாகச் சிக்கல்கள் காரணமாக சில மாத கால தாமதம் ஏற்பட்டதாகவும், 2014ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 26ஆம் திகதி அம்பாந்தோட்டையில் இடம்பெற்ற தேசிய பாதுகாப்பு தினத்துடன் இணைந்த வகையில் இக்கருத்திட்டத்தை அங்குரார்ப்பணம் செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டு 2014ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 26ஆம் திகதிக்கு முன்னர் கருத்திட்டத்தின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டன என்பதை அறியத்தருவதுடன், இரண்டு வருட கால தாமதம் ஏற்படவில்லை என்பதையும் அறியத்தருகின்றேன்.

(i) களுத்துறை, பாணதுறை பெருவெள்ள அனர்த்த தணிப்பு கருத்திட்டம்

- கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துகையில் எழுந்த சிக்கல் நிலை காரணமாக 2015.05.31ஆம் திகதிக்கு வேலை முற்றுப்பெறவில்லை என்பதுடன், மீதி வேலைகளைப் பூர்த்தி செய்வதற்காக காணி மீட்புப் திணைக்களமானது காலத்தை நீடித்துள்ளது என்பதை தயவுடன் அறிவிக்கின்றேன்.

- குறித்த பற்றுச்சீட்டுக்களைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- மீதி ரூ.36,726,383 பணமும் 2015 மே மாதம் செலுத்தப்பட்டுள்ளதுடன், இதற்கான கோரல் படிவங்களை (ரிக்விசிஷன்) பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக அறியத்தருகின்றேன்.
- இது தொடர்பில் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளின் அவதானிப்புக்கள் குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக அறியத்தருகின்றேன்.

(ii) தம்புள்ளை பெருவெள்ள அனர்த்த தணிப்பு கருத்திட்டம்

- குறித்த கருத்திட்டத்துக்காக 2011ஆம் ஆண்டு முதல் 2012ஆம் ஆண்டு ஒக்தோம்பர் மாதம் முதலாம் திகதி வரையிலான கொடுப்பனவாக ரூ.10,236,468.78 பணத்தொகை செலுத்தப்பட்டு கோரல் படிவம் (ரிக்விசிஷன்) பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. பின்னர், இரண்டாவது கட்டத்தில், நிருவாக சிக்கல் தொடர்பில் ஜனாதிபதி விசாரணை மேற்கொள்ளப்பட்டமையினால், குறித்த கட்டத்துக்காக ஒதுக்கப்பட்ட நிதிக் கொடுப்பனவு செலுத்தப்படாது, குறித்த பணமானது மாவட்டரீதியிலான தணிப்பு கருத்திட்டங்களில் ஈடுபடுத்தப்படடுள்ளது. 2014ஆம் ஆண்டில் வேலைகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்பட்டபோதிலும், திறைசேரியிலிருந்து கொடுப்பனவுக்குப் போதுமான பணம் கிடைக்கப்பெறாமையால், கருத்திட்டத்தின் பற்றுச்சீட்டுக்களுக்கான நிலுவைக் கட்டத்தை செலுத்துவதற்குத் தேவையான நிதி ஏற்பாடுகள் 2015.06.24ஆம் திகதி வழங்கப்பட்டுள்ளது. குறித்த செலவுகள் தொடர்பிலான செலவு அறிக்கைகள் அனைத்தும் நிலையத்துக்கு கிடைக்கப் பெற்றுள்ளன என்பதை அறியத்தருகின்றேன்.

(iii) யாழ்ப்பாணக் குடாநாட்டில் பெருவெள்ள அபாயத் தணிப்புக் கருத்திட்டம்

- கோரல் படிவங்களை (ரிக்விசிஷன்) பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதை அறியத்தருகின்றேன்.
- இக்கருத்திட்டமும் மூன்று வருட காலம் பூராகவும் மேற்கொள்ளப்பட்ட ஒரு கருத்திட்டமாகையால், இறுதி பற்றுச்சீட்டுக்கான கொடுப்பனவை செலுத்துவதற்கு முன்னர் கோரல் படிவங்கள் (ரிக்விசிஷன்) மற்றும் சகல பற்றுச்சீட்டுக்களையும் இக்கருத்திட்டத்தின் முழுமையான தேர்ச்சி பற்றிய விபரமான அறிக்கையினையும், வேலை பூர்த்தி செய்யப்பட்டமைக்கான அறிக்கையினையும் கணக்காய்வுக்கு முன்வைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக அறியத்தருகின்றேன்.

(அ) முன் ஏற்பாட்டு திட்டங்களை தயார் செய்வதற்கான நடவடிக்கைகள்

(i) 2014ஆம் ஆண்டின் செயலாற்றுகை அறிக்கையின் பிரகாரம் 797 வேலைத்திட்டங்கள் நடத்தப்பட்டதுடன், குறித்த வேலைத்திட்டங்களின் இறுதியில் மதிப்பீட்டு அறிக்கைக்காக, பங்குபற்றியவர்களில் பெரும்பாண்மையானோர் மிகவும் தெளிவாக கருத்துக்

தெரிவித்திருந்ததுடன், குறைந்த எண்ணிக்கையானவர்கள் தெளிவாக கருத்துத் தெரிவித்திருக்கவில்லை. கருத்துத் தெரிவிப்பில் காணப்படும் தெளிவுத்தன்மையானது அவர்களது ஊக்கத்தை பொறுத்திருப்பதனால், எதிர்காலத்தில் மதிப்பீட்டு அறிக்கைகளை நிரப்புவதில் மாவட்ட உதவி பணிப்பாளரின் தலையீட்டுடன் நடவடிக்கைகளை மேற்கொள்வதாக அறியத் தருகின்றேன்.

(ii) 2014ஆம் ஆண்டின் நான்காவது தவணைக்காக முன் ஆயத்த பிரிவுக்கு 2014.10.15ஆம் திகதி பணம் கிடைத்ததுடன், குறித்த பணம் கிடைக்கப் பெற்றதும் 2014ஆம் ஆண்டின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையின் பிரகாரம் பிறப்பித்தபோதிலும், நான்காவது தவணைக்காக அந்தந்த மாவட்டங்களினால் திட்டமிடப்பட்ட வேலைத்திட்டங்களுக்கான நிதி அக்காலகட்டத்தினுள் உரிய விதத்தில் கிடைக்கப்பெறாமையால் குறித்த வேலைத்திட்டங்களை 2014ஆம் ஆண்டு டிசெம்பர் மற்றும் 2015ஆம் ஆண்டு ஜனவரி மாதங்களில் நடத்த வேண்டி ஏற்பட்டது. இதனால் குறித்த நிதிச் செலுத்துகை தாமதமானது என்பதை அறியத்தருகின்றேன்.

4.2 முகாமைத்துவ வினைத்திறனின்மை

(அ) குறித்த செயற்கைக்கோள் தொழிநுட்ப உபகரணங்களில் Redundant Switch உபகரணமானது பழுதுபார்க்கும் நடவடிக்கைகளுக்காக Inova Engineering நிறுவனத்தினால் எடுத்துச் செல்லப்பட்டுள்ளதுடன், அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் வேண்டுகோளின் பிரகாரம் குறித்த உபகரணமானது மீண்டும் வழங்கப்பட்டுள்ளது. இதுவும் ஏனைய உபகரணங்களுடன் அனர்த்த முகாமைத்தவ நிலையத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளது.

(ஆ) குறித்த காலப்பகுதியில் 77 முன்கூட்டிய அபாய எச்சரிக்கை கோபுரங்கள் தாபிக்கப்பட்டிருந்ததுடன், இதில் 25 கோபுரங்கள் இரண்டாவது கட்டத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்தமையால் இதற்கான ஒரு வருட உத்தரவாதம் கிடைக்கப்பெற்றிருந்தது. ஆனால், குறித்த கோபுரங்களைப் பெற்ற நிறுவனங்களான போசயிட் நிறுவனமானது அமெரிக்க சிங்னல் நிறுவனத்துடன் ஒப்பந்தங்களை கைச்சாத்திட்டுள்ளபோதிலும், குறித்த ஒப்பந்தங்கள் எமக்கு முன்வைக்கப்படவில்லை. ஆனால், இக்கருத்திட்டத்தின் இறுதியில் இதற்கான ஒப்பந்தங்களை அனர்த்த முகாமைத்துவ நிலையத்துக்கு சமர்ப்பிப்பதாக அவர்களுடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளின்போது தெரிவிக்கப்பட்டது. இக்கொடுப்பனவுகளை போசயிட் நிறுவனத்தின் ஊடாக மேற்கொள்வதற்கான முதன்மைக் காரணம், இக்கொடுப்பனவுகளை இரு பகுதிகளாக, அதாவது, முதற் கட்டத்தில் 52 முன்கூட்டிய அபாய எச்சரிக்கை கோபுரங்களுக்கும், உத்தரவாதத்துடன் நிர்மாணிக்கப்பட்டுள்ள மீதி 25 முன்கூட்டிய அபாய எச்சரிக்கை கோபுரங்களின் நடவடிக்கை மற்றும் தொழிற்பாட்டுக்காக வெவ்வேறாக அமெரிக்கன் சிக்னல் கோபரேஷன் நிறுவனத்துக்கு வழங்க முடியாமையினால், கூடிய அநுபவம் கொண்ட ICET நிறுவனத்தின் ஊடாக செயற்கைக் கோள் தொழிநுட்ப தொடர்புகளுக்காக அவ்வாறு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டது. குறித்த செயற்பாடானது மூன்றாவது தரப்பினரது தொடர்பாகக் காணப்படுவதனால் எதிர்காலத்தில் இக்கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்காக

அமெரிக்கன் சிக்னல் கோபரேஷன் நிறுவனத்துடன் தொடர்புகள் கட்டியெழுப்பப்படுவதுடன், குறித்த நிறுவனத்துடன் இதற்கு முன்னர் கணக்காய்வு விசாரணையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதன் பிரகாரம் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

(இ) குறித்த மோட்டார் சைக்கிள்களை சுவீகரிப்பில் தேவையான ஆவணங்களில் காணப்படும் குறைபாடுகள் தாக்கம் செலுத்தியுள்ளதுடன், எதிர்காலத்தில் குறித்த சுவீகரிப்பு நடவடிக்கைகளை உரிய விதத்தில் மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். சுவீகரிப்பு முடிவடைந்தவுடன் நிலையத்தின் சொத்துக்களில் சேர்க்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

(ஈ) இடைக்கால முகாமைத்துவ குழுவினால் வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகளின் பிரகாரம், வெளிநாட்டு நன்கொடைக் கிடைப்பனவுகளை பொதுத்திறைசேரிக்கு அனுப்பி, இதற்கான வரவு-செலவு நிதி ஏற்பாட்டுகளை ஒதுக்கிக் கொள்ளுதல் வேண்டும். இதன் பிரகாரம், ரூ 7,410,000 நிதியை பொதுத் திறைசேரிக்கு ஆற்றுப்படுத்தி 2014ஆம் ஆண்டில் ஏற்பாடுகளுக்கு விண்ணப்பித்தபோதிலும் அவற்றைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை. 2015ஆம் ஆண்டில் குறித்த நிதியானது குறிப்பிட்ட விடயங்களுக்காக பயன்படுத்தப்பட்டுள்ளது.

(உ) தற்போது சகல பண்டங்களினதும் பகிர்ந்தளிப்பு நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

(ஊ) கட்டிடமானது கணக்காய்வு நடவடிக்கைகளில் உள்வாங்கப்படாமைக்கான காரணம் இதன் உரிமை இதுவரையில் நிலையத்தின் பெயருக்கு மாற்றப்படாமையாகும் என்பதை அறியத்தருகின்றேன்.

இக்கட்டிடமானது வானிலை ஆராய்ச்சித் திணைக்களத்தின் காணியில் அமைக்கப்பட்டுள்ளதுடன், குறித்த காணியை சுவீகரிக்கையில் நிலையத்துக்குக்கு இதற்காக பாரிய நிதியை செலுத்த வேண்டி ஏற்படுவதனால் குறித்த கொடுப்பனவுக்கான நிதியை அமைச்சரவை பத்திரமொன்றின் மூலம் விடுவிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(எ) அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் வேயன்கொடை கிளையில் 2007ஆம் ஆண்டு காணாமற்போன பண்டங்களுக்கான பணத்தை அறவிடுவதற்கான இறுதி நடவடிக்கையினை, குறித்த தரப்பினருக்கு எதிரான சட்ட நடவடிக்கைகள் இதுவரையில் பூர்த்தி செய்யப்படாமை காரணமான இதுவரையில் மேற்கொள்ள முடியவில்ல என்பதை அறியத்தருகின்றேன். மேலும், குறித்த சட்ட நடவடிக்கையின் முடிவில் கிடைக்கப்பெறும் பெறுபேற்றிக்கமைய இதற்கான சீராக்கல் நிதிக்கூற்றுக்களில் காட்டப்படும்.

(ஏ) இது தொடர்பான விபரம் நிதிப் பிரிவுக்கு உரிய விதத்தில் அறிக்கையிடப்படாமையினால், இறுதிக் கணக்குகளில் பதியப்படவில்லை என்பதுடன், எதிர்காலத்தில் இது பற்றிய தரவுகளை நிருவாகப் பிரிவிலிருந்து பெற்றுக்கொண்டு உரிய விதத்தில் கணக்கு வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

(ஒ) மாத்தறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவுக்கு இணைக்கப்பட்டுள்ள WPPB7695 வாகனம் விபத்துக்குள்ளாகியுள்ளது. இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட ஆரம்பகட்ட விசாரணையின் பிரகாரம் குறித்த விபத்துக்கு மாத்தறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவி பணிப்பாளர் பதவிக்கு இலங்கை இராணுவத்திலிருந்து இணைப்பட்டிருந்த மேஜர் ஜெனரல் திரு.எஸ்.கே.பாலசூரிய பொறுப்புக்கூற வேண்டுமெனத் தெரியவந்தது. இதன் பிரகாரம் இந்த விபத்தினால் அனர்த்த முகாமைத்துவ நிலையத்துக்கு ஏற்பட்ட பணரீதியிலான நட்டத்தை உத்தியோகத்தரிடமிருந்து அறவிடுமாறு அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் செயலாளர் கட்டளை பிறப்பித்திருந்தார். குறித்த உத்தியோகத்தர் இலங்கை இராணுவத்தினால் இணைக்கப்பட்டுள்ள உத்தியோகத்தராகையால், அவர் தொடர்பான சகல நிருவாக நடவடிக்கைகளும், சம்பளக் கொடுப்பனவு உள்ளிட்ட ஒழுக்காற்று நடவடிக்கைகளும் இலங்கை இராணுவத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன. இதன் பிரகாரம், குறித்த பணத்தொகையை இந்நிலையத்துக்கு செலுத்துமாறு இராணுவத்தளபதிக்கு பிரதி சகிதம் குறித்த உத்தியோகத்தருக்கு எழுத்து மூலமாக அறிவித்துள்ளபோதிலும், இதுவரையில் குறித்த பணத்தொகை நிலையத்துக்கு செலுத்தப்படவில்லை.

தற்போது குறித்த உத்தியோகத்தர் மீண்டும் இலங்கை இராணுவத்துக்கு அழைக்கப்பட்டுள்ளமையால், குறித்த பணத்தொகையை அவரிடம் அறவிட்டு, அனர்த்த முகாமைத்துவ நிலையத்துக்கு செலுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இராணுவதளபதிக்கு எழுத்து மூலமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

4.3 பணியாட்தொகுதி முகாமைத்துவம்

(அ) பதவி – பணிப்பாளர் -01

இந்த நிலையத்தின் பணிப்பாளர் (கருமமாற்றல்) பதவிக்கு பல தடவைகளில் பகிரங்க பத்திரிகை விளப்பத்தின் ஊடாக விண்ணப்பங்கள் கோரப்பட்டபோதிலும், தகைமையுடைய ஒருவரை ஆட்சேர்க்க முடியவில்லை. ஆகவே, குறித்த பதவிக்கு தரை, கடல், வான் படைகளைச் சேர்ந்த சிரேஸ்ட உத்தியோகத்ரொருவரை தற்காலிக அடிப்படையில் நியமிப்பதற்கு இடர் முகாமைத்துவத்துக்கான தேசிய சபை தீர்மானித்ததன் பின்னர், அத்தகைய உத்தியேகத்தரொருவரை நியமிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. தற்போது கடற்படை உத்தியோகத்தரொருவர் தற்காலிக அடிப்படையில் இப்பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

பதவி – பிரதி பணிப்பாளர் -07

இந்த நிறுவனத்துக்கான அங்கிகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையில், முகாமைத்துவ சேவைகளுக்கான அங்கிகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் பிரதி பணிப்பாளர் பதவிக்கான ஆட்சேர்ப்பு இடம்பெறுவதில்லை என்பதுடன், உதவி பணிப்பாளர் பதவியில் தரம் 1இற்கு நியமிக்கப்பட்டதன் பின்னர், உதவி பணிப்பாளர் பதவி வகிப்பவர்களில் மூப்புரிமை

மற்றும் ஆற்றலை அடிப்படையாகக் கொண்டு பிரதி பணிப்பாளர் பதவிக்கு நியமிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

உதவி பணிப்பாளர் பதவியை வகிப்பவர்கள் சாதாரண செயலாற்றுதிறனின் அடிப்படையில் குறித்த சேவைப் பிரிவில் 10 வருட சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்ததன் பின்னர் குறித்த சேவைப்பிரிவில் தரம் 1இற்கு நியமிக்கப்பட முடியும் எனக் குறிப்பிடப்படுவதுடன், உதவி பணிப்பாளர் சேவையில் 06 வருட திருப்பதிகரமான சேவைக்காலத்தை பூர்த்தி செய்துள்ள, விஷேட செயலாற்றுதிறனை வெளிப்படுத்துவோர் 05 வருட சேவைக் காலத்தின் பின்னர் உளச்சார்ப்புப் பரீட்சைக்கு தோற்றியதன் பின்னர் இதில் தேற்றுவோர் பிரதி பணிப்பாளர் பதவிக்கு நியமிக்கப்பட முடியுமென குறிப்பிடப்படுகின்றது.

குறித்த நிலையத்தின் பணியாட் தொகுதியினர் 2011.07.01ஆம் திகதி முதல் நிரந்தர சேவைக்கு ஆட்சேர்க்கப்பட்டுள்ளதுடன், இதற்கு முன்னர் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றி உள்ளனர். இதன் பிரகாரம் இந்நிலையத்தின் உதவி பணிப்பாளர் பதவியை வகிப்பதற்காக விஷேட வினைத்திறனின் அடிப்படையில் உளச்சார்பு பரீட்சைக்கு தோற்றுவதற்குத் தேவையான தகைமையான 05 வருட சேவைக் காலத்தையேனும் இது வரையில் பூர்த்தி செய்யாத நிலையில் குறித்த பதவிக்கு நியமனத்தை மேற்கொள்வதற்கான இயலுமை இல்லை.

<u>பதவி – பிரத்தியேக உதவியாளர் - 01</u>

பிரத்தியேக உதவியாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பதற்காக பல தடவைகளில் பகிரங்க பத்திரிகை விளப்பரத்தின் ஊடாக விண்ணப்பங்கள் கோரப்பட்டபோதிலும், தகைமையுடைய ஒருவரை ஆட்சேர்ப்பதற்கு முடியவில்லை. இதன் பிரகாரம், இப்பதவிக்கான அங்கிகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையை திருத்தி, அங்கிகாரத்துக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்துக்கு சமர்ப்பித்துள்ளபோதிலும், இதுவரையில் அதற்கான அங்கிகாரம் கிடைக்கப்பெறவில்லை.

<u>புதவி- மொழி பெயர்ப்பாளர் - 02</u>

இப்பதவிக்கு பல தடவைகளில் பகிரங்க பத்திரிகை விளப்பத்தின் ஊடாக விண்ணப்பங்கள் கோரப்பட்டபோதிலும், தகைமையுடைய ஒருவரை ஆட்சேர்ப்பதற்கு முடியவில்லை.

<u>பதவி – தொடர்பாடல் தொழிநுட்பவியலாளர்-3</u>

இப்பதவிக்கு ஆட்சேர்ப்பதற்காக பல தடவைகளில் பகிரங்க பத்திரிகை விளப்பத்தின் ஊடாக விண்ணப்பங்கள் கோரப்பட்டபோதிலும், தகைமையுடைய ஒருவரை ஆட்சேர்ப்பதற்கு முடியவில்லை. எனவே, இப்பதவிக்கான ஆட்சேர்ப்பு நடைமுறையின் குறித்த தகைமைகளை திருத்தி, அங்கிகாரத்துக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்துக்கு சமர்ப்பித்துள்ளபோதிலும், இதுவரையில் அதற்கான அங்கிகாரம் கிடைக்கப்பெறவில்லை.

(ஆ) அனர்த்த தடுப்புப் பிரிவின் பணிப்பாளர் (கருமமாற்றல்)எனக் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், இது பணிப்பாளர் பணிப்பாளர ˙(தடுப்பு மற்றும் ஆராய்ச்சி) என திருத்தப்படுதல் வேண்டியதுடன்,

இத்திருத்தங்களுக்கு உட்பட்டு குறித்த பதிலை அறிக்கையிடுகின்றேன் என்பதை அறியத்தருகின்றேன்.

<u>பிரதி பணிப்பாளர் பதவி</u>

பிரதி பணிப்பாளர் (தடுத்தல்) பிரதி பணிப்பாளர் (ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி) பதவி வெற்றிடமாகியுள்ளது. நிலையத்தின் சகல பிரதி பணிப்பாளர் பதவிகளும் ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் உள்ளக பதவியுயர்வுகளின் மூலம் மாத்திரம் நியமிக்கப்படுவதுடன், இதன் பிரகாரம், தற்போது சேவையில் உள்ள உதவி பணிப்பாளர்கள் அங்கு குறிப்பிடப்பட்டுள்ள சேவைக் காலத்தைப் பூரணப்படுத்தாமையால் தொடர்ச்சியாக வெற்றிடமாகக் காணப்படுகின்றது. ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் அந்த வெற்றிடத்தை 2011ஆம் ஆண்டு ஜூலி மாதம் முதலாம் திகதி வரையில் நிரப்புவதற்கு முடியவில்லை.

<u>உதவி பணிப்பாளர் (தணித்தல்)</u>

உதவி பணிப்பாளர் (தணித்தல்) சேவையில் பணியாற்றிய உத்தியோகத்தர் பணிப்பாளர் பதவிக்கு நியமிக்கப்பட்டதன் காரணமாக குறித்த பதவி வெறிதாகியது. வெற்றிடமாகக் காணப்படும் குறித்த பதவிக்கு ஆட்சேர்ப்பதற்காக பிரபல்யமான பத்திரிகைகள் ஊடாக விண்ணப்பங்கள் கோரப்பட்டு 2015.06.26ஆம் திகதி நேர்முகப்பரீட்சை நடத்தப்பட்டது. நேர்முகப்பரீட்சைக்காக நான்கு விண்ணப்பதாரிகள் அழைக்கப்பட்டபோதிலும் ஒருவர் மாத்திரமே சமூகமளித்தார். குறித்த விண்ணப்பதாரியும் பதவிக்கான அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்தி செய்யாத காரணத்தினால் குறித்த நியமனத்தை வழங்க முடியவில்லை என்பதை அறியத்தருகின்றேன்.

<u>தொழிநுட்ப உத்தியோகத்தர்கள்</u>

குறித்த உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பதற்கு நிலவுகின்ற பதவியணியில் வாய்ப்பில்லை என்பதுடன், இதற்காக நிலையத்தின் பணியாட்தொகுதியின் அளவை அதிகரிப்பதற்குத் தேவையான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதனால் எதிர்காலத்தில் குறித்த உத்தியோகத்தர்களை ஆட்சேர்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

5. கணக்கு நடவடிக்கைகள் மற்றும் நல்லாட்சி

5.1 அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் சட்டத்தை தாபித்தல்

இதுவரையில் சட்டமூலத்துக்கான அங்கிகாரம் கிடைக்கப்பெறவில்லை என்பதை அறியத்தருகின்றேன்.

5.2 தேசிய அவசர நடவடிக்கை திட்டம்

தேசிய அவசர திட்ட சட்டமூலத்தில் உள்ளடங்க வேண்டிய விடயங்களில் காணப்படும் குறைபாடுகள் காரணமாக மீண்டும் இது குறித்த சட்டமூலத்தை வரைவதற்காக பணிப்பாளர் நாயகத்தின் ஆலோசனையின்பேரில் முன்னாள் அமைச்சின் செயலாளரது அங்கிகாரம்

பெற்றுக்கொள்ளப்பட்டது. இதன் பிரகாரம் 2014ஆம் ஆண்டு ஜுலி மாதம் தேவையான அவதானிப்புக்களையும் பிரேரணைகளையும் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேலும், சர்வதேச ஒத்திசைவுத் திட்டங்களிலிருந்து கருத்துக்களைப் பெற்றுக்கொள்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதன் பிரகாரம் சட்டமூலத்துக்கான தரவுகள் குறித்து மேலதிக பேச்சுவார்த்தைகள் அமைச்சரவை உத்தியோகத்தர்களின் பங்கேற்புடன் 2014 டிசெம்பர் மாதம் 19-21 வரையிலும், 2015.01.29ஆம் திகதியிலும் பதுள்ளையில் இடம்பெற்றது. பின்னர் 48 அரச நிறுவனங்களின் அவதானிப்புக்களைப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன், மீண்டும் 2015.04.08ஆம் திகதி சட்டமூலத்தை தயார் செய்வது தொடர்பிலான ஒரு செயலமர்வு நடத்தப்பட்டது. இதன் பிரகாரம் இறுதியாக, பங்கேற்ற சகல உத்தியோகத்தர்களதும் , 48 அரசாங்க நிறுவனங்களினதும் ஒத்துழைப்புடன் 2015.06.04 மற்றும் 25ஆம் திகதிகளில் செயலமர்வுகள் நடத்தப்பட்டு இறுதி சட்டமூலத்தை அமைச்சரவை அங்கிகாரத்துக்கு சமர்ப்பிப்பதற்காக மொழிபெயர்ப்புக்காக அனுப்பப்பட்டுள்ளது. இரு மொழிகளிலும் மொழிபெயர்ப்புக்கள் பூர்த்தி செய்யப்பட்டதும் அமைச்சரவை அங்கிகாரத்துக்கு முன்வைக்கப்படும்.

5.3 உள்ளகக் கணக்காய்வு

அனர்த்த முகாமைத்துவ நிலையமானது நாட்டின் 25 மாவட்டங்களிலும் தொழிற்படும் தேசிய மட்டத்திலான ஒரு நிறுவனமாகும். 25 மாவட்டங்களிலும் முன்ஆயத்த திட்டங்கள், அனர்த்த தணிக்கை கருத்திட்டங்கள், விழிப்புணர்வூட்டல் நடவடிக்கைகள், அவசர நடவடிக்கைகள் மற்றும் மனித வள மற்றும் நிதி முகாமைத்துவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்நடிவடிக்கைகளுக்காக திறைசேரியினால் வருடாந்தம் பாரிய ஒரு நிதித் தொகை ஒதுக்கீடு செய்யப்படுகின்றது.நிலையத்தினால் மேற்கொள்ளப்படும் அத்தகைய பரந்த நடவடிக்கைகள் காரணமாக இவற்றின் கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் கொள்ளளவை மேலும் அதிகரிக்க வேண்டும். மேலும், அரசாங்கத்துறையின் அனைத்து நிறுவனங்களிலும் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவுகளில் நிலவும் கொள்ளளவு போதுமானதாகக் காணப்படாமையினால் குறித்த பிரிவுகளுக்குத் தேவையான வளங்களை ஒதுக்கீடு செய்து குறித்த பிரிவுகளின் கொள்ளளவை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென COPE/7/1/2014 ஆம் இலக்க 2014ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 27ஆம் திகதி அனுப்பிவைக்கப்பட்டுள்ள அறிக்கையிலும் குறித்துரைக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் நிலையத்தின் பணியாட் தொகுதியரின் எண்ணிக்கை அதிகரிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், இதில் முன்வைக்கப்படும் திட்டத்துக்கமைய நிலையத்துக்கு பிரதம கணக்காய்வாளர், மேலுமொரு முகாமைத்துவ உதவி உத்தியோகத்தர் மற்றும் அலுவலக உதவியாளர் ஒருவர் உள்வாங்கப்படவுள்ளார்.

இதுவரையில் நிலவுகின்ற வளங்களைப் பயன்படுத்தி நிலையத்தின் உள்ளக கணக்காய்வுப் பிரிவானது மிகவும் சிறந்த ஒரு செயலாற்றுதிறனை வெளிக்காட்டியுள்ளதுடன், அமைச்சின் செயலாளரது பாராட்டினையும் பெற்றுக்கொண்டுள்ளது. எதிர்காலத்தில் இப்பிரிவின் கொள்ளளவு அதிகரிக்கப்பட்டதன் பின்னர் நிலையத்தின் அனைத்துப் பிரிவுகளும் உள்ளடங்கும் வகையில் கணக்காய்வு அலுவல்களை மேற்கொண்டு காணப்படுவதையும் விடச் சிறப்பான ஒரு செயலாற்றுதிறன் மட்டத்தை எய்துவதற்கான வாய்ப்புக் காணப்படுகின்றது.

6. தொகுதிகள் மற்றும் கட்டுப்பாடுகள்

அறிக்கையின் (அ),(ஆ),(இ),(ஈ),(உ),(ஊ) கீழ் குறிப்பிடப்படும் விடயங்கள் குறித்து கூடிய கவனம் செலுத்தி, நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதை அறியத்தருகின்றேன்.

மேஜர் ஜெனரல் எல்.பீ.ஆர்.மார்க் (ஓய்வு)
பணிப்பாளர் நாயகம்